Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு – 02 திருவள்ளுவர் ஆண்டு 2043 சித்திரை 02 சனிக்கிழமை (14.04.2012) பக்கங்கள் 20 ஓசை – 197

சீமாட்டி புடவைக்கடல்

அனைத்து ரக புடவைகளினதும் மொத்த சில்லறை வியாபாரிகள்

Dealers in Textiles & Fancy Goods

இல. 122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

தொ.இல - 0212228564, பக்ஸ் - 0212222102

(C/1408)
















# உடனடி அபிவிருத்திக்கு 5240 மில்லியன் தேவை

## யாழ். செயலகத்தின் உத்தேச மதிப்பீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தின் மீள்குடியேற்றம், வீடமைப்புத் திட்டங்கள், போன்றவற்றிற்காக சுமார் 5 ஆயிரத்து 240 மில்லியன் ரூபா நிதி தேவையென மாவட்டச் செயலகம் உத்தேச மதிப்பீடொன்றைச் செய்துள்ளதாகத் தெரிவித்திருக்கின்றது.

மாவட்டத்தின் மீள்குடியேற்றம், பொருளாதார மேம்பாடு, சமுக அபிவிருத்தி, விவசாயம், மீள்கட்டுமானம் போன்றவற்றிற்காகவே இந்த நிதி தேவைப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது. இதற்கமைய மீள்குடியமர்வு மற்றும் புனரமைப்பு வசதிகளுக்காக சுமார் 5 ஆயிரம் வீடுகளின் புனரமைப்பிற்கும், 2 ஆயிரம் வீடுகளின் பகுதியளவு சேதத்தைத் திருத்திக் கொள்வதற்கும் சுமார் 2 ஆயிரத்து 500 மில்லியன் ரூபா தேவை. விவசாயத்துறையின் கீழ் புனரமைக்கப்படவேண்டிய 33 சிறிய குளங்களின் புனரமைப்பிற்கு 65 மில்லியன் ரூபா நிதி தேவை, மீள் கட்டுமானத்தின் கீழ் ஆயிரத்து 665 மில்லியன் ரூபாவும், போதனா வைத்தியசாலையின் இருதய சத்திர சிகிச்சைப் பிரிவு மற்றும் கண்சத்திர சிகிச்சைப் பிரிவு, பொது சத்திர சிகிச்சைப் பிரிவு ஆகியவற்றின் புனரமைப்பிற்காக 900 ஆயிரம் மில்லியன் ரூபா தேவை. மேலும் நிர்வாகத்துறையின் கீழ் 110 மில்லியன் ரூபா நிதியும் தேவையாகவுள்ளதாகவும், இதற்கென அரசதுறை நிதி கிடையாதெனவும் மாவட்டச் செயலகம் தெரிவித்திருக்கின்றது.

## கைக்குண்டு வீச்சு

எம்பிலிப்பிட்டி, கல்மில்ல ஆர பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் 10 பேர் வரையில் காயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இக் கைக்குண்டு வீச்சு சம்பவம் நேற்று முன்தினம் இரவு வேளையில் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இதன்போது காயமடைந்த 9 பேர் எம்பிலிப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித ரோஹண தெரிவித்தார். காயமடைந்தவர்களில் 8 பேர் ஆண்கள் எனவும் இருவர் பெண்கள் எனவும் அவர் தெரிவித்தார். இச் சம்பவம் தொடர்பில் சந்தேக நபர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அஜித்ரோ ஹண மேலும் தெரிவித்தார்.

## மனநல சிகிச்சை மாவட்டங்கள் தோறும்

நாட்டின் சகல மாவட்டங்களிலும் மனநல சிகிச்சை நிலையங்கள் உருவாக்கப்பட உள்ளன. உளநிலை பாதிக்கப்பட்டவர்களை சமூகத்திலிருந்து ஒதுக்கி வைக்கும் மரபினை மாற்றியமைக்கும் நோக்கில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாக, சுகாதார அமைச்சின் மனநோய் பிரிவுப் பணிப்பாளர் டாக்டர் லக்ஷ்மி சோமதுங்க தெரிவித்துள்ளார். எதிர்வரும் ஜுன் மாதத்திற்கு முன்னதாக தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் மனநல சிகிச்சை நிலையங்கள் உருவாக்கப்பட உள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

## உயர் கல்விக்கு சர்வதேச அங்கீகாரம்

(கொழும்பு)

நாட்டிலுள்ள அநேகமான உயர்கல்வி நிறுவனங்களின் சான்றிதழ்களுக்கு சர்வதேச அங்கீகாரம் கிடையாது என உயர் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. தற்போது வழங்கப்படுகின்ற அரச மற்றும் தனியார் கல்வி நிறுவனங்களின் உயர் கல்வி சான்றிதழ்களை சர்வதேச தரமிக்கவையாக மாற்ற நடவடிக்கை எடுத்துள்ளதாக அமைச்சின் செயலாளர் பேராசிரியர் சுனில் ஜயந்த தெரிவித்துள்ளார். இதன் பொருட்டு அவுஸ்[illegible]லியாவின் ஒத்துழைப்பைப் [illegible]பெற்றுக்கொள்வதற்கான பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அந்த நாட்டிலுள்ள உயர்கல்வித்துறையில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள திட்டங்களை ஆராய்ந்து வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எதிர்காலத்தில் அவ்வாறான கல்வி முறைமைகளை இலங்கையிலும் அறிமுகப்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

# புங்குடுதீவில் 3 இந்தியர்கள் கைது

(வேலணை)

புங்குடுதீவுப் பகுதியில் நேற்று முன்தினம் இந்தியாவைச் சேர்ந்த மூவர் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் புங்குடுதீவுப் பகுதி கடற்கரை ஓரத்தில் சந்தேகத்திற்கிடமாக நடமாடித்திரிந்த வேளையில் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர். இவர்களில் ஒருவரிடம் பாஸ்போட் இருந்தமையினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார். மற்றும் இருவர் தகுந்த ஆவணங்கள் அற்ற நிலையில் புங்குடுதீவுக் கடற்படையினரால் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர். இவர்கள் ஊர்காவற்றுறைப் பொலிஸாரினால் நேற்றைய தினம் ஊர்காவற்றுறை நீதிமன்ற நீதிபதியின் இல்லத்தில் ஒப்படைக்கப்பட்டதாகத் தெரியவருகின்றது.

இவர்கள் ஓமந்தைப் பகுதியில் இந்திய நிறுவனத்தின் றெயில்வே வேலைத்திட்ட வேலை

19 ஆம் பக்கம் பார்க்க

## இங்கு வந்தால் உண்மை புரியும்

(கொழும்பு)

இலங்கையில் என்ன நடக்கிறது என் பதை இந்தியக்குழு இங்கு வந்தால் நேரடியாகவே அறிந்துகொள்ளலாம் என்று அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்திய அனைத்துக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வது தற்போதைய காலகட்டத்தில் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாக அமைந்துள்ளதாக மகிந்த சமரசிங்க

19 ஆம் பக்கம் பார்க்க

## தீயில் கருகி இளைஞர் மரணம்

(யாழ்ப்பாணம்)

மண்ணெண்ணெய் விளக்கில் இருந்து மூண்ட தீயில் எரியுண்டு இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார். நாவாந்துறை சூரிய வெளிப்பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. அதே இடத்தைச் சேர்ந்த யுவராஜா வெனோஜன் (வயது-21) என்ற இளைஞரே இரவு நித்திரையில் இருக்கும்போது லாம்பு தட்டப்பட்டு பாயில் தீ மூண்டதனால் இவர் தீயில் கருகி பெரும் காயங்களுக்கு உள்ளானார். இவர் கடந்த 7 நாட்களாக யாழ். போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றுவந்தார். தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டும், சிகிச்சை பயனின்றி நேற்று முன்தினம் நள்ளிரவு இரண்டு மணிக்கு உயிரிழந்தார். சடலம் யாழ். போதனா வைத்தியசாலை பிரேத அறையில் நேற்று வைக்கப்பட்டிருந்தது.(எஸ்)

# சர்ச்சையில் சிக்கியுள்ள இந்தியக் குழு

(புதுடில்லி)


இந்தியாவின் அனைத்துக் கட்சி குழு கொழும்புக்கு விஜயம் செய்யும் விடயம் பலத்த சர்ச்சையில் சிக்கியுள்ளது. இந்த குழுவில் இடம்பெறமாட்டோம் என, திடீரென அ.தி.மு.க. அறிவித்தது. இது டில்லி அரசியல் வட்டாரங்களில், புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த முடிவு முக்கிய கட்சிகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியதால், இலங்கைக்கு அனைத்துக் கட்சி குழுவை அனுப்பும் முடிவில் மாற்றம் நிகழலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

அத்துடன் இக்குழுவினரின் இலங்கை விஜயத்திற்கான நிகழ்ச்சி நிரல் குறித்தும் பல்வேறு அரசியல் கட்சிகள் மட்டத்தில் கடும் விமர்சனங்களும் வாதப் பிரதிவாதங்களும் ஏற்கனவே எழுந்துள்ளன.

போருக்குப் பிந்திய சூழ்நிலைகள் குறித்து அறிந்து வருவதற்காக, அனைத்துக்கட்சி குழுவை அனுப்ப இந்திய அரசு அண்மையில் முடிவு எடுத்திருந்தது. இதன்படி, நாடாளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர் சுஸ்மா சுவராஜ் தலைமையிலான 15 பேர் கொண்ட குழு வரும் 16 ஆம் திகதி இலங்கை செல்வதற்குத் திட்டமிடப்பட்டது. இந்தக் குழு அமைக்கப்பட்டதிலேயே பல்வேறு குழப்பங்கள் இருப்பதாக கூறப்படுகிறது. குழுவில் யார், யார் இடம்பெறுவர் என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டது. அதிகாரபூர்வமாக பெயர்கள் வெளியிடப்படா விட்டாலும், கடந்த வாரமே சில பெயர் விவரங்கள் கசிந்தன.


நாடாளுமன்ற உறுப்பினர் ரபி பெர்னார்ட் பெயரை முன்மொழிந்திருந்த தமிழ

19 ஆம் பக்கம் பார்க்க



ஆரவாரம் அதிகம் இல்லாமல் அமைதியாகக் கழிந்தது நேற்றைய புத்தாண்டுக் கொண்டாட்டங்கள். (படம் - குலசிங்கம்)

# சாந்தை கிராமத்துக்கு மின்சாரம் கிடைப்பது எப்போது?



(யாழ்ப்பாணம்)


வலி.தென்மேற்கு சாந்தைக் கிராமத்துக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

சுமார் ஆறு மாதங்களுக்கு முன்பு இப்பகுதிக்கு மின் விநியோகத்திற்கென 68 மின் தூண்கள் நாட்டுவதற்கான கிடங்குகள் வெட்டப்பட்டது. அதன் பின்னர் எந்தவிதமான செயற்பாடுகளும் முன்னெடுக்கப்படவில்லை.

இதனால் அப்பகுதி மக்கள் இருளில் பெரிதும் கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர். தற்போதைய எரிபொருள் விலையேற்றத்தால் அவர்கள் மேலும் பொருளாதார ரீதியாகவும் பாதிப்புக்கு உள்ளாகி உள்ளனர்.

இவ்விடயம் குறித்து விநாயகர் சனசமூக நிலையத்தின் செயலாளர் த.தர்மகுலசிங்கம், வலி.தென்மேற்கு பிரதேசசபை எதிர்க்கட்சித் தலைவரும், மானிப்பாய் பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளருமான வெலிச்சோர்அன்ரன் ஜோன்சனிடம் (ஜீவா) முறையிட்டுள்ளார்.

அவற்றினைக் கேட்டறிந்து கொண்ட அவர், இது குறித்து தான் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத்தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மு.சந்திரகுமார் ஆகியோரின் கவனத்திற்குக் கொண்டு சென்று உரிய தீர்வினைப் பெற்றுத் தருவதாக உறுதியளித்துள்ளார். (54)



புதுவருட தினமான நேற்று தாவடி ஸ்ரீ அம்பலவான வேத விநாயகர் ஆலயத்தில் இடம்பெற்ற தேர்த்திருவிழாவின்போது சுவாமி எழுந்தருளி வருவதைக் காணலாம். (137)

# புத்தாண்டு விழா கோண்டாவிலில் இன்று

(நல்லூர்)

நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் அனுசரணையுடன் கோண்டாவில் பிரதேசத்திலுள்ள ஆறு கிராம அலுவலர் பிரிவினரும் இணைந்து நடத்தும் மாபெரும் சித்திரைப் புத்தாண்டு விழா இன்று நடைபெறவுள்ளது.

இப்பெருவிழாவில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டி, கலை நிகழ்வுகள் என இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளன.

இன்று காலை 9.00 மணி முதல் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன. இப்பாரம்பரிய விளையாட்டுக்களில் போர்த் தேங்காய் உடைத்தல், தலையணைச் சண்டை, முட்டியுடைத்தல், சாக்கு ஓட்டம், மெதுவாக துவிச்சக்கர வண்டி ஓட்டுதல், கயிறு இழுத்தல் முதலான விளையாட்டுக்கள் நடைபெறவுள்ளன.

மாலை 3.00 மணிக்கு கலை நிகழ்வுகள் நடைபெறும். வரவேற்பு நடனம், நாட்டியாஞ்சலி, மீண்டும் புதிதாய் கவியரங்கம் என்பன நடைபெறும்.

இறப்புப் பிறப்புப் பதிவாளர் திருமதி வ.சோமசூரியசிங்கம் தலைமையில் நடைபெறும் இப்புத்தாண்டு விழாவிற்கு பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாரும், சிறப்பு விருந்தினராக நல்லூர் பிரதேச செயலர் பா.செந்தில் நந்தனன், கௌரவ விருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரி இணைப்பாளர் பா.தனபாலன், கோண்டாவில் இந்து மகாவித்தியாலய அதிபர் சு.சண்முககுமார் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

தொடர்ந்து ஆசியுரையினை சிவஸ்ரீ ச.ஸ்ரீஸ்கந்தராசக் குருக்களும், நன்றியுரையினை ஜே/116 கிராம அலுவலர் திருமதி கு.பிரதாபராஜன் ஆகியோரும் ஆற்றவுள்ளனர். (06)

# கரவெட்டியில் விபத்து இருவர் பலத்த காயம்



(கரணவாய்)

சித்திரைப் புது வருடமான நேற்றுக் கரவெட்டி விக்னேஸ்வரா பாடசாலைக்கு அருகாமையில் சபாரி மோட்டார் சைக்கிளில் வந்து கொண்டிருந்த மத்தனி கரவெட்டி மேற்கைச் சேர்ந்த கந்தசாமி தர்சினியும், உடுப்பிட்டிப் பகுதியைச் சேர்ந்த அன்ரன் டொமினிக்கும் நேருக்கு நேர் மோதுண்டதில் பலத்த காயத்துடன் தர்சினியும் டொமினிக்கும் மந்திகை அரசினர் வைத்தியசாலைக்கு உடனடியாக எடுத்துச் செல்லப்பட்டனர்.

சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு உடனடியாக விரைந்த நெல்லியடிப் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டனர்.

பொலிஸார் இரண்டு மோட்டார் சைக்கிளையும் பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்றனர். (180)

## சிறுவனைத் தீண்டியது நாகபாம்பு

(யாழ்ப்பாணம்)

நாகபாம்பு தீண்டிய சிறுவன் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிகப்பட்டுள்ளார்.

நுணாவில் மேற்குப் பகுதியில் நேற்றுக்காலை 8.45 மணியளவில் வயலுக்கு மாடு கட்டச் சென்ற வேளையில் வயலில் சேமித்து வைக்கப்பட்ட வைக்கோல் கற்றையில் இருந்த நாகபாம்பு தீண்டியுள்ளது.

அதேஇடத்தைச் சேர்ந்த இராஜேஸ்வரன் திலக்ஷன் (வயது-15) என்ற சிறுவனே சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (எஸ்)

## சைக்கிள் திருடியவர் பொலிஸாரால் கைது

யாழ்.கொமர்ஷல் வங்கிக்கு முன்பாக நின்ற சைக்கிளைத் திருடி விற்பனை செய்ய முற்பட்ட இளைஞரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

புதுவருடப் பிறப்பிற்கு உடுபுடவைகள் வாங்குவதற்காக வங்கியில் பணம் எடுக்க வந்த நபர் ஒருவரின் சைக்கிளை குருநகர் ஐந்து மாடியைச் சேர்ந்த இளைஞர் திருடிச் சென்றுள்ளார்.

இவர் தற்பொழுது பொலிஸாரினால் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார். இவரை நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ்.நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (எஸ்)


## சிறு விளம்பரங்கள்

### டயானா பிளாஸ்ரிக் தொழிலகம்

சகல விதமான மோட்டார் சைக்கிள், வாகனங்கள் என்பவற்றின் உடைந்த பிளாஸ்ரிக் பொருட்கள் உத்தரவாதத்துடன் ஒட்டித்தரப்படும். உற்பத்திகளும் உண்டு.

கனகசபை லேன், சிவலிங்கப்புளியடி, யாழ்ப்பாணம். Tel - 021 222 8680, 0775925088(C/1350)

அனைவருக்கும் இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

**sinthu Electricals**

Electronics Electricals & Hardware Items



(C/1439)

360/7, Main Street, Jaffna.

அனைவருக்கும் புதுவருட நல்வாழ்த்துக்கள்

**சிவா மோட்டோர்ஸ்**

சகலவிதமான ஆட்டோ உதிரிப்பாகங்களையும் நியாய விலையில் கொள்வனவு செய்திட நாடவேண்டிய இடம்



Siva Motors
486-A கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 0778736770
0779113962 (C/1186)

அனைவருக்கும் எமதினிய நல்வாழ்த்துக்கள்

உங்களின் மங்களகரமான நிகழ்வுகளுக்கு முத்துச் சப்பரம், அன்னச் சோடனை மற்றும் இதர சோடனைகளுக்கு நாடுங்கள்

**அனுஷா பந்தல் சேவை**

கே.கே.எஸ் வீதி, இணுவில்.
0779789467

(C/1436)

அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

**MICRO ELECTRICALS**

Electricals Goods, Electricals Fittings & Accessories
என்பனவற்றைப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்



Micro Electricals (C/1437)

168, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

நல்ல குறிக்கோளை அடைவதற்காகத் தொடர்ந்து முயலும் மனிதனின் செயல்பாடே பிற்காலத்தில் அனைவரும் படிக்கும் வரலாறாக மாறுகிறது. -கார்ல் மார்க்ஸ்

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU

இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212221811
thinamurasu@live.com

## மக்களின் உயிர்களை வைத்துச் சூதாட்டம்!

"தமிழ் மக்களிடம் கோபம் இருக்கிறது. மனதில் வெஞ்சினம் இருக்கிறது. எனவே இன்னொரு ஆயுதப் போராட்டம் எழுவதற்கான சகல ஊற்றுகளும் அங்கிருக்கின்றன..." இவ்வாறு பிரபல புலம்பெயர் புத்திஜீவியும் இலக்கியவாதியுமாக அறியப்படும் ஒருவர், சமீபத்தில் தமிழகத்தில் வழங்கிய ஒரு பேட்டியில் சொலலியிருக்கிறார்.

இவர் மட்டும் என்றில்லை, இங்கே மக்களின் பாடுகளைக் களைப்பை அன்றாட வாழ்வுத் தேவைகளை ஏக்கங்களை அறியாமல் வெளிநாடுகளில் நல்ல வாழ்நிலையிலிருக்கும் புத்திஜீவிகள், கலைஞர்கள், ஊடகக்காரர்கள் பலரும், இத்தகைய வீரவசனங்களைப் பேசிக்கொண்டும் ஆர்ப்பாட்டங்களை நடத்திக் கொண்டுமிருப்பதைப் பார்க்கிறோம்.

இங்குள்ள வசதிபடைத்த ஒருசில தமிழர்களும், "நமது மக்கள் சாவதற்கு இன்னும் தயாராகவே இருக்கிறார்கள்" என்று, அடுத்த ரோசப் போர் ஒன்றைத் தொடங்கிவிட்டுப் பாதுகாப்பாய் வெளிநாடுகளுக்கு ஓடிக் கண்டுகளிக்கும் ஆவலோடும் திட்டத்தோடும் ஒத்தூதிக் கொண்டிருக்கிறார்கள்.

இங்குள்ள தமிழர்கள், போராட்ட எண்ணத்தை, சிங்களவர்களைப் பழிக்குப் பழி வாங்கும் எண்ணத்தை மறந்துவிடக் கூடாது என்கிற பதற்றமும், எங்கே தமிழ் ரோசத்தை நிலைநாட்டுவதற்காக மேலும் மேலும் சாவதற்குத் தயக்கம் கொண்டுவிடுவார்களோ... மறுக்கும் நிலைக்குப் போய்விடுவார்களோ என்ற பதகளிப்பிலும், வெறுப்பும் வீம்பும் வற்றிவிடாமலிருக்க உசாரேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

"தற்போது போருக்குப் பின்னால் சில பகுதிகளில் தமிழ் மக்கள் குடியேறினாலும், இன்னும் பலபகுதிகள் உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளாகத்தான் நீடிக்கின்றன. இப்படி தமிழர்களின் பாரம்பரியமான நிலம் பறிக்கப்பட்டிருப்பதை எப்படி எதிர்கொள்ளப் போகிறோம் என்பது இலங்கையில் வசிக்கும் தமிழர்களுக்கும், புலம் பெயர்ந்த தமிழர்களுக்கும் முன்புள்ள கடுமையான சவால்..." என்றும் அறிவுஜீவிக் கவலை தொனிக்க அந்தப் பேட்டியில் அவர் சொல்கிறார்.

முன்பு பாதுகாப்பு வலயங்களாக இருந்த பல பகுதிகளில் மக்கள் மீளப் போய்க் குடியேறிவிட்டது அவருக்குத் திருப்தியில்லை. மீள்குடியேற்றப்படாமலிருந்தால்தான் உணர்ச்சிகர அரசியலுக்கு நல்லது என்ற அவரது குரூர ஆவலாதியை அவரால் மறைக்க முடியவில்லை. இன்னமும் விடுவிக்கப்படாமலிருக்கும் பாதுகாப்பு வலயப் பகுதிகளுக்காக, திரும்பவும் ஆயுதப் போராட்டம் ஒன்றை மெல்ல மெல்லக் கட்டியெழுப்புவதே வழி என்ற தனது உள்விருப்பத்தை ஏதோ ஆராய்ச்சி முடிவை வெளியிடுவது போல பெருமிதத்துடன் வெளியிடுகிறார்.

"பொதுவாக இப்போதைக்கு ஜனநாயக ரீதியான அரசியலை முன்னெடுக்க வேண்டும் என்றுதான் அனைவரும் சொல்கிறார்கள். இப்போதைக்கு ஆயுதரீதியான போராட்டத்தை முன்னெடுப்போம் என்று யாரும் சொல்லவில்லை. அவர்களுடைய விருப்பமாக அது இருந்தாலும் அதை வெளிப்படையாக தற்போதுள்ள சூழலில் அவர்களால் சொல்ல முடிவதில்லை..." என்று தமிழ்நாட்டுக்காரர்களுக்கு, மீண்டும் சிங்கள – தமிழ்ச் சாவு எண்ணிக்கைகளைக் கணக்கிடும் போராட்டம் வரும் நிச்சயம் என்று நம்பிக்கையளிக்கிறார்.

இதேவகையான புத்திபூர்வமற்ற வெறும் உணர்ச்சிகர பொறுப்பற்ற ரோசப் பேச்சுக்களால் மக்களை இவ்வளவு பாடழிவுக்குக் கொண்டுபோய் விட்டது பற்றிக் குற்ற உணர்வோ சுயவிமாசனமோ இல்லாமல் மீண்டும் அழிவுக்குரிய பேச்சுக்களை அதே "தமிழ்வீரத் தாளத்தில்" பேசுவதை நமது வெளிநாட்டுப் புத்திஜீவிகள்(?) நிறுத்துவதாயில்லை. மக்களுக்கு மீண்டும் சுமத்தப்போகும் அவலங்களைப் பற்றியும் அவர்களுக்குக் கவலையில்லை. அவர்கள் திருப்தியுடையும்படியாக, எத்தனை பேர் செத்தாவது சிங்களவனுக்குப் பாடம் படிப்பித்தால் சரி! - ஆசிரியர் -

# புல்லுக்குள திறந்த வெளியரங்கில் பேருந்து நிலையம் அமைக்கத் திட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். புல்லுக்குளத்திற்கு முன்பாக உள்ள திறந்தவெளியரங்கில் தனியார் மினிபஸ் தரிப்பிடம் அமைப்பதில் சாதக பாதக நிலைகள் குறித்து தனியார் போக்குவரத்துச் சபையினருடன் பேசி அது குறித்து யாழ். மாநகர சபையின் அங்கீகாரம் பெறப்பட்டதன் பின்னரே நடவடிக்கை எடுக்கத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

யாழ். மாநகர சபையின் மூன்றாவது மாதாந்த பொதுக் கூட்டத்திலேயே இவ்வாறு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து குறித்த பகுதியில் எடுத்த எடுப்பில் தனியார் மினிபஸ் தரிப்பிடத்தை அமைக்காது அதன் சாதக பாதக தன்மை குறித்து தனியார் போக்குவரத்துச் சபையினருடன கலந்துரையாடி அமைத்தால் அது ஒரு பயனுள்ள திட்டமாக அமையுமென யாழ். மாநகர சபை துணை முதல்வர் ரமீஸ் யாழ்.மாநகர முதல்வரின் கவனத்திற்கு சபையில் கொண்டு வந்தார்.

இதனை சபை ஏற்றுக் கொண்டதனை அடுத்து எதிர் வரும் 4 ஆவது மாதாந்தப் பொதுக்கூட்டத்தில் இவ்விடயம் குறித்துப் பரிசீலிக்கப்பட்டு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படவுள்ளது.

இதனைச் சபை ஆராய்ந்து திட்டத்தை நடைமுறைப்படுத்துவதா? இல்லையா என்பது குறித்து தீர்மானிக்கும் என்று யாழ். மாநகரசபை முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தெரிவித்துள்ளார்.

தற்சமயம் யாழ். நகரில் மின்சார நிலைய வீதியில் தனியார் மினிபஸ்கள் நிறுத்தப்பட்டு பயணிகள் ஏற்றப்படுவதனால் அப்பகுதியில் போக்குவரத்து நெருக்கடி ஏற்படுவதுடன் பொது மக்களும் மிகுந்த சிரமங்களை எதிர் நோக்கியுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (பா)

## பிரதேச பணியாளர்களுக்கு சீருடைத்துணி விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.செயலக, பிரதேச செயலக பணியாளர்களுக்கு சீருடைத்துணி விநியோகிக்கப்பட்டு வருவதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

புதுவருடத்திலிருந்து பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சின் கீழ் தொழிற்படும் இவ் அரச ஊழியர்கள் சீருடையுடன் கடமைக்கு சமுகம் கொடுக்க வேண்டும் என்பதன் நோக்கில் இச் சீருடைத்துணி விநியோகிக்கப்பட்டு வருவதாக யாழ்.செயலக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இவ்வாறு பெண்களுக்கு ஒரு சோடி நீலநிற சாறிக்கான துணியும் ஆண்களுக்கு ஒரு சோடி சேட்டிற்கான வெள்ளை நிறத்துணியும் ஒரு சோடி நீளக்காற்சட்டைக்கான கறுப்பு நிறத்துணியும் விநியோகிக்கப்பட்டு வருவதாகவும் தெரியவருகின்றது. எனினும் உயர் பதவிகளில் உள்ள அதிகாரிகளுக்கான சீருடை குறித்து தகவல்கள எதுவும் வெளியாகவில்லை. (பா)

## சாவகச்சேரி – கேரதீவு வீதி பேருந்து சேவையை ஆரம்பிக்கவும்

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக நிறுத்தப்பட்டிருந்த சாவகச்சேரி - கேரதீவு மார்க்கமாக பேருந்து சேவையை மீண்டும் ஆரம்பிக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

தனங்கிளப்பு தொடக்கம் கேரதீவு வரையான பகுதிகளில பெருமளவு மக்கள் மீள்குடியமர்ந்துள்ளதால் இப்பிரதேசத்தினூடான போக்குவரத்து சேவை அவசியம் தேவையாகவுள்ளதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். (11)

## திருட்டில் ஈடுபட்ட இருவருக்கு விளக்கமறியல்

(யாழ்ப்பாணம்)

கொட்டடிப்பகுதியில் அண்மையில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகத்தின் பேரில் யாழ். பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட இரு இளைஞர்களையும் எதிர்வரும் 18 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

குறித்த இரு இளைஞர்களும் திருட்டு நடைபெற்ற வீட்டின் பின்பக்கத்தில் கொட்டகை அமைக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளார்கள்.

இவர்கள்தான் இத்திருட்டுச் சம்பவத்தைப் புரிந்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் இவர்கள் இருவரையும் யாழ்.பொலிஸார் கைது செய்து நேற்று முன்தினம யாழ்.நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியுள்ளனர்.

இதன் போதே யாழ்.நீதவான் நீதிமன்ற நீதிபதி இருவரையும் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (எஸ்)

## தப்பியோடிய கைதிக்கு 6 மாத சிறைத்தண்டனை

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டிருந்தபோது தப்பியோடிய யாழ். சிறைச்சாலைக் கைதிக்கு யாழ். நீதவான் நீதிமன்றம் ஆறு மாதங்கள் சிறைத் தண்டனை வழங்கியுள்ளது.

கடந்த புதன்கிழமை இவர் மீது சுமத்தப்பட்டிருந்த குற்றத்தினை விசாரணை செய்த யாழ். நீதவான் நீதிமன்ற நீதிபதி மா.கணேசராசா குறித்த நபரிற்கு ஆறுமாத சிறைத்தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார்.

யாழ். சிறைச்சாலையில் துவிச்சக்கரவண்டித் திருட்டுக் குற்றத்திற்காக மானிப்பாய் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு இவர் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்.

அதன் பின்னர் சுகவீனமுற்றிருந்த இவரை யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்கு சிறைக்காவலர்கள் அனுமதித்திருந்த வேளையே அவர் தப்பியோடிய நிலையில் நான்கு நாட்களின் பின்னர் கடந்த மூன்றாம் திகதி கொக்குவில் - உப்புமடம் பகுதியில் நடமாடுவதாகக் கிடைத்த தகவலை அடுத்து' அவர் சிறைக்காவலர்களால் கைது செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (பா)

## தீயில் வீழ்த்தியது "வலி"

(யாழ்ப்பாணம்)

வலி. நோய் ஏற்பட்டுள்ள வேளை நெருப்பில் விழுந்து கைகள் இரண்டு எரியுண்ட நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் பெண் ஒருவர் சிகிச்சை பெற்று வருகின்றார். காரைநகர்-மாப்பாண ஊரி என்னுமிடத்தில் கடந்த 18 நாட்களுக்கு முன்னர் வலி ஏற்பட்ட வேளை நெருப்பில விழுந்த நடராசா கௌசிகா (வயது - 22) என்ற பெண் காரைநகர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார். இவர் தற்போது யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பெற்று வருகின்றார். (எஸ்)

## 400 முன்பள்ளி சிறார்களுக்கு சத்துணவு வழங்கும் திட்டம்

(சாவகச்சேரி)

பச்சிலைப்பள்ளி அபிவிருத்திப் பேரவையினர் பச்சிலைப்பள்ளி பிரதேசத்தில் உள்ள 22 முன்பள்ளிகளைச் சேர்ந்த 400 இற்கும் மேற்பட்ட சிறார் களுக்கு தினமும் சத்துணவு வழங்கும் திட்டத்தை எதிர்வரும் 23 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கவுள்ளனர்.

லண்டனில் உள்ள பச்சிலைப்பள்ளி அபிவிருத்திச் சங்கத்தின் அனுசரணையுடன் தினமொரு சத்துணவு வழங்கும் இத்திட்டத்தை சிறந்த முறையில் மேற்கொள்ளவென இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர் ப.அரியரெத்தினம் தலைமையில் 9 அங்கத்தவர்களைக் கொண்டு மத்திய கண்காணிப்பு ஆலோசனைக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் சிறப்பு சத்துணவுகளை கொள்வனவு செய்து விநியோகிக்க பச்சிலைப்பள்ளி பல.நோ.கூ.சங்க தலைவர் செ.மார்க்கண்டு தலைமையில் 6 பேரைக்கொண்ட குழுவினர் அமைக்கப்பட்டுள்ளதாக பேரவைத்தலைவர் க.சண்முகதாஸ் தெரிவித்தார். (11)

## விபரம் திரட்டல்

(வேலணை)

யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களத்தின் அதிகாரத்துக்குள் இருந்து வருகின்ற பிரதேச சபைகள் நகர சபை ஆகியவற்றின் எல்லைப் பரப்புக்குள் மலக்கழிவு அகற்றல் தொடர்பான விபரங்களை தயாரித்து தனக்கு அனுப்பி வைக்குமாறு சகல உள்ளூராட்சி சபைகளையும் யாழ்.மாவட்ட பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் செ.பிரணவநாதன் கேட்டுக்கொண்டுள்ளார். (05)

# வறிய மக்களுக்கு பணி செய்வது எமது கடமை

## ஈ.பி.டி.பி.யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின்


(யாழ்ப்பாணம்)

பின்தங்கிய பிரதேசங்கள் எங்கெல்லாம் உள்ளதோ வறுமைக் கோட்டிற்குள் உட்பட்ட மக்கள் எங்கு வாழ்கின்றார்களோ அங்கு எமது பணிகள் தொடரும் என ஈ.பி.டி.பி.யின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலென்ரின் (உதயன்) தெரிவித்துள்ளார்.

வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை) பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட விவசாயிகளுக்கான தெளிகருவிகள் வழங்கும் நிகழ்வு அண்மையில் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் பிரதேச செயலாளர் ஜெயசீலன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், விவசாயிகளது நலனில் அக்கறை கொண்டவர்களாக நாங்கள் கமநல மற்றும் விவசாயத் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம். கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் நாம் வாக்குறுதியளித்ததற்கு அமைய விவசாய உபகரணங்களை வழங்கி வருகின்றோம்.

விவசாயிகள் தற்போது எதிர் கொள்கின்ற எரிபொருள் பிரச்சினைக்குத் தீர்வினை வழங்கும் நோக்கில் மானிய அடிப்படையில் எரிபொருளை வழங்க அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஊடாக நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம். இதேபோல கடற்தொழிலாளர்களுக்கு தற்போது மானிய அடிப்படையில் எரிபொருள வழங்கப்பட்டு வருகின்றது.



எமது மக்களுக்கான தேவைகளை இனங்கண்டு நிறைவேற்றுவதுடன் அந்தந்த பிரதேசங்களுக்கு என உறுதியளிக்கப்பட்ட உதவிகளை அந்தந்த பிரதேசங்களுக்கே வழங்குவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

இங்கு கருத்துரையினை ஈ.பி.டி.பி.யின் வடமராட்சிப் பிரதேச அமைப்பாளரும் பருத்தித்துறை பிரதேச சபை எதிர்க்கட்சித் தலைவருமான ஐ.சிறீரங்கேஸ்வரன் வழங்கினார்.

தொடர்ந்து விவசாயிகளுக்கான தெளிகருவிகளை நாடாளுமன்ற உறுப்பினர் உதயன் ஈ.பி.டி.பி. வடமராட்சி அமைப்பாளர் சிறீரங்கேஸ்வரன் உள்ளிட்ட அதிதிகள் வழங்கி வைத்தனர்.

இந்நிகழ்வில் ஈ.பி.டி.பி.யின் வல்வெட்டித்துறை பிரதேச இணைப்பாளரும் வல்வெட்டித்துறை நகரசபை எதிர்கட்சித் தலைவருமான தெய்வேந்திரம், வல்வெட்டித்துறை நகரசபை உறுப்பினர் கைலாஜினி இந்திரன், மக்கள் சபை உறுப்பினர் விசிந்தன் மற்றும் பயனாளிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

### அடிப்படை வசதிகள் பெற்றுத்தரவும்

ஊர்காவற்றுறை ஆதார வைத்தியசாலையில் அடிப்படை வசதிகளின்றி காணப்படுவதாக அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் வைத்தியசாலைக்கு சிகிச்சைக்குச் செல்லும் நோயாளர்கள் பெரும் அவலங்களைச் சந்தித்து வருகின்றது.

குடிநீர் மற்றும் மலசல கூடங்கள், வைத்தியசாலை உபகரணங்கள் போன்றவை போதியளவு இல்லாத நிலை காணப்படுகிறது. அங்கு கடமையாற்றுவதற்கு வைத்தியர்களோ, தாதியர்களோ விரும்புவதில்லை எனவும் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

எனவே தாம்படும் அவலங்களை நிவர்த்தி செய்வதற்கு சம்பந்தப்பட்டவர்கள் முன்வரவேண்டும் எனப் பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (எஸ்)

### எச்சரிக்கைக் கோபுரம் இயங்கவில்லை

வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் கட்டப்பட்டிருக்கும் சுனாமி எச்சரிக்கை கோபுரம் இயங்கவில்லை என அப்பகுதி மக்கள் ஆழியவளை கிராம அலுவலரிடம் தெரிவித்துள்ளனர்.

சுனாமி முன்னெச்சரிக்கை சமிக்கை கோபுரம் பல கோடி ரூபா செலவில் கட்டப்பட்டிருந்தது. சுமாத்திரா தீவில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் சுனாமி ஏற்படலாம் எனவும், இது இலங்கையில் ஏற்படலாம் எனவும் அறவிக்கப்பட்டது. இதனையடுத்து வடமராட்சி கரையோர மக்கள் பொது இடங்களில் தங்கியிருந்தனர். அது வரை இங்கிருந்த எச்சரிக்கை கோபுரம் செயற்படவில்லை. (116)

# கைவேலியில் 450 குடும்பங்களுக்கு பயன்தரு பழமரங்கள் வழங்கல்

(புதுக்குடியிருப்பு)

மீள்குடியேற்றம் செய்யப்பட்ட குடும்பங்களில் தெரிவு செய்யப்பட்ட 450 குடும்பங்களுக்கு டி.ஆர்.சி.நிறுவனத்தினால் பயன்தரு பழமரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு - கைவேலிக் கிராமத்தில் உள்ள மேற்படி நிறுவனத்தின் அலுவலகத்தில் வைத்து கடந்த புதன்கிழமை பயனாளிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

தேசி, கொய்யா மற்றும் விளாட், கறுத்தக்கொழும்பான் போன்ற பழவகை மரங்கள் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டன.

ஆயினும், தற்போதுள்ள வெப்பமான காலநிலையில் இவ்வாறான மரங்கள் நாட்டப்பட்டாலும் அவை மண்ணில் வேரோடித் தழைப்பது அரிது என்றும், முன் மாரி மழை ஆரம்பிக்கும் நேரங்களில் இப்படியான பழ மரவகைகளைத் தந்துதவினால் பிரயோசனமானதாக இருக்கும் என மக்களில் பலரும் அங்கு தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (138)

# பருத்தித்துறை இலங்கை வங்கி வடமராட்சியில் வாழ்வாதார மேம்பாடு

(பருத்தித்துறை)

இலங்கை வங்கியின் பருத்தித்துறைக் கிளையினால் வடக்கின் வசந்த இரண்டாவது திட்டத்தின் கீழ் வடமராட்சி கிழக்கு மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காகப் பல்வேறு கடன் திட்டங்கள் வழங்கப்படவுள்ளது.

இதன் முதற்கட்டமாக அம்பன் பகுதியைச் சேர்ந்த 25 பயனாளிகளுக்கு பசுமாடுகள் வளாப்புக்காக தலா ஒவ்வொருவருக்கும் இரண்டு இலட்சம் வழங்குவதற்கு ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அடுத்து வல்லிபுரக்குறிஞ்சி, நவீண்டில் பகுதி கிராம மக்களுக்கு சுயதொழில் கடன்திட்டம் முதற்கட்டமாகத் தெரிவு செய்யப்பட்ட 25 பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது.

இந்தத் திட்டங்கள் யாவும் இந்த வருட நடுப்பகுதியில் வழங்கப்படவுள்ளது. இதற்கான விண்ணப்பப் படிவங்கள் நிரப்பப்பட்டு வருகின்றன. (116)

### விற்பனைச் சந்தை

(முழங்காவில்)

பூநகரிப் பிரதேச செயலர் பிரிவில் பூநகரி வாடியடி கோட்டை மைதானத்தில் புத்தாண்டு 'திவிநெகும' விற்பனைச் சந்தை 11ஆம், 12ஆம் திகதிகளில் நடைபெற்றது.

பூநகரிப் பிரதேச செயலர் கே.எஸ்.வசந்தகுமார் விற்பனையை ஆரம்பித்து வைத்தார்.

இந்நிகழ்வில் பூநகரிப் பிரதேச செயலகத் திட்டமிடல் பணிப்பாளர், கிராம சேவை அலுவலர்கள, கமநல சேவை அலுவலர், கமக்கார அமைப்பினர் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

இவ்விற்பனைச் சந்தையில் பனை அபிவிருத்திப் பொருடகள, காய்கறி வகைகள் நெல், தேன் போன்ற பொருட்களும், புடைவைகளும் விற்ப்னை செய்யப்பட்டதுடன் பூநகரி ப.நோ.கூ.சங்கத்தினரும், மக்களின் அன்றாடப் பாவனைப் பொருட்களையும் விற்பனை செய்வதில் ஈடுபட்டிருந்தனர். (112)

### பஸ்ஸில் சறுக்கல்; பயணி காயம்

(யாழ்ப்பாணம்)

பஸ்ஸில் ஏறும்போது சறுக்கி விழுந்த இளைஞர் படுகாயமடைந்துள்ளார்.

கோண்டாவில் டிப்போவில் நேற்றுமுன்தினம் மாலை 5 மணியளவில் இவ்விபத்துச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இவ்விபத்தில் எஸ்.முகுந்தன் (வயது-30) என்ற இளைஞரே முகத்தில் படுகாயம் அடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைகாக அனுமதிக்கப்பட்டுள்ளார். ( எஸ்)

# வவுனியா வடக்கு வலயமட்ட தமிழ்த்தினப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

(தொடர்ச்சி...)

வவுனியா வடக்குக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களின் விபரம் வருமாறு:

**பிரிவு -V குறுநாடக ஆக்கம்**

வி.நிரோசினி -புதுக்குளம் ம.வி, சி.துலாஞ்சலி - கோயில் புளியங்குளம் முத்தமிழ் வித்தி, ச.சோபனா - கனகராயன்குளம் ம.வி.

**பிரிவு -VI கவிதை ஆக்கம்**

வே.துயிலினி -ஓமந்தை மத்திய கல்லூரி, பா.ஜெனித்தா - புதுக்குளம் ம.வி, பி.வேதிகா - கனகராயன்குளம் ம.வி.

**பிரிவு -V கவிதை ஆக்கம்**

க.ஜோசஸ் - புதுக்குளம் ம.வி, த.மேனகா - கல்மடு ம.வி,

**பிரிவு -IV சிறுகதை**

ம.மேகலா - சுந்தரபுரம் சரஸ்வதி வித்தி, அ.குசேந்தினி - கனகராயன்குளம் ம.வி, ம.ஜென்சிகா - கோயில் புளியங்குளம் முத்தமிழ் வித்தி.

**பிரிவு -V சிறுகதை**

கே.வினோதினி - புதுக்குளம் ம.வி, ப.தமிழினி - சின்னப் பூவரசன் குளம் விக்னேஸ்வரா வித்தி, ந.அர்ச்சனா - கனகராயன்குளம் ம.வி.

**பிரிவு -IV வாசிப்பு**

சூ.அபிசனா - கிடாச்சூரி அ.த.க.பாடசாலை, ஸ்ரீ.விதுர்சிகா - புதிய சின்னக் குளம் அ.த.க.பாடசாலை, த.நிவேதிகா - கல்மடு ம.வி.

**பிரிவு -V வாசிப்பு**

நி.பிறேமினி - ஓமந்தை ம.கல்லூரி, மோ.டிலெக்சனா - புளியங்குளம் இ.கல்லூரி, வி.மதுசாளினி - கனகராயன் குளம் ம.வி. (தொடரும்)

# இப்படியும் நடக்கிறது வர்த்தகர்கள் அவதானம்



(குருநகர்)

யாழ்.தட்டாதெருச் சந்தி மற்றும் நல்லூர் வர்த்தக நிலையங்களுக்கு விஜயம் செய்யும் குழு ஒன்று பொருட்களை ஓடர் செய்து விட்டு பணத்தை முன்னர் கொடுத்தாகத் தெரிவித்து மீதிப் பணத்தை கேட்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிதாய் இந்த வகையில் பண மோசடி செய்வதில் ஒரு குழுவினர் ஈடுபட்டு வருவதாகத் தட்டாதெருப் பகுதி வர்த்தகர்கள் தெரிவித்தனர்.

ஆட்டோவில் மூன்று, நான்கு பேர்கள் வந்து சந்தியிலுள்ள கடைகளில் பொருட்களைக் கொள்வனவு செய்வது போல் நடித்து இரண்டாயிரம் ரூபா முதல் கொடுத்ததாகவும் மீதிப் பணத்தைத் தருமாறு கேட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இவ்விதம் நடித்த ஒருவர் கையும் மெய்யுமாகப் பிடிக்கப்பட்டு நையப்புடைக்கப்பட்டார். இச்செயற்பாடுகளில் அந்நியப் பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே ஈடுபட்டு வருவதாகவும் வர்த்தகர்கள் தெரிவித்தனர். (68)

கிளிநொச்சி நகரத்தில் வீதி அபிவிருத்தியும், அகலிப்புப் பணியும் துரிதகதியில் இடம்பெற்று வருகின்றது. பழைய நீர்த்தாங்கிப் பகுதியில் வீதிப்புனரமைப்பு முடிவுறும் தறுவாயில் இருப்பதையும், டிப்போச் சந்திப் பகுதியில் வீதிப் புனரமைப்பு ஆரம்பிக்கப்பட்டிருப்பதையும் காணலாம். (படங்கள் : ஜெ.கலையகன்)

# எமது மூதாதையர்களின் பங்களிப்பில் யாழ்ப்பாண கோட்டை கட்டப்பட்டது

## வரலாற்றுத் துறை பேராசிரியர் புஸ்பரட்ணம்

(திருநெல்வேலி)

அறுபத்தியிரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் யாழ். கோட்டை அமைக்கப்பட்டது. காங்கேசன்துறையிலிருந்து பண்ணை வரை மக்கள் வரிசையாக நிறுத்தப்பட்டு அவர்கள் மூலம் இக் கோட்டை கட்டி முடிப்பதற்கான கற்கள் கொண்டு வரப்பட்டன. 16 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் போர்த்துக்கேயரினால் இக் கோட்டை கட்டப்பட்டது என யாழ. பல்கலைக்கழக வரலாற்றுத்துறை பேராசிரியர் எம்.புஷ்பரட்ணம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் விஞ்ஞான சங்கத்தின் வருடாந்த மகா நாட்டின் மூன்றாவது நிறைவு நாள் அண்மையில் யாழ.பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரை நிகழ்த்திய போது 1619 ஆம் ஆண்டு சங்கிலிய மன்னனை வெற்றி கொண்டு அவன் தங்கியிருந்த மிகப்பெரிய ஆலயத்தைக் கைப்பற்றி ஆட்சி செய்த பிறகு அக் கோயில் இடிக்கப்பட்டுவிட்டது.

யாழ்.கோட்டையின் கீழ்ப்பகுதி 40அடி அகலமும், 30 அடி உயரமும், மேற்பகுதி 20 அடி அகலமும் கொண்டதாக இருந்தது. மேற்பகுதியில் சுடுகலன்களும், பாதுகாப்பரண்களும், பீரங்கித்தளங்களும் அமைந்திருந்தன.

போர்த்துக்கீசர், ஒல்லாந்தர் காலத்தில் இக் கோட்டையை கட்டுவதற்காக நெடுந்தீவு, புங்குடுதீவு, அனலைதீவு, நயினாதீவு போன்ற இடங்களிலிருந்து கற்கள் கொண்டுவரப்பட்டன. இதற்காக ஒரு வள்ளத்துக்கு 3பாயும் கொடுக்கப்பட்டன. தென்மராட்சிப் பகுதியிலி ருந்து வந்த மேசனுக்கு ஊதியமாக ஒரு பணம் வழங்கப்பட்டது. அவரது உதவியாளருக்கு அரைப்பணமும் வழங்கப்பட்டது. கூலியாட்களுக்கு ஒரு வருடத்துக்கு எழுபத்தைந்து கரண்டி சம்பா அரிசியும் கொடுக்கப்பட்டது.

இந்தியாவின் கோவா பகுதியிலிருந்து சர்க்கரையும், கோப்பாய் அராலி, வட்டுக்கோட்டை போன்ற இடங்களிலிருந்து சுண்ணாம்புச் சூளைகளும் வரவழைக்கப்பட்டன.

பல நாணயங்கள், மட்பாண்டங்கள் என்பன பழைய வரலாறுகளை எடுத்தியம்புகின்றன. கி.மு. மூன்றாம் நூற்றாண்டின் பிரித்தானியர் காலம் வரையானவை இவை எனத் தெரியவந்துள்ளது எனத் தெரிவித்தார். (137)



சாவகச்சேரி நகர சபையின் மீசாலை பொது நூலகத்தினரால் நூலக மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கான இலைக்கஞ்சி வழங்கும் நிகழ்வில் வேள்ட் விஷன் திட்ட முகாமையாளர் றொசைறோ மாணவர்களுக்கு இலைக் கஞ்சி வழங்குவதைக் காணலாம். (11)

# சுகாதாரம், நவீன வசதிகளுடன் அச்சுவேலியில் கள்ளுத்தவறணைகள்

## -சுற்றுலாப்பயணிகளைக் கவரும் திட்டம்

(அச்சுவேலி)

அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவு சங்கத்தினால் 11 கிளைகளும் சுகாதாரம் மற்றும் நவீன வசதிகளுடன் கூடிய கள்ளுத்தவறணையாக மாற்றி அமைக்கப்பட்டு வருகின்றது. வல்வை வீதி - அச்சுவேலி தெற்குப் பகுதியில் அமைந்திருக்கும் கள்ளுத்தவறணைகள் மலசல கூடம், நீர் வசதி, மின்சாரம், இருக் கைகள் மற்றும் காற்றோட்டங்களுடன் கூடிய நவீன மயப்படுத்தப்பட்ட முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

இக்கள்ளுத்தவறணைகள் யாழ்.மாவட்டத்தில் முன்மாதிரியாகத் திகழ்வதுடன், கடந்த வருடம் அச்சுவேலி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச்சங்கத்தின் நிதியிலும், காணியிலும், 18 இலட்சம் ரூபா பெறுமதியில் இரண்டாவது கட்டடமாக அமைக்கப் பட்டுள்ளது.

இதில் முதலாவது கள்ளுத்தவறணை வல்வைப்பகுதியில், கட்டப் பட்டு மிகவும் சிறப்பான முறையில் இயங்கி வருகின்றது

அச்சுவேலி - தம்பாலைப் பகுதியிலும் கிளையாக சொந்த நிதியிலும் காணியிலும் 23 இலட்சம் ரூபா பெறுமதியான நவீன வசதிகளுடனும், கூடிய கள்ளுத்தவறணை கட்டப்பட்டு இவ் வருட நடுப்பகுதியில் திறக கப்படவுள்ளது.

ஏனைய 9 கிளைகளும் நவீன வசதிகளுடன் கூடிய் கள்ளுத் தவறணையாக மாற்றப்பட்டுள்ளது.அச்சுவேலி தெற்கில் அமைந் துள்ள கள்ளுத் தவறணைக்கு இக்காலப்பகுதியில் நாளொன்றுக்கு சுமார் 350 போத்தல் பனை மற்றும் தென்னங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது.

60 ரூபாவுக்கு தென்னங் கள்ளும், பனங்கள்ளு 40 ரூபாய்கும் சுகாதாரமுறைப்படி விற்பனை செய்யப்படுகின்றன.

தென்னிலங்கையிலிருந்து வரும் சுற்றுலாப்பயணிகள் தென்னங் கள்ளை விரும்பி குடிப்பதாகவும் பனங் கள்ளை உள்ளூர் வாசிகள் அதிகம் அருந்துவதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. (116)

# இறுவட்டு வெளியீடு


கரவெட்டிப் பிரதேச செயலக சைவ ஆலோசனைச்சபையின் ஏற்பாட்டில் சைவப்புலவர் பொன். சுகந்தனின் தெய்வீகக்கானம் இறுவட்டு வெளியீட்டு நிகழ்வு நாளை ஞாயிறறுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நெல்லியடி முருகன திருமண மண்டபத்தில் நடைபெற வுள்ளது.

வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வல் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலரும், கரவெட்டி பிரதேச செயலக சைவ ஆலோசனைச் சபைத் தலைவருமான இரா.வரதீஸ்வரன் கலந்து கொள்ளவுள்ளார்.

இந் நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை வடமராட்சி இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி மகிந்தினி விஜயகுமார் வழங்கவுள்ளதுடன் மதிப்பீட்டுரையை ஓய்வு நிலை மாவட்ட நீதிபதி மு.திருநாவுக்கரசு வழங்கவுள்ளார்.

நூலின் முதற்பிரதியை பட்டயக்கணக்காளரும் சமாதான நீதவானுமான இ.அன்னலிங்கம் பெற்றுக் கொள்ளவுள்ளார்.

# பரமர் சங்கமம்



சமீபத்தில் எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்டது தான் சாட்டு. சகலரும் சகலமம் தங்க தங்க எண்ணப்படி விலைகளைக்கூட்டிப் பொருட்களை விற்பனை செய்யத் தொடங்கி விட்டனர்.

இந்நிலைமை முன்னெப்போதையையும் விட இம்முறை கட்டுப்பாடு இல்லாமல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதனால் பாதிக்கப்படுவோர் அன்றாடம் காச்சிகளும், அரசாங்க ஊழியர்களும் எண்டால் மிகையில்லை.

அன்றாடம் காச்சிகள் அவ்வப்போது உள்ளதைக் கொண்டு வாங்கிச் சமைச்சுச் சாப்பிடுகிறவர்கள். அரச ஊழியர்கள் மாதாந்த சம்பளக் காசில் வாழ்க்கை நடத்துபவர்கள்.

இந்த இரு பகுதியினரையும் விட கீழ்த்தட்டு வர்க்கம், மேல்தட்டு வர்க்கம் எனப்படுகின்றவர்களுக்கு கீழ் மட்டத்தவர் கிடைப்பதை புசித்தும், மேல் மட்டத்தவர் பணத்தை அள்ளி வீசியும் வாழக் கூடியவர்கள்.

மத்தியதர வர்க்கத்துள் அடங்கும் அரச ஊழியர்களும், அன்றாடம் காச்சிகளும் நாளாந்தப் போஜனத்தில் எந்த இழப்புக்களையும் அடைய முடியாமல் செலவிட்டு சீவியத்தை நடத்த வேண்டியவர்களாக தராசைப்போல் மேலும், கீழுமாக வாழ்க்கையை நடத்திக் கொண்டிருப்பவர்கள்

இதனால் விலைக்கட்டுப்பாடுகள் அற்ற சூழலில் மிகக் கூடுதலாக சுரண்டப்படுபவர்களாக மத்திய தர வர்க்கம் முகம் கொடுக்க நேரிடுகின்றது.

1996 ஆம் ஆண்டும் அடுத்தடுத்து வந்த ஆண்டுகளிலும் குடாநாட்டில் பொருட்களின் விலைகளில் நிர்ணயம் இல்லாமல் மா, சீனி முதலாக மாவைக்கொண்டு தயாராகும் பாண், பனிஸ், இடியப்பம், பிட்டு ஈ. றாக தேநீர் வகைகளும் ஒவ்வொரு கடைகளில் ஒவ்வொரு வகையாக விற்கப்பட்டன.

அதுமட்டுமல்லாமல் அவற்றை மூலப் பொருளாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட பொருட்களும் தயாரிக்கப்பட்டன. உதாரணத்துக்கு இடியப்பத்தை தூக்கிப்பார்த்தால் மறு பக்கத்தில் இருக்கும் காட்சிகளை எந்தவித இடைஞ்சலும் இல்லாமல் பார்க்க கூடியதாக அமைந்திருக்கும்.

இப்பவும் அத்தகய இடியப்பம் ஒன்றின் விலை 4 ரூபா முதல் 6 ரூபா வரை கடைக்கொரு விலை விற்கப்படுகின்றது அது போலவே ரீ பணிஸ் சோடி 20 ரூபா முதல் 30 ரூபாவரையும் விற்பனை செய்யப் படுகின்றது.

ஒரு பால் தேநீர் 20 ரூபா, 25 ரூபா, 30 ரூபா என குடாநாட்டுப் பகுதியில் விற்கப்படுகின்றன.

1996 ஆம் ஆண்டளவில் யாழ்.அரச அதிபர் ஊடாக உலர் உணவுப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டு வந்ததால் உடனடியாக அவர் தலையிட்டு மேற்குறிப்பிட்ட பொருட்களுக்கு விலை நிர்ணயம் வெளியிட்டிருந்தார்.

இப்போதும் தோன்றியுள்ள சகல பொருட்களிலுமான கட்டுப்பாடற்ற விலைகளை அரச உயர் அதிகாரிகள் தலையிட்டு உப்போடை கூடிய முப்பத்திரெண்டு பொருட்களுக்கும் ஒரு விலை நிர்ணயத்தைச் சொய்யலாந்தானே பாருங்கோ..பூனைக்கு மணி கட்டுறது யார்?.

# பட்டப்பகலில் கச்சாயில் திருட்டு

(யாழ்ப்பாணம்)

ஆலயத்திற்கு சென்று திரும்பிவரும் வழியில் பெண் ஒருவர் மூன்றரைப் பவுண் சங்கிலியை கள்வரிடம் பறிகொடுத்த சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் கச்சாயில் இடம்பெற்றுள்ளது.

கச்சாய் முருகன் ஆலயத்திலிருந்து வீடு நோக்கி செல்லும் போது பகல் ஒரு மணியளவில் உப்புக்கேணிச் சந்திக்கு அருகிலேயே இச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பாக பொலிஸில் முறைப்பாடு செய்துள்ள பெண்மணி குறித்த கள்வர்களை அடையாளம் காட்ட முடியுமெனத் தெரிவித்துள்ளார். (11)

# முரசின் இன்றைய பலன்

(14.04.2012 – சனிக்கிழமை)

நந்தன வருஷம் சித்திரை மாதம் 02 ஆம் திகதி. அட்டமி 9.21 வரை. நட்சத்திரம் உத்தராடம் முற்பகல் 3.22 வரை. சித்தயோகம். அட்டமி நவமி.

இராகுகாலம் 9.04 - 10.34 வரை. சுபநேரம் 3.04 - 4.34 வரை.

எமகண்டம் 1.34 - 3.04 வரை. குளிகைகாலம் 6.04 - 7.34 வரை.

சோதிடஞானி அவர்களால் கணிக்கப்பட்டது.

| | |
|---|---|
| மேடம் | வீண் அலைச்சல், தடை தாமதம் நீங்கும், ஆடம்பரத்தை குறைக்கவும், பணத்தட்டுப்பாடு. |
| ரிஷபம் | முதியோர் ஆசி, கணவன் மனைவி ஒற்றுமை, மனச்சஞ்சலம், உடன்பிறந்தோர் ஒத்துழைப்பு. |
| மிதுனம் | முன்தினம் போல் நிதானம் நன்று, சேமிப்பு உயரும், பெரியோர் ஆதரவு, மனச்சஞ்சலம். |
| கடகம் | உடல்நலம், முற்கோபம் தவிர்க்கவும், எதிர் பாராத பயணங்கள், மருத்துவச் செலவுகள். |
| சிம்மம் | சுய கௌரவம், ஸ்தல யாத்திரை, பயணங்களால் அனுகூலம், உறவினரால் நன்மை. |
| கன்னி | மன மகிழ்ச்சி, நினைத்தவை நிறைவேறும், பொன் பொருள் சேரும், இருப்பிட சௌகர்யம். |
| துலாம் | மனதில் அச்சம், குறைவற்ற பணப்புளக்கம், ஆடை ஆபரண சேர்க்கை, குடும்ப சுகம். |
| விருச்சிகம் | பொன்பொருள்சேரும், அதிகாரிகளை அனுசரிக்கவும், புதிய நட்பில் இடையூறு, வாக்குவாதம் தவிர்க்கவும். |
| தனுசு | பணவரவு, உடல் உபாதைகள், பதவியுயர்வு கிட்டும், கணவன் மனைவி இணக்கம். |
| மகரம் | தோல்வி, பெற்றோர் வழியில் உதவி, தொழில் வளம் பெருகும், வாகன வசதிகள் வரும். |
| கும்பம் | மனத்திருப்தி, ஆசைகள் நிறைவேறும், ஆடம பரப் பொருட்கள் சேரும், இலட்சியம் கை கூடும். |
| மீனம் | நன்மை, அந்தஸ்து உயரும், முன்னெச்சரிக்கை நலம், பிரச்சினைகள் தீரும். |

# சட்டம், ஒழுங்கு நிலைகுறித்து திருப்தி அடைய முடியவில்லை

அமைச்சர் ரட்னசிறி விசனம்



(கொழும்பு)

நாட்டின் சட்டம் ஒழுங்கு நிலைமை குறித்து திருப்தியடைய முடியாது என ஆளும் கட்சியின் சிரேஷ்ட அமைச்சர் ரட்னசிறி விக்ரமநாயக்க தெரிவித்துள்ளார்.

இங்கிரிய பிரதேசத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தற்போது இடம்பெற்று வரும் கடத்தல் சம்பவங்கள் தொடர்பில் இலங்கைப் பிரஜை என்ற ரீதியில் வெட்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

மக்கள் சுதந்திரமாக நடமாட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது எனவும், சுதந்திரமாக செல்லும் மனிதர்கள் கடத்தப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனநாயக ஆட்சி நிலவும் இந் நாட்டில் இவ்வாறான கடத்தல் சம்பவங்களை அனுமதிக்க முடியாது என குறிப்பிட்டுள்ளார்.

கடத்தல் சம்பவங்களுடன் யாருக்கு தொடர்பு இருக்கின்றது என்பது யாருக்கும் தெரியாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எவ்வாறெனினும் குற்றச்செயல்களில் ஈடுபடுவோரை சட்டத்தின் முன் நிறுத்தி தண்டனை விதிகக வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

பாதையில் செல்லும் போது எவரேனும் எம்மைக் கடத்தினால் அதுவா எமது சுதந்திரம் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். இவ்வாறான சம்பவங்கள் இடம்பெறுவதனைத் தடுப்பது எம் அனைவரினதும் கடமையாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

# கடத்தல் சம்பவங்களுடன் அரசுக்குத் தொடர்பில்லை



(கொழும்பு)

கடத்தல் சம்பவங்களுக்கும் அரசாங்கத்திற்கும் எவ்வித தொடர்பும் கிடையாது என அவுஸ்ரேலியாவிற்கான இலங்கை உயர்ஸ்தானிகர் திசர சமரசிங்க தெரிவித்துள்ளார்.

சில தரப்பினர் குற்றம் சுமத்துவதனைப் போன்று இலங்கையில் இரகசிய காவல்துறையினர் கடத்தல்களில் ஈடுபடவில்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பொலிஸாரும், அதனுடன் தொடர்புடைய தரப்பினரும் குற்றச் செயல்கள் தொடர்பான விசாரணைகளை நடத்தி வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

பிரேம்குமார் குணரட்னத்தை பொலிஸ் கைது செய்யவும் இல்லை அவரை விடுதலை செய்யவும் இல்லை என திசர சமரசிங்க தெரிவித்துள்ளார்.

படையினரால் குணரட்னம் கடத்திச் செல்லப்பட்டதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுகளில் உண்மையில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# தூதரக உறவுகளை ஆரம்பிக்க தீர்மானம்

(கொழும்பு)

பல நாடுகளுடன் தூதரக உறவுகளை ஆரம்பிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

குறிப்பாக லத்தீன் அமெரிக்க, ஆபிரிக்க நாடுகளுடன் இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்திக்கொள்ள அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

இதன் ஓர் கட்டமாக துருக்கியின் அங்காரா நகரில் விரைவில் இலங்கைத் தூதரகமொன்று நிறுவப்படவுள்ளது.

இந்த மாத இறுதிக்குள் இந்தத்தூதரகம் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்படஉள்ளதாக வெளிவிவகார அமைச்சுத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்கு மேலதிகமாக ஈராக், லிபியா ஆகியவற்றில் மூடப்பட்டுள்ள தூதரகங்கள் மீளத் திறக்கப்படவுள்ளன.

இராஜதந்திர உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும் நோக்கில் அரசாங்கம் இவ்வாறு புதிய தூதரகங்களை அமைக்க உத்தேசித்துள்ளது.

# இலங்கையை அண்மித்து புவித்தகடு உருவாகிறது

(கொழும்பு)

இலங்கையை அண்மித்து புதிதாக தகடொன்று உருவாகி வருவதாக புவியியல் துறை சிரேஷ்ட பேராசிரியர் கபில தஹநாயக்க தெரிவித்துள்ளார். எனினும் இதன்மூலம் நிலநடுக்கம் தொடர்பில் எதிர்வு கூற முடியாதென அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்தோனேஷியாவின் சுமாத்ரா தீவின் வட பகுதியின் மேற்குக் கரைக்கு அப்பால் 8.6 ரிக்டர் அளவில் பாரிய நிலநடுக்கம் உணரப் பட்டது.

இந்தோனேஷியாவின் சுமாத்ரா தீவில் ஏற்பட்ட பாரிய நிலநடுக்கம் 2004 ஆம் ஆண்டு ஆழிப்பேரலை அனர்த்தம் ஏற்படுவதற்கான காரணமாக அமைந்தது.

எனினும் இந்த நிலநடுக்கத்தின் போது, புவிச் சிறுதட்டுக்களில் அதிர்வு ஏற்பட்டிருந்த போதிலும், தற்போது ஏற்பட்ட நிலநடுக்கம் சுனாமி அனர்த்தத்தை தோற்றுவிக்கவில்லை.

புவிச் சிறுதட்டு கடந்த புதன் கிழமை நெட்டாங்கில் அதிர்வுற்றதாக பிரித்தானிய புவியியல் நிபுணரான ரொகர் மியூஸன் சுட்டிக்காட்டியுள்ளார்.

கடந்த காலத்தில் இந்தோனேஷியாவை அண்மித்து ஏற்பட்ட பெரும்பாலான நிலநடுக்கங்களால் அந்த நிலைமை மாற்றமடைந்துள்ளதுடன், புவித் தட்டுக்களில் அழுத்தம் ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறான ஒரு சந்தர்ப்பத்தில் பாரிய நீரலைகள் ஏற்படாதென்பது புவியியல் நிபுணர்களின் கருத்தாகும். இவ்வாறான சூழ்நிலைகள் சுனாமி அனர்த்தம் ஏற்படுவதற்கான சாத்தியக் கூறுகளை குறைவாகவே கொண்டிருப்பதாக பிரித்தானிய புவியியல் நிபுணர் ரொகர் மியூஸன் தெரிவித்துள்ளார்.

புவி 12 தட்டுக்களை கொண்டமைந்துள்ளது என்பது விஞ்ஞானிகளின் நிலைப்பாடாகும். இந்திய - அவுஸ்ரேலிய புவித் தட்டே இலங்கையின் அமைவிடமாகவும் உள்ளது.

உலகில் வருடாந்தம் அதிகளவான நிலநடுக்கங்கள் பதிவாகின்ற ஜப்பான், பசுபிக் புவித தட்டின் மீதே அமைந்துள்ளது.

தற்போது 13 ஆவது புவி தகடொன்று உருவாகி வருவதாக சிரேஷ்ட பேராசிரியர் கபில தஹநாயக்க சுட்டிக்காட்டுகின்றார்.

## சமுர்த்திக் கொடுப்பனவு ஏப்ரல் முதல் அதிகரிப்பு

ஏப்ரல் மாதம் முதல் நடைமுறைக்கு வரும் வகையில் சமுர்த்தி நிவாரணக் கொடுப்பனவு 33 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டிருப்பதாக பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்கள இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த 42 ஆயிரத்து 638 குடும்பங்கள் புதிதாக சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதுவரை முத்திரை வடிவில் வழங்கப்பட்டு வந்த சமுர்த்திக் கொடுப்பனவுகளை பயனாளிகளின் வங்கிக் கணக்கில் வைப்பீடு செய்யப்படவுள்ளதாக அந்தச் செய்தியில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கதிர்வீச்சு அளவிடும் பணிகள் வடக்குப் பகுதியில் ஆரம்பம்



(கொழும்பு)

வடக்குப் பகுதியில் கதிர் வீசசை அளவிடும் பணிகள் இடம்பெற்று வருவதாக அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.

மன்னார் தொடக்கம் யாழ்ப்பாணம் வரையிலான கரையோரப் பகுதிகளில் இந்தப் பணிகள் இடம்பெற்று வருவதாக அவர் கூறியுள்ளார்.

தென்னிந்தியாவில் நிறுவப்படடுள்ள கூடங்குளம் அணுமின் நிலையத்தால், ஏதேனும் அனரத்தம் ஏற்பட்டால் இந்தப் பகுதியே அதிகளவில் பாதிக்கப்படும் வாய்ப்புகள் உள்ளன.

மன்னார் நகரில் இருந்து சுமார் 250 கி.மீ. தொலைவில் உள்ள கூடங்குளத்தில் இந்த அணுமின் நிலையம் அமைந்துள்ளது.

கதிர்வீச்சின் அடிப்படை அளவைக் கண்டறிவதும், அதனை அடிப்படையாக வைத்து உள்ளூர் அதிகாரிகள் மூலம் தொடர்ச்சியாக கதிர்வீச்சு அளவைக் கண்காணிப்பதற்குமே இந்த அளவீட்டுப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக இந்தக் கண்காணிப்பு மேற்கொள்ளப்படும். இதன்மூலம், கதிர்வீச்சின் அளவில் ஏதேனும் மாற்றம் தென்பட்டால் இலகுவாக அடையாளம் காண முடியும். கதிர்வீச்சின் அடிப்படை அளவீட்டுப் பணிகள் ஒரு ஆண்டில் முடிவடையும். என்றும் அவர் மேலும் கூறியுள்ளார்.*

# தொல்பொருள் களவாடினால் விதிக்கப்படும் சிறைத்தண்டனை

(கொழும்பு)

தொல்பொருட்களை களவாடும் நபர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டுவரப்படவுள்ளது.

புதையல்கள், தொல்பொருட்கள் ஆகியவற்றைக் களவாடும் நபர்களுக்கு கண்டிப்பாக சிறைத் தண்டனை விதிக்கக்கூடிய வகையில் சட்டமொன்றை அமுலபடுத்தும் நோக்கில் நகல் சட்டமொன்று உருவாக்கப்பட்டு வருவதாக தொல்பொருள் ஆணையாளர் நாயகம் கலாநிதி செனரத் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாளுக்கு நாள் தொல்பொருட்களை களவாடும் சம்பவங்கள் அதிகரித்துச் செல்வதாகவும், இதனை கட்டுப்படுத்தும் நோக்கில் புதிய சட்டம் உருவாக்கப்பட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

தொல் தண்டனையும், ஒரே தடவையில் இரண்டு தண்டனையும் விதிக்க சட்டத்தில் இடமுள்ளது. இந்த ஆண்டில் இதுவரையில் தொல்பொருட்கள் கொள்ளையிடப்பட்ட 30 சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

# தங்க ஆபரண உற்பத்தியாளர்களின் ஆற்றலை மேம்படுத்தத் திட்டம்

(கொழும்பு)

சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தங்க ஆபரண உற்பத்தியாளர்களின் ஆற்றல்களை மேமபடுத்தும் வேலைத்திட்டமொன்றை முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளதாக தேசிய மாணிக்கக்கல் மற்றும் தங்க ஆபரண அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதன்முதற்கட்டமாக, தங்க ஆபரண தயாரிப்பின்போது பயன்படுத்தப்படுகின்ற நவீன உபகரணங்களை, தங்க ஆபரண சங்கத்திற்கு வழங்க தேசிய மாணிக்ககல் மற்றும் தங்க ஆபரண அதிகாரசபை தீர்மானித்துள்ளது.

உள்ளூர் மற்றும் வெளிநாட்டு சந்தைகளில் நிலவுகின்ற போட்டித்தன்மைக்கும் விலைகளுக்கும் மத்தியில் தங்க ஆபரணங்களை தயாரிப்பதற்கு இந்த உபகரணங்களை பயன்படுத்த முடியும்.

அத்துடன் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தங்க ஆபரண தயாரிப்பாளர்களின் உற்பத்திப் பொருட்களை உலக வர்த்தக கட்டடத்தொகுதியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள நவீன காட்சிக் கூடத்தில் விற்பனை செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், திட்டமிடப்பட்டுள்ளதாக அதிகார சபை தெரிவித்துள்ளது.

# தண்டப்பணம் செலுத்தினால் குணரட்னம் வரமுடியும்

(கொழும்பு)

குடிவரவு குடியகல்வு சட்டத்தை மீறினார் என்ற குற்றச் சாட்டின் கீழ் குமார் குணரட்னம் என்ற நொயல் முதலிகேவுக்கு விதிக்கபபட்டுள்ள 40 ஆயிரம் ரூபா தண்டப்பணத்தை செலுத்தும் வரையில், அவருக்கு இலங்கைக்குள் பிரவேசிக்க முடியாது என்று இலங்கை குடிவரவு குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

இலங்கை குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் நிர்வாகி சூலானந்த பெரேரா இதனைத் தெரிவித்துள்ளார்.

குமார் குணரட்னம் என்ற நொயல் முதலிகே அவுஸ்ரேலியாவிலிருந்து இலங்கை வந்து, தமது வீசாக் காலம் முடிவடைந்த நிலையிலும் இலங்கையில் தங்கியிருந்தார் என்று குற்றம் சுமத்தப்பட்டுள்ளதுடன், இந்தக் குற்றத்திற்காக அவருக்கு 40 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளதாகவும் சூலானந்த பெரேரா குறிப்பிட்டுள்ளார்.



# கேள்விகள் நிரம்பிய காலம்

கிருஷ்ணமூர்த்தி அரவிந்தன்

"சுனாமி அலைகளாற் பாதிக்கப்பட்ட மக்கள் அந்தக் கணத்தில் கடலைத் திட்டித்தீர்த்தார்கள். ஆனால், சற்றுக் காலத்துக்குப் பிறகு அவர்கள் கடலின் மடியில் மீண்டும் தவழத் தொடங்கி விட்டனர். கடல் மீண்டும் அவர்களுக்கு வரமளிக்கும் – அரவணைக்கும் தாயாகிவிட்டது. இனிய தோழனாகிவிட்டது."

**யுத்தகால** நிலைமைகளைவிட யுத்தத்துக்குப் பின்னான நிலைமைகள் மிகக் கடினமானவையாக இருக்கும் என்பது பொதுவிதி.

யுத்தத்தில் கேள்விகளுக்கு இடமிருப்பதில்லை. யுத்தத்தின்போது கட்டளைகளே முதன்மையானவை. கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதே அங்கே நடைமுறை. கீழ்ப்படியாதவர்களின் தலைகளை யுத்தம் தின்றுவிடும் யுத்த களத்திலிருந்து சனங்களின் பதுங்கு குழி வரையில் இதுதான் நடைமுறை. இதுதான் யதார்த்தம்.

அங்கே யாரையும் யாரும் கேள்வி கேட்கமுடியாது. யுத்தஅரங்கிலாயினும் சரி, யுத்த அரங்கிற்கு வெளியேயும் சரி, கேள்விகள் துப்பாக்கிக் குண்டுகளையும் விட அபாயகரமானவையாகவே கருதப்படுகின்றன.

என்பதாற்தான் அங்கே நீதியும் உணர்வுகளும் குரல்களும் செத்துவிடுகின்றன. யுத்தத்தில் முதலில் பலியாவது உண்மையே என்று சொல்வதும் இதனாற்தான். கேள்வி கேட்க அனுமதிக்கப்படாத இடத்தில், பதில் சொல்லப்பட வேண்டிய கடப்பாடுஇல்லாமற் போகிறது. பதிலளிக்க வேண்டிய கடப்பாடில்லாத சூழலில் எதுவும் நடக்கலாம். எப்படியும் நடக்கலாம். அங்கே எதற்கும் மதிப்பில்லை. எவருக்கும் மதிப்பில்லை.

யுத்த விதி, யுத்த தர்மம் என்பதையெல்லாம் யார், எப்போது, எங்கே ஒழுங்காகக் கடைப்பிடித்தார்கள்? யுத்தத்தின் உருவாக்கமே நீதி மறுப்பிலிருந்துதானே நிகழ்கிறது? நீதியும் நியாயமும் அறமும் பேணப்படுமானால் யுத்தத்திற்கே இடமில்லை. அவை மீறப்படும்போதுதானே யுத்தம் முளைவிடுகிறது. ஆகவே, நீதி மறுப்பிலிருந்து உருவாகும் யுத்தத்தினால் எப்படி விதிகளையும் அறத்தையும் பேணமுடியும்?

எனவே யுத்த தர்மம், யுத்த விதி என்பதெல்லாம் மிகப் பெரிய கண்கட்டு வித்தைதான். கேள்விகளே இல்லாத, கேள்விகளுக்கு இடமேயில்லாத பரப்பொன்றை யுத்தம் தன்முன்னே உருவாக்கி வைத்திருக்கிறது.

ஆனால், யுத்தத்திற்குப் பின்னான நிலைமை அப்படியானதல்ல. அது கேள்விகளால் நிரம்பிய பரப்பு.எல்லாவற்றுக்கும் கேள்விகள். எந்த நிலையிலும் கேள்விகள். கேள்விகளால் சுற்றிவளைக்கப்பட்டதொரு காலச் சூழலே யுத்தத்துக்குப் பின்னான நாட்கள் என்பது.

யுத்தத்திற்குப் பின்னான காலத்தை எதிர்கொள்வதில் யுத்தத்தை நடத்திய நாடுகளும் யுத்தத்தை எதிர்கொண்ட நாடுகளும் பேரிடர்ப்பட்டிருக்கின்றன.

முக்கியமாக யுத்தத்தினால் சிதைந்தவற்றை மீள் நிலைப்படுத்துவது மிகப் பெரிய சவால். அதை விட அழிந்துபோனவற்றை உருவாக்குவதும் இழப்புகளை ஈடுசெய்வதும் மிகக் கடினமானது. மேலும் காயங்களை ஆற்றுவது, வலிகளைத் தீர்ப்பது எல்லாமே சிரமமான காரியங்கள். ஆனால்,எல்லாவற்றையும் சீர்ப்படுத்த வேண்டும். இல்லையெனில் மிகப்பெரிய அவலத்திலிருந்து மீளவே முடியாது.நிலைமைகளைச் சீர்ப்படுத்த முடியாது. இப்பொழுது அந்த மாதிரியான ஏராளம் கேள்விகள் இலங்கையில் எழுந்துள்ளன.

யுத்தகாலத்திற் காணாமற்போனவர்களைப் பற்றிய கேள்விகள். யுத்தத்தின் போது சரணடைந்தவர்களைப் பற்றிய கேள்விகள். அரசியற் கைதிகளாகத் தடுத்து வைத்திருப்போரைப் பற்றிய கேள்விகள். அவர்களுடைய விடுதலையைப் பற்றிய கேள்விகள். யுத்தக் குற்றங்களைப் பற்றிய கேள்விகள். யுத்தக் குற்ற விசாரணையைப் பற்றிய கேள்விகள். யுத்தத்துக்குப் பின்னரான நிலைமைகளைக் குறித்த கேள்விகள். மீள்குடியேற்றம் பற்றிய கேள்விகள். புனர்வாழ்வுப் பணிகளைப் பற்றிய கேள்விகள். பாதிக்கப்பட்டோரைப் பற்றிய கேள்விகள். பாதிக்கப்பட்டோருக்கான உதவிகளைப் பற்றிய கேள்விகள். புனரமைப்புப் பற்றிய கேள்விகள். சீராக்கல் நடவடிக்கைகளைப் பற்றிய கேள்விகள். யுத்தத்தில் பலியாகிய ஜனநாயகத்தை மீள் நிலைப்படுத்துவதைப் பற்றிய கேள்விகள். இயல்பு நிலை உருவாக்கத்தைப் பற்றிய கேள்விகள். இயல்பு நிலைக்குத் தடையான காரணிகளைப் பற்றிய கேள்விகள்.சிவில் தன்மையை நோக்கி நிலைமைகள் நகர்கின்றனவா என்ற கேள்விகள். போருக்குப் பிந்திய நிலையிலும் முரண்பாடுகளை நீக்குவதற்கான நடவடிக்கைகளைப் பற்றிய கேள்விகள். அமைதியைக் குறித்து, சமாதானத்தைக் குறித்து விசுவாசமாகச் சிந்திப்பதைப் பற்றிய கேள்விகள்... இப்படிப் பல.

.இந்தக் கேள்விகளையெல்லாம் பதில்களால் சீர்ப்படுத்துவதற்குச் சீரான பொறிமுறைகள் அவசியம். உச்சநிலையிலான மனிதாபிமானக் கண்ணோட்டத்தில் விசயங்கள் அணுகப்பட வேண்டும்.சிதைவடைந்த நிலையிலிருக்கும் உளநிலை தொடக்கம், இழப்புகள், பாதிப்புகள் எல்லாவற்றையும் மீள்நிலைப்படுத்துவதற்கு ஒழுங்கமைக்கப்பட்ட பொறிமுறைகளும் நடைமுறைப்படுத்துவதற்கான அர்ப்பணிப்பும் செயற்றிறனும் அவசியம்.

குறிப்பாக படைத்தரப்பை யுத்தத்தை ஒத்த சூழலிலிருந்து - மன நிலையிலிருந்து, ஆதிக்கத்திலிருந்து விலக்கிக் கொள்வதற்கு உச்சமான திட்டங்கள் அவசியம். இதைக் கையாள்வதே கடினம் என்று சொல்லப்படுகிறது. காரணம், யுத்தத்தில் வெற்றியைப் பெற்ற படைகள் அந்த வெற்றிக்கான தகுதியைத் தாமே பெற்றுக்கொடுத்ததாகவே சிந்திக்கும். ஆகவே அந்தச் சிந்தனையிலிருந்தே அவை தங்களுக்கான அந்தஸ்தையும் உரிமைகளையும் வளங்களையும் வசதிகளையும்எதிர்பார்க்கும்.

ஆனால், அரசைப் பொறுத்தவரையில் அது அரசியல் நிலைமைகளுக்கே முன்னுரிமை கொடுக்கவேண்டிய யதார்த்தத்திலிருக்கும். அரசியல் அம்சங்களுக்கு முன்னுரிமை வழங்கத் தவறும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் அது உள்ளேயும் வெளியேயும் கண்டனங்களையும் நெருக்கடிகளையும் சந்திக்க வேண்டியிருக்கும்.

அதேவேளை அரசியல் அம்சங்களுக்கு முன்னுரிமை அளிக்க முற்படுகையில் அது படைத்தரப்பையே முதலில்பாதிப்பை ஏற்படுத்துகிறது. இந்த நிலையில் படைத்தரப்பின் அதிருப்தியைச் சந்திக்க வேண்டியிருக்கும். படைத்தரப்பின் அதிருப்தியைச் சந்திப்பது யுத்தத்தில் வெற்றியைப் பெற்ற ஒருஅரசினால் முடியாத காரியம். இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன.


1. யுத்தத்தில் வெற்றியைப் பெற்றுக் கொடுத்த உரிமையைப் படைத்தரப்பு கொண்டுள்ளது. வெற்றியைப் பெற்றுத்தந்து விட்டு ஓரங்கட்டப்படுவதை படைகள் விரும்புவதில்லை. அதை அவை அனுமதிக்கவும்மாட்டா. வெற்றியைக் குறித்த பெருமிதங்களிலும் புகழிலும் அவை பங்கெடுக்கவே முனையும். யுத்த வெற்றிக்காக தாம் செயற்பட்ட திறன்களையும் தமது தரப்பின் அர்ப்பணிப்பையும் அவை முன்னிறுத்தும்.

2. யுத்தத்தின் தேவைக்காக அரசு படையைப் பெருக்கி விடுகிறது. யுத்தத்தின் முடிவுக்குப் பிறகு பெருகிய படைகளை ஒரே நாளில் வீட்டுக்குப் போகும்படி எந்த அரசினாலும் சொல்ல முடியாது. அப்படி அரசு கட்டளையிட்டால் அரசின்மீதே படைகள்பாயும். யுத்தத்தின் வெற்றியை எடுத்துக் கொண்டு அரசு தங்களை வீதியில் விட்டதாக படைகள் கருதக்கூடிய அபாயம் இதிலுண்டு. எனவே யுத்த காலத்தையும் விட யுத்தத்திற்குப் பிந்திய காலத்தில் படைகளைக் கையாள்வதே கடினமானது என்கிறார் எட்வேர்ட் சைமன். இவர், இரண்டாம் உலகப்போருக்குப் பிந்திய சூழலைப் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்ட ஒரு அரசியற் பகுப்பாளர்.

இரண்டாம் உலகப் போருக்காகப் பெருக்கிய படைகளை வீட்டுக்கு அனுப்பவும் முடியாமல் பணிகளிலும் வைத்திருக்க முடியாமல் அவஸ்தைப் பட்டன யுத்தத்தில் ஈடுபட்ட நாடுகள். தோற்றுப்போன நாடுகளின் கதை வேறு. அவர்கள் எல்லாப் பிரச்சினைகளையும் தோல்வியில் போட்டுவிடுவார்கள். அதைவிட தோற்றுப்போனவர்களிடம் யாரும் அதிகமாகப் பொறுப்புகளைப் பற்றிக் கேட்க மாட்டார்கள். கேள்விகளையும் எழுப்ப மாட்டார்கள்.

ஆனால், வென்றவர்களின் நிலை அப்படியல்ல. அவர்கள் எல்லாவற்றுக்கும் பதில் சொல்ல வேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருக்கின்றனர். எல்லாவற்றுக்கும் அவர்கள் பதில் சொல்லியே ஆகவேண்டும் என்கிறார் சைமன்.

இயற்கையினால் ஏற்படும் இடர்களையும் அழிவுகளையும் சந்திக்கும் மனம் சமனிலை அடைவதற்கும் யுத்தத்தினால் ஏற்படும் அழிவுகளையும் இடர்களையும் சந்திக்கும் மனம் சமனிலை கொள்வதற்கும் வேறுபாடுகளுண்டு. இயற்கையின் இடரில் யாரையும் கோவித்துக்கொள்வதற்கு இடமில்லை. அங்கே குற்றவாளியாக - இடருக்குக் காரணமாக - இருப்பது இயற்கையே. இயற்கையை எப்படிக் கோவித்துக் கொள்ள முடியும். அப்படிக் கோவித்துக் கொண்டாலும் அது வானத்தைப் பார்த்துக் கர்ச்சிப்பதற்கு அப்பால் வேறெதுவாகவும் ஆவதில்லை. (18 பக்கம் பார்க்க)





வவுனியாவில் நடைபெற்ற வடமாகாண கல்வித் திணைக்களங்கள் மாகாண மட்ட பெண்களுக்கான மரதன் ஓட்டப் போட்டியில் வெற்றியீட்டிய பத்து வீராங்கனைகளையும் காணலாம். (12)

# பிரதேச மட்ட விளையாட்டு

(தெல்லிப்பளை)

சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு தெல்லிப்பளைப் பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்களின் ஏற்பாட்டில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 20ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் தெல்லிப்பளை பிரதேச செயலகத்திற்குபட்டவர்கள் பங்குபற்ற முடியும். பங்குபற்ற விரும்புவோர் எதிர்வரும் 18ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர்.

இப்போட்டிகளில் வெற்றியீட்டுவோருக்கு பெறுமதி வாய்ந்த சான்றிதழ்கள் வழங்கப்படும் எனவும் அவர்கள் தெரிவித்தனர். (17)

# கௌரவமான மகிழ்ச்சி



(தெல்லிப்பளை)

இதுவரை நடைபெற்ற வீரர்களின் போரில் இந்த ஆண்டு இரு அணி ஆதரவாளர்களும் தமது மகிழ்ச்சியை கௌரவமான முறையில் வெளிப்படுத்தியிருந்தமை மகிழ்ச்சி அளிக்கின்றது என மகாஜனாக் கல்லூரி அணியின் விளையாட்டுக்கான பொறுப்பாசிரியர் தெரிவித்தார்.


கடந்த வெள்ளி, சனி தினங்களில் இடம்பெற்ற வீரர்களின் போர் இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி குறித்து எமது செய்தியாளர் மகாலிங்கசிவம் கருத்து கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், முதல் நாள் போட்டியில் நிர்ணயிக்கப்பட்ட ஓவர்கள் பந்து வீசப்படாமையே எமது வெற்றி வாய்ப்புக் குறைந்தமைக்குக் காரணமாகும். எனினும் எமது துடுப்பாட்ட வீரர்கள் வெற்றி நோக்கி முடிந்த வரை அழைத்துச் சென்றனர். வெற்றி தோல்வியின்றிப் போட்டி நிறைவடைந்தமை இரு அணியினருக்கும் மகிழ்ச்சியே. இதுவரை இல்லாத வகையில் இம்முறை இரு அணி ஆதரவாளர்களும் கடும் போட்டியின்போது தமது மகிழ்ச்சியைக் கௌரவமான முறையில் வெளிப்படுத்தியிருந்தனர். இதற்கு எல்லோருக்கும் நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன். இது போன்று எதிர்வரும் காலங்களிலும் ரசிகர்கள் நடந்துகொண்டால் போட்டியை எந்தவித குழப்பங்களுமின்றி நடத்த முடியும். எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (44)

# நிவர்த்தி செய்த ஆட்டம்

(தெல்லிப்பளை)

முதல் இனிங்ஸில் துடுப்பாட்டத்தில் பல தவறுகளை இரு கல்லூரி அணிகளும் செய்தனர். இருப்பினும் இரண்டாவது இனிங்ஸில் அந்தத் தவறுகளை உணர்ந்து அதை நிவர்த்தி செய்யும் வகையில் ஆடியிருந்தமை மகிழ்ச்சி அளிக்கிறது என ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணியின் விளையாட்டுக்கான பொறுப்பாசிரியர் கே. கஜேந்திரன் தெரிவித்தார்.



வீரர்களின் போர் இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டி குறித்து எமது செய்தியாளர் மகாலிங்கசிவம் கருத்து கேட்டபோது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், முதல் நாள் ஆட்டத்தின் இறுதியில் கிடைத்த எமக்குச் சார்பான நிலையுடனேயே ஆட்டத்தை ஆரம்பித்தோம். எனினும் மகாஜனாவின் 3ஆவது மற்றும் இறுதி விக்கெட் இணைப்பாட்டங்கள் எமக்கு வெற்றியை கிடைக்க முடியாமற் செய்துவிட்டனர்.

எமது அணியினர் துடுப்பெடுத்தாட ஆரம்பித்தபோது ஒரு பந்துக்கு ஒரு ஓட்டம் எடுக்க வேண்டும் என்ற அளவிலேயே மீதி ஓவர்கள் இருந்தன. இதனால் அடித்து விளையாட முடிவெடுத்து அதன்படி செயற்பட்டோம். 2 விக்கெட் இழப்புக்கு 80 ஓட்டங்களைப் பெற்று வலுவாக இருந்தோம். அதன் பின்னர் அடுத்தடுத்து விக்கெட்டுக்கள் வீழ்த்ததால் நிதானமாக ஆடினோம். இதன் மூலம் போட்டியின் முடிவு வெற்றி தோல்வியின்றி நிறைவடைந்தது எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (44)


# சென்னை சூப்பர் கிங்ஸ் அதிரடியான வெற்றி

(சென்னை)

பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணிக்கெதிரான போட்டியில் சென்னை சூப்பர் கிங்ஸ் அணி அதிரடி வெற்றி பெற்றது.

ஐ.பி.எல். ருவென்ரி 20 கிரிக்கெட் தொடரின் 13ஆவது போட்டி நேற்று முன்தினம் சென்னையில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணி ஹோலி, கிறிஸ் கெய்ல் ஆகியோரின் அதிரடித் துடுப்பாட்டத்தின் துணையுடன் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. பெங்களூர் அணி 20 ஓவர்கள் நிறைவில் 8 விக்கெட்டுக்களை இழந்து 205 ஓட்டங்களைப் பெற்றது. இதில் கிறிஸ் கெய்ல் 35 பந்துகளை எதிர்கொண்டு ஆறு சிக்ஸர்கள், இரண்டு பவுண்டரிகள் அடங்கலாக 68 ஓட்டங்களையும், ஹோலி 46 பந்துகளை எதிர்கொண்டு இரண்டு சிக்ஸர்கள், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 57 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் பொலிஞ்சர் மூன்று, ரவீந்திர ஜடேஜா இரண்டு விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.



பதிலுக்கு 206 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் ஐந்து விக்கெட்டுக்களை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது. இதில் பிளெசிஸ் 46 பந்துகளை எதிர்கொண்டு நான்கு சிக்ஸர்கள், ஐந்து பவுண்டரிகள் அடங்கலாக 71 ஓட்டங்களையும், டோனி 24 பந்துகளில் 41 ஓட்டங்களையும் பெற்றனர். பந்து வீச்சில் முரளிதரன் 21 ஓட்டங்களைக் கொடுத்து மூன்று விக்கெட்டுக்களை வீழ்த்தினார். இப்போட்டியின் ஆட்டநாயகனாக பிளெசிஸ் தெரிவானார்.

# மென்பந்து கிரிக்கெட் தொடர் கிண்ணம் வென்றது ஸ்ரீகாமாட்சி



விளையாட்டு செய்திகள்

(உடுவில்)

513ஆவது படையணித் தலைமையகத்தினால் நடத்தப்பட்ட மென்பந்து கிரிக்கெட் போட்டியில் ஸ்ரீ காமாட்சி அணி கிண்ணத்தைக் கைப்பற்றியது

யாழ் குடாநாட்டின் இளம் விளையாட்டு வீரர்களின் விளையாட்டுத் திறமையை மேம்படுத்தவும் பொது மக்களுக்கும் இராணுவத்தினருக்குமிடையிலான நற்புறவை வலுப்படுத்தும் நோக்கிலும் உடுவில் 513ஆவது படையணித் தலைமையகத்தின் சிவில் இணைப்பதிகாரி அலுவலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட மென்பந்து கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்று அண்மையில் நடத்தப்பட்டது.

சுமார் 20 விளையாட்டுக் கழகங்கள் கலந்து கொண்ட இந்த கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் வெற்றிக் கிண்ணத்தை ஸ்ரீ காமாட்சிக் கழகம் கைப்பற்றியது.

வட்டு இந்துக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற இறுதிப் போட்டியின் போது இரண்டாமிடத்தை வட்டு ஸ்ரார்ஸ் கழகமும் மூன்றாமிடத்தை கலவத்துறை கழகமும் பெற்றுக்கொண்டன.

முதலிடத்தைப் பெற்ற ஸ்ரீ காமாட்சிக் கழகத்திற்கு வெற்றிக் கிண்ணத்துடன் 7500.00 ரூபாவும், விளையாட்டுப் பொருட்கள் அடங்கிய பொதியும் வழங்கப்பட்டதுடன், இரண்டாம் மூன்றாம் இடங்களைப் பெற்ற கழகங்களுக்கு கிண்ணத்துடன் பணப் பரிசில்களும் விளையாட்டு உபகரணங்கள் அடங்கிய பொதியும் வழங்கப்பட்டது.

இந்தப் போட்டித் தொடரை நடத்துவதற்கு சங்கானை மக்கள் வங்கிக் கிளையும் டோக்கியோ சிமெந்து நிறுவனமும் அனுசரணை வழங்கின. 51ஆவது படைப்பிரிவின் தளபதி பிரிகேடியர் பியல் விக்கிரமரத்ன, 513ஆவது படையணித் தலைமையகத்தின் தளபதி பிரிகேடியர் பிரதீப் சில்வா உற்பட சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் பிரதேசத்தின் சிரேஷ்டப் பிரஜைகள் மற்றும் கிரிக்கெட் ரசிகர்கள் ஆகியோர் நிகழ்வில் கலந்து கொண்டனர்



புற்றுநோயை வென்று தாயகம் திரும்பியுள்ள இந்திய கிரிக்கெட் வீரர் யுவராஜ்சிங்கை, அவரது வீட்டில் சந்தித்து உடல்நலம் விசாரித்த இங்கிலாந்து கிரிக்கெட் அணி வீரர் கெவின் பீற்றர்சன்.

## தோல்விக்குத் தலைவரே பொறுப்பு

(சென்னை)

சென்னை சூப்பர் கிங்ஸ் அணியுடனான தோல்விக்கு பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின்• தலைவரே முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என காவஸ்கர் தெரிவித்துள்ளர்.


எந்த ஒரு கப்டனும் கடைசி நேரத்தில் வெற்றி பெறும் நிலையில் இருந்தபோது கடைசி நேரத்தில் பகுதிநேர பந்து வீச்சாளரை அழைத்து இருக்க மாட்டார். இந்தத் தோல்விக்கு முழுக் காரணம் கப்டன் வெட்டோரியின் தவறான முடிவுதான். இனி பெங்களூர் அணி வெற்றி பெறவேண்டுமானால் கப்டன் பதவியில் வெட்டோரி நீடிக்ககூடாது எனவும் தெரிவித்தார்.

பெங்களூர் கப்டன் வெட்டோரியின் கடைசி நேர தவறான முடிவே தோல்விக்கு காரணமாக அமைந்தது என்ற சர்ச்சை எழுந்தது. முன்னணி பந்து வீச்சாளர்களின் ஓவர் முடிந்த நிலையில் 19ஆவது ஓவரை வீச வீராட் ஹோலியை அழைத்தார்.

ராஜீவ் பத்காலின் பந்து வீச்சு எடுபடாததால் ஹோலிக்கு வாய்ப்பு கொடுத்தார். 19ஆவது ஓவரை வினய் குமார் விசியிருந்தால் ஆட்டத்தின் முடிவு மாறி இருக்கும். அவர் வெற்றி தேவையான 43 ஓட்டங்களை எளிதில் எடுக்க விட்டிருக்கமாட்டார் என்ற கருத்து கூறப்படுகிறது.

இதுபற்றி குறித்து கருத்து வெளியிடுகையிலேயே காவஸ்கர் மேற்படி கருத்துத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இது குறித்து கருத்து தெரிவித்த பெங்களூர் றோயல் சலஞ்சர்ஸ் அணியின் முகாமையாளர், போட்டியின் தன்மைக்கு ஏற்ப முடிவு எடுப்பது அணித் தலைவரின் பொறுப்புதான். இருப்பினும் இதில் ஒருவேளை நாம் வென்றிருந்தால் இவ்வாறான விமர்சனம் எழுந்திருக்க வாய்ப்பில்லை என்றார்.



## அறுவைச் சிகிச்சை வெற்றி

புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த பிரான்ஸ் மற்றும் பார்சிலோனா அணிகளின் வீரர் எரிக் அபிடால்(வயது - 32) என்பவருக்கு கல்லீரல் மாற்று அறுவைச் சிகிச்சை வெற்றிகரமாக நடந்தது. இவருக்கு ஏற்கனவே அறுவைச் சிகிச்சை மூலம் கல்லீரலில் இருந்த கட்டி அகற்றப் பட்டது. ஆனாலும் அபிடாலுக்கு கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைச் செய்வது நல்லது என்று மருத்துவர்கள் அறிவுறுத்தியிருந்தனர். அவருக்கு தனது கல்லீரலின் ஒரு பகுதியை தர அபிடாலின் நெருங்கிய நண்பர் முன்வந்தார்.

இதனையடுத்து அபிடாலுக்கு பார்சிலோனாவில் உள்ள பர்னா மருத்துவமனையில் சுமார் 8 மணி நேரம் அறுவைச் சிகிச்சை நடந்தது. மிகக் கவனமாக கண்காணித்து வரவேண்டும் என்று அறுவைச் சிகிச்சை செய்த மருத்துவர்கள் கூறியுள்ளனர்.

## முதல் வீரர்

(பஞ்சாப்)

முன்னாள் பாகிஸ்தான் சகலதுறை வீரரும் இந்நாள் பிரிட்டிகூஷ் குடிமகனுமான அசார் மஹ்மூதிற்கு வீசா வழங்கப்பட்டது.

அவர் ஐ.பி.எல். கிரிக்கெட்டில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணியில் விளையாடுகிறார்.

இதனை கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணித் தலைவர் கில்கிறிஸ்ட் அறிவித்தார்.

இந்த ஐ.பி.எல். சீசனில் விளையாடவிருக்கும் முதல் பாகிஸ்தான் வீரராக இவர் இருப்பார்.

## மெய்வன்மைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

அண்ணாசிலையடி இளைஞர் விளையாட்டுக் கழகம் நடாத்தும் வருடாந்தா இல்ல மெய்வன்மைப் போட்டி நாளை பிற்பகல் 2.00 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கழகத் தலைவர் க. ரவிச்சந்திரன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக தேசிய சேமிப்பு வங்கியின் ஓய்வுபெற்ற சிரேஷ்ட முகாமையாளர் மா. பரந்தாமன் கலந்து கொள்ளவுள்ளார். (12)

## சுழற்பந்து வீச்சாளர் இணைப்பு

அவுஸ்ரேலிய அணிக்கெதிரான இரண்டாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டிக்கான மேற்கிந்தியத் தீவுகள் அணியில் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் ஷில்லிங்போர்ட் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

அடுத்த போட்டிக்காக மேற்கிந்தியத் தீவுகள் அணியில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஒரு மாற்றமாக இது கருதப்படுகின்றது.

இதுவரை மேற்கிந்தியத் தீவுகள் சார்பில் 5 போட்டிகளில் அவர் விளையாடியுள்ளார்.

2010 ஆம் ஆண்டு இலங்கை அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் அவர் இறுதியாக விளையாடிருந்தார்.

இரு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி நாளை நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இது குறித்து கருத்து தெரிவித்த ஷேன் ஷில்லிங் போர்ட்: அணியின் இடம் கிடைத்திருப்பதில் மகிழ்ச்சி. குறுகிய கால இடைவெளியில் திறகைளை வெளிப் படுத்தி அணியில் நிரந்தர இடம்பிடிப்பது கடினமானது. இதனை தேர்வாளர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவேண்டும். வாய்ப்பை பயன் படுத்தி நிரந்தர இடம்பிடிக்க முடிந்த வரை முயற்சிப்பேன். அதற்காகக் கடுமையான பயிற்சிகளையும் மேற்கொண்டு வருகின்றேன்.



## ஐ.பி.எல். மீது பொறாமை

(புதுடில்லி)

ஐ.பி.எல். கிரிக்கெட் மீது இங்கிலாந்தில் பொறாமை ஏற்பட்டுள்ளது என்று அந்த நாட்டு கிரிக்கெட் வீரர் கேவின் பீற்றர்சன் கூறியுள்ளார்.

இங்கிலாந்தில் ஐபிஎல் தொடர்பாக எதிர்மறையான கருத்துகள் எழுந்துள்ளன. இதற்கு பொறாமைதான் காரணம். இங்கிலாந்து பத்திரிகைகள் ஐ.பி.எல்.லுக்கு எதிரான செய்திகளையே அதிக முக்கியத்துவம் கொடுத்து வெளியிடுகின்றன. இது கவலையளிக்கும் விடயம்தான் என்று பீற்றர்சன் கூறியுள்ளார்.

இங்கிலாந்தில் இருந்து வெளிவரும் கிரிக்கெட் பத்திரிகையான விஸ்டன், சமீபத்தில் ஐ.பி.எல். கிரிக்கெட்டை குறை கூறியிருந்தது. ஐபிஎல் போட்டியால் சர்வதேச டெஸ்ட் போட்டிகள் பாதிக்கப்படுகிறது. இங்கிலாந்து, அவுஸ்ரேலியாவில் இந்திய அணி டெஸ்ட் போட்டிகளில் தொடர்ந்து தோல்வியடைந்ததற்கு ஐ.பி.எல்.லும் ஒரு காரணம் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

## ஹொக்கி பரீட்சையும் பொதுக்கூட்டமும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஹொக்கி சங்கத்தினால் நடத்தப்படும் ஹொக்கி நடுவர்களுக்கான பரீட்சையும் வருடாந்தப் பொதுக்கூட்டமும் நாளை கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

ஹொக்கி நடுவர்களிற்கான பரீட்சை நாளை பிற்பகல் 2.00 மணிக்கு நடைபெறவுள்ளதுடன், ஹொக்கிச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் பிற்பகல் 4.00 மணிக்கும் நடைபெறவுள்ளது.

வருடாந்தப் பொதுக்கூட்டத்தில்யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கத்தில் அங்கம் வகிக்கும் கழகங்களிலிருந்து இரண்டு பிரதிநிதிகளைக் கலந்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட ஹொக்கிச் சங்கச் செயலாளர் தெரிவித்துள்ளார். (12)

## 7 வீரர்கள் ஒலிம்பிக்கிற்குத் தகுதி

இளம் இந்திய குத்துச்சண்டை வீரர்கள் ஷிவா தபா (56 கி.கி.) மற்றும் சுமித் சங்வான் (81கி.கி.) ஆகியோர் லண்டன் ஒலிம்பிக்கிற்குத் தகுதி பெற்றதன் மூலம் முதன் முறையாக இந்தியாவிலிருந்து 7 வீரர்கள் ஒலிம்பிக் போட்டி குத்துச் சண்டைக்கு தகுதி பெற்றுள்ளனர்.

மன்பிரீத் சிங் (91 கி.கி.) பரம்ஜீத் சமோடா(91 கி.கி) ஆகியோர் தகுதி பெறமுடியவில்லை.


வெண்கலம் வென்ற விஜேந்தர் சிங் லண்டன் ஒலிம்பிக்கிற்கு ஏற்கனவே தகுதி பெற்றார்.

நேற்று முன்தினம் 56 கி.கி., எடைப் பிரிவு அரையிறுதியில் இந்தியாவின் ஷிவா தபா, ஜப்பானின் சடோஷி சிமிஜுவை சந்தித்தார். இதில் அபாரமாக ஆடிய ஷிவா தபா 31-7 என்ற கணக்கில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு முன்னேறினார்.

இந்த வெற்றியின் மூலம், ஷிவா தபா லண்டன் ஒலிம்பிக் போட்டியில் விளையாடும் வாய்ப்பை பெற்றார். இதன்மூலம் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்ற, இளம் (18 வயது) இந்திய குத்துச்சண்டை வீரர் என்ற புதிய வரலாறு படைத்தார்.

கடந்த ஆண்டு உலக குத்துச்சண்டை சம்பியன்ஷிப் தொடரில் அசத்திய தேவேந்திரா சிங் (19 வயது), லண்டன் ஒலிம்பிக் போட்டியில் விளையாடும் வாய்ப்பை பெற்றார். இதன்மூலம் ஒலிம்பிக் போட்டிக்கு தகுதி பெற்ற இளம் இந்திய வீரர் என்ற பெருமையை, 1996இல் அட்லாண்டாவில் நடந்த ஒலிம்பிக்கில் விளையாடிய தேபேந்திரா சிங்குடன் பகிர்ந்து கொண்டார். இவர்களது சாதனையை, ஷிவா தபா முறியடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முதலாவது வெற்றியை பெற்றது கிங்ஸ் லெவன்



ஐ.பி.எல் லீக் போட்டியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப் அணி, கங்குலி தலைமையிலான புனே வாரியர்ஸ் அணியை 7 விக்கெட் வித்தியாசத்தில் மிகச் சுலபமாக வென்றது.

மொகாலியில் நேற்று முன்தினம் நடந்த ஐந்தாவது ஐ.பி.எல் தொடரின் 14ஆவது லீக் போட்டியில் கிங்ஸ் லெவன் பஞ்சாப், புனே வாரியர்ஸ் அணிகள் மோதின.


இதில் முதலில் களமிறங்கிய புனே அணியின் துடுப்பாட்ட வீரர்கள் சொதப்பினர். மூன்றாவது ஓவரில் ஜெசிரைடர்(7) ஆட்டமிழந்தார். இதற்குப் பின் டிமிட்ரி மாஸ்கரானஸ் மிரட்டினார். இவரது வேகத்தில் முதலில் அணித்தலைவர் கங்குலி(16) காலியானார்.

இதே ஓவரில் மர்லான் சாமுவேல்சையும்(2) வெளியேற்றினார். ஹர்மீத் சிங் பந்தில் மாத்யூஸ்(11) வீழ்ந்தார். மீண்டும் பந்துவீச வந்த மாஸ்கரானஸ் இம்முறை உத்தப்பாவை(17) ஆட்டமிழந்தார்.

ஸ்டீவன் ஸ்மித்(13), மனிஷ் பாண்டே(0) ஏமாற்றினர். போட்டியின் 18ஆவது ஓவரை வீசிய மாஸ்கரானஸ், போராடிய மன்ஹாஸ்(31), ராகுல் சர்மாவை(2) வெளியேற்றி, மொத்தம் ஐந்து விக்கெட்டுக்களை கைப்பற்றினார். புனே அணி 19 ஓவரில் 115 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

சுலப இலக்கை விரட்டிய பஞ்சாப் அணிக்கு தொடக்கத்தில் அதிர்ச்சி காத்திருந்தது. டிண்டா வீசிய முதல் பந்தில் வல்தாட்டி(0) போல்டானார். பின் கில்கிறிஸ்ட், ஷான் மார்ஷ் இணைந்து பவுண்டரிகளாக விளாச, பஞ்சாப் அணி உரிமையாளரும் நடிகையுமான பிரித்தி ஜிந்தா உற்சாகத்தில் மிதந்தார்.

கில்கிறிஸ்ட் 21 ஓட்டங்களுக்கு வெளியேறினார். மன்தீப் சிங்(10) ஏமாற்றினார். அசத்தல் ஆட்டத்தை தொடர்ந்த மார்ஷ் அரைசதம் கடந்தார். பஞ்சாப் அணி 17.4 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 116 ஓட்டங்கள் எடுத்து முதல் வெற்றி பெற்றது. மார்ஷ் 64 ஓட்டங்களுடனும், பியுஸ் சாவ்லா 21 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர். ஆட்ட நாயகன் விருதை மாஸ்கரானஸ் வென்றார்.



# ஜப்பானிடமிருந்து கற்றுக்கொள்வோம்!

- கார்த்தி -

**பி**ரிட்டிஷ் தொழிலதிபர் ஒருவர் ஜப்பானில் முதல்வகுப்பு ரயிலில் பயணம் செய்துகொண்டிருந்தார். அப்போது அவருக்கு எதிர் ஆசனத்தில் அமர்ந்திருந்த ஜப்பானிய முதியவர் ஒருவர் கிழிந்திருந்த தனது ஆசனத்தை அக்கறையுடன் தைத்துக்கொண்டிருந்தார். இதனை அவதானித்த பிரிட்டிஷ் தொழிலதிபர், "நீங்கள் என்ன செய்துகொண்டிருக்கிறீர்கள்?" என்று கேட்டார். அதற்கு அந்த முதியவர் சிரித்துக்கொண்டே,



"இந்த ரயில் எங்களுடைய தேசியச் சொத்து. ஆகவே இது என்னுடைய சொத்து, அதனால் என்னுடைய சொத்தை நான் பாதுகாக்கின்றேன்" என்று பதிலளித்தார். அந்த முதியவர் மட்டுமல்ல சராசரி ஜப்பானியர் ஒவ்வொருவரின் மனோபாவமும் இதுதான்.

2011ஆம் ஆண்டு மார்ச் 11ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலை மற்றும் நிலநடுக்கம் காரணமாக நான்கு அணு உலைகள் வெடித்து சிதறியதில் பாரிய பொருளாதார அழிவை எதிர்நோக்கியிருந்த ஜப்பான் சற்றும் கவலைப்படவோ, தனது முயற்சிகளில் பின்வாங்கவோ இல்லை. அடுத்தது என்ன? தொடர்ந்தும் முன்னேற்றப் பாதையில் ஓட ஆரம்பித்துவிட்டது.

இரண்டாம் உலக யுத்தத்தின் போது அமெரிக்காவினுடைய அணு குண்டு வீச்சில் ஏராளமான பொருளாதாரச் சேதம், இலட்சக் கணக்கில் மனித உயிர்கள் பலி, விவசாயம் அடியோடு அழிந்தது. ஜப்பானின் ஹிரோசிமா நகரமே சாம்பல் மேடாகக் காட்சியளித்தது. யாரும் எதிர்பார்த்திருக்கவில்லை ஜப்பான் பொருளாதார வளர்ச்சியில் உச்சத்தை தொடும் என்று. தோல்வியைக் கண்டு துவளாத ஜப்பான் மக்கள் உழைக்க வேண்டும் என்ற ஊக்கமுடையவர்கள். அதுமட்டுமல்ல நாட்டின்மீது பற்றுக்கொண்டவர்கள்.

அவர்களின் முயற்சி, கடின உழைப்பால் வளமற்ற நாடாக இருந்த ஜப்பான் தமது தொழில்துறையில் நவீன உத்திகளைக கையாண்டு தரமான பொருட்கள், மலிவான விற்பனை, நீடித்த உழைப்பு, சந்தைவாய்ப்பு போன்[illegible]ல் துரித வளர்ச்சி கண்ட[illegible]

1990இற்குப் பின்பு [illegible]ாதார வளர்ச்சியில் முதலாம் இடத்திலிருந்த அமெரிக்காவை இரண்டாம் இடத்திற்கு பின்தள்ளியது. அதுமட்டுமன்றி கடிகாரத் தொழிலில் முன்னணியிலிருந்த சுவிட்சர்லாந்தினுடைய தொழில் நுணுக்கங்களை கூர்ந்து கவனித்து, கடிகார உற்பத்தியையும் தன்வசமாக்கிக் கொண்டது.

- தொழில் ஒன்றை ஆரம்பிக்கும் போது அது வலுவான அமைப்பை பெறும் வரையில் பாதுகாப்பு வழங்குவது.
- கேந்திரமான தொழில்கள் எது என்பதை நிர்ணயம் செய்து அவற்றைப் பலப்படுத்துவது.
- ஏற்றுமதிக்கான வாய்ப்புள்ள தொழில்களைக் கண்டறிந்து அவற்றுக்கான சந்தை வாய்ப்பினை வெளிநாடுகளில் தேடிக்கொடுப்பது.

இந்த மூன்று விடயங்களுமே ஜப்பான் பொருளாதார வளர்ச்சிக்கு அசைக்க முடியாத தூண்களாக காணப்படுகின்றன.

ஜப்பானைப் பொறுத்தவரையில் அங்கு செயற்படும் தொழில்கள் அனைத்தும் சர்வதேச சந்தையைக் கவனத்தில் கொண்டே செயற்பட வேண்டும். இதை அந்நாட்டு சர்வதேச வர்த்தக அமைச்சு அக்கறையோடு கவனித்துக் கொள்கின்றது.

ஜப்பானின் வளர்ச்சியில் இளைஞர்கள்தான் முக்கிய பங்கு வகிக்கின்றனர். தேசத்தின் முன்னேற்றத்தில் தன்னுடைய முன்னேற்றமும் அடங்கியிருக்க வேண்டும் என ஒவ்வொரு இளைஞனும் எண்ணு



கின்றான். அதனால்தான் அவர்கள் உத்தியோகங்களுக்குச் செல்லுவதில் காட்டுகின்ற அக்கறையைவிட சுயமாக ஒரு தொழிலை தொடங்குவதிலேயே அதிக அக்கறை காட்டுகின்றனர். இவர்கள் உல்லாசப் பொழுதுபோக்கிற்காக செல்வதைவிட பல்வேறு நாடுகளின் தொழில் நுணுக்கங்களை அறிந்துவருவதற்காகவே வெளிநாட்டுப் பயணங்களை மேற்கொள்கின்றனர். அதுமட்டுமன்றி,

- மனித சக்தியை உயர்ந்ததாக மதிக்கின்ற தன்மை.
- திறமை, அறிவு, இலாபம் என்பவற்றை தமது நாட்டிற்கே வழங்கவேண்டும் என்ற எண்ணம்.
- தொழில் வளர்ச்சிக்காக எந்த புதிய திட்டங்களையும் ஏற்றுக் கொள்ளும் மனோபாவம்
- உலகெங்குமிருந்து தொழில் நுணுக்க முறைகளை இரவல் வாங்கிப் பயன்படுத்துவதற்கு கூச்சப்படுவதில்லை.
- கூட்டு முயற்சியில் அசைக்கமுடியாத நம்பிக்கை.
- சிறுபான்மை, பெரும்பான்மை, ஏழை, பணக்காரன் என்ற பாரபட்சம் இன்மை.
- சேமிக்கும் மனப்பான்மை.
- ஒரு குடும்பம் போல செயற்படும ஜப்பானின் நிர்வாகம்.

என ஜப்பான் அரசாங்கம் மற்றும் மக்களுடைய மாறுபட்ட சிந்தனைகளும், நோக்கங்களுமே ஜப்பானுடைய இந்த அசுர வளர்ச்சியின் இரகசியம்.

ம்ம்... ஜப்பானுடைய இந்த வளர்ச்சி அதிசயம்தான் என்று பெருமூச்சு விட்டால் மட்டும் போதுமா? அவ்வாறு இலங்கையால் முன்னேற முடியாதா? நாட்டில் நிலவிய யுத்தத்தால் எமக்கும் நேர்ந்தது மோசமான அழிவாக இருந்தாலும் ஜப்பானுடன் ஒப்பிடுகையில் அழிவுகள் குறைவுதான்.

நடந்ததை மீண்டும் மீண்டும் நினைப்பதில் செலவிடும் காலத்தை நாட்டை அபிவிருத்தியடையச் செய்ய நான் என்ன செய்யவேண்டும் என சிந்திப்பதற்கு செலவிட்டால் போதும் இலங்கையும் பொருளாதார வளர்ச்சி கண்டுவிடும். அதற்காக ஜப்பானுடைய சிந்தனைகள், நோக்கங்கள், தொழில் நுணுக்கங்கள், விடாமுயற்சிகள் என ஒவ்வொரு விடயத்தையும் நாம் கற்றுக்கொள்வதில் தவறில்லை.

## "ரசமட்டம்" என்ற பெயரில் புதுமைப்பித்தன் எழுதிய நூல்மதிப்புரைகளிலிருந்து...



() இதைப் பாடப் புத்தகமாக வைக்கலாம். ஏனென்றால் கற்றுக் கொடுப்பவருக்கும் கற்றுக் கொள்கிறவர்களுக்கும் பரஸ்பரம் புரிந்துகொள்ளாமல் பேசிக் கொண்டிருப்பதற்கு ஏற்றதொரு சாதனமாகத்தானே பாடப் புத்தகம் உபயோகிக்கப்பட்டு வருகிறது.

() இந்த நாடகத்தின் ஹாஸ்ய பாகங்கள் எனப்படுபவை சிரிக்க வேண்டும் என்ற கட்டாயத்திற்காக, நோயல் கவர்ட் சரக்குகள் போல் அர்த்தமற்ற கதைப்பு. சிரிக்க வேண்டும் என்ற கட்டாயம் இருந்தால் இதைவிட பரஸ்பரம் "கிச்சுகிச்சு" மூட்டிக்கொள்வது சுலபமான வழி.

() கட்டுரைகளின் நடை சரஸமானது - பாரதிக்குக் கேட்க வேண்டுமா? தென்றல் தூவினாற்போல் சிற்சிறு கனவு பொதிந்த வாக்கியங்கள், அவர் கவிஞன் என்பதை அடிக்கடி ஞாபகப்படுத்துகின்றன.

() "திருமுருகாற்றுப்படையை எவர் பாராயணம் செய்யினும், அவர் வியாதி, கவலை, வறுமை, மகப்பேறின்மை முதலிய துன்பம் நீங்கி வேண்டிய வேண்டியாங்கு எய்துவர் என்பது அத்தொண்டர்களது துணிந்த கொள்கையும் அனுபவமும் ஆகும்.'' என்று ஸ்ரீ ராமச்சந்திரய்யர் கூறுகிறார். பக்தி எல்லையை இவ்வளவு குறுகலாக வைத்துக்கொள்ள வேண்டாம் என்பதை தெய்வ கட்சியைச் சார்ந்தவர்கள் கூட ஒப்புக்கொள்ளுவார்கள். தெய்வபக்தி பிள்ளை பெறுவதற்கு உபயோகப்படும் சிட்டுக்குருவி லேகியம் அல்ல.

## ஹீரோக்களுக்கு இணையாக!



**கா**ஜல் அகர்வால் நடித்து வரும் துப்பாக்கி, மாற்றான் ஆகிய இரண்டு படங்களுமே தமிழ் மற்றும் தெலுங்கு மொழிகளில் தயாராகி வருகிறது. தெலுங்கில் காஜலுக்கு இருக்கிற வரவேற்பைக் கருத்தில் கொண்டு, கதையில் அவருக்கு ஹீரோக்களுக்கு இணையான முக்கியத்துவம் கொடுத்துள்ளனர். அதுமட்டுமின்றி, ஹீரோக்களுக்கு இணையான சம்பளமும் காஜலுக்கு கைமாறியுள்ளது. அதிர்ஷ்டம் ஆறாய் பெருகுகிறது!

## அறியாமை!



**நா**ம் நாட்டுப்பாடலைப் பாதுகாக்கிறோம். ஆனால் அந்த நாட்டுப் பாடல்கள் உருவான ஒரு வாழ்க்கை முறையை அழிக்கிறோம். மியூசியம் தோறும் நாம் அந்தப் பாரம்பரிய வாழ்ககையைக் காட்டுவதில் பெருமைப் படுகிறோம், ஆனால் அந்த வாழ்க்கையை வாழவொண்ணாதவாறு நாம் செய்து விட்டோம்...

பாரம்பரிய ''காட்டுமிராண்டி'' வாழ்க்கை முறை "அறிவுபூர்வமானதல்ல" என்று நமக்குத் தோன்றலாம். நம் நடைமுறைக்கு ஒவ்வாததாய் நமக்குத் தோன்றலாம். தெய்வீகம் என்று எண்ணம் கொண்ட பாரம்பரியப் புரிதல்கள் நம் லௌகீகத்துடன் ஒத்துப் போகாதது என்றும் தோன்றலாம். அவனுடைய வாழ்க்கை முறையைப் புரிந்து கொள்ளாத நம் அறியாமையைக் காட்டிலும், காரண காரியங்கள் அறியாத அவன் அறியாமை ஒன்றும் பெரிதல்ல.

- ஆனந்த குமாரஸ்வாமி.

## சென்னைவாசியானார் அமலாபால்!



**மை**னாவுக்கு பிறகு, அமலாபால் நடித்த எந்தப் படமும் வெற்றி பெறாத போதும், அவரது தமிழ் சினிமா மார்க்கெட் எகிறி நிற்கிறது. சம்பளமாக 50 இலட்சம் ரூபாயைத் தொட்டு விடும் நிலையில் இருக்கிறார். இந்நேரத்தில், அண்டை மாநில படங்களில் நடித்தால், தமிழில் கிடைத்த இடம் பறிபோய் விடக்கூடும் என்று, மற்ற மொழிப் படங்களை தவிர்க்கிறார். அதோடு, சென்னைக்கும், கொச்சிக்கும் விமானத்தில் பறப்பதையும் நிறுத்தி, தற்போது, சென்னை தி.நகரில் சொந்த வீடு வாங்கி குடியேறி விட்டார். கரும்பு உள்ள போதே ஆலை கட்டிக்கொள்!

# ஆற்றேன் அடியேன்

- அ.முத்துலிங்கம் -



சமீபத்தில் மின்னஞ்சலில் ஓர் ஓவியர் தொடர்பு கொண்டார். பத்திரிகைகளில் வரும் என்னுடைய சிறுகதைகளுக்கு, தான் படம் வரைந்திருப்பதாகக் கூறினார். என்னுடைய முதல் கேள்வி “உங்களுக்கு சன்மானம் உண்டா?” என்பதுதான். அவர் “உண்டே” என்று மட்டும் பதிலளித்தார். எவ்வளவு சன்மானம் என்று நாகரிகம் கருதி நான் கேட்கவில்லை. அவரும் சொல்லவில்லை.

ஆனால் பத்திரிகை ஆசிரியர் என்னிடம் சொன்னது நினைவுக்கு வந்தது. “எங்கள் பத்திரிகையில் எழுதுவதால் உங்களுக்கு பேரும் புகழும் கிடைக்கிறது. நாங்கள் எழுத்தாளருக்கு சன்மானம் எதுவும் வழங்குவதில்லை.” அது நல்ல சமாதானமாகத்தான் பட்டது. ஆனால் ஓவியக்காரருக்கு மட்டும் பேரும் புகழும் கிடைப்பதோடு சன்மானமும் கிடைத்தது. இது எப்படி நியாயம் என்பது எனக்கு தெரியவில்லை.

“எதற்காக சிறுகதைகளுக்கு ஓவியம் வரைகிறார்கள்?” என்று அதே பத்திரிகாசிரியரிடம் கேட்டேன். அவர் சொன்னார், “ஒரு நல்ல சித்திரம் வாசிப்பை தூண்டுகிறது” என்று. “சித்திரமே இல்லாவிட்டால் வாசகர் என்ன செய்வார்?” என்று கேட்டேன். அவர் “வாசகர் வாசிக் காமல் போகக்கூடும்” என்றார்.

“வாசகர்கள் படங்களைப் பார்த்து ஈர்க்கப்படுகிறார்கள் என்றால் படங்களை மாத்திரம் பிரசுரிக்கலாமே?” எனக் கேட்டேன். அதற்கு அவரிடம் பதில் இல்லை.

அவர் தன் பத்திரிகையில் படம் வரையும் ஓவியர் ஒருவருக்கு கொடுப்பதாகச் சொன்ன பணம் நான் என் வாழ்நாளில் சிறுகதை ஒன்றுக்கு பெற்ற ஆகக்கூடிய சன்மானத்திலும் பார்க்க இரண்டு மடங்கு அதிகமானது. ஆனால் கட்டுரையையோ கதையையோ எழுதியவருக்கு ஒரு சதம்கூட கொடுக்காமல் இருப்பது அவருக்கு குற்றமாகத் தெரியவில்லை.

ஒரு படத்தை காட்டி வாசகரை இழுத்து என் கட்டுரையையோ கதையையோ படிக்க வைப்பது எனக்கு பெரிய இழுக்காகப் பட்டது. என்னை என்றுமில்லாத விதமாக ஒருவிதமான துக்கம் ஆட்கொண்டது. (இதே கட்டுரையோ சிறுகதையோ புத்தகமாக வெளிவரும்போது அங்கே சித்திரங்கள் ஒன்றுமே இரா என்பது நினைவுக்கு வந்தது. புத்தகத்தை வாங்கும் வாசகர்கள் அதில் உள்ள எழுத்தை மட்டுமே படிப்பதற்கு வாங்குகிறார்கள். அது பெரிய ஆறுதல்.)

சித்திரக்காரருக்கு சன்மானம் வழங்கும் பத்திரிகை அந்தக் கதையையோ கட்டுரையையோ கவிதையையோ எழுதிய ஆசிரியருக்கும் சன்மானம் வழங்கவேண்டும். இல்லையேல் இருவருக்கும் ஒன்றுமே வழங்காமல் இருக்கலாம். ஆனால் சித்திரக்காரருக்கு கொடுத்து ஆசிரியரை நிராகரிப்பது உச்சகட்டமான அவமானம் என்றுதான் எனக்குப் பட்டது.

முதலாம் உலக யுத்தம் நடந்தபோது ஒரு போர்வீரனிலும் பார்க்க குதிரை பெறுமானம் உள்ளதாகக் கருதப்பட்டது. ஒரு போர்வீரனும் குதிரையும் ஆபத்தில் இருந்தால் முதலில் குதிரை காப்பாற்றப்பட்டது, பின்னர்தான் போர்வீரன்.


குதிரை பீரங்கியை இழுக்கும், இராணுவத்துக்கு தேவையான உணவுப் பொதிகளைக் காவும். போர்வீரனைக் ஏற்றிக்கொண்டு நீண்ட தூரம் பயணம் செய்யும். இதுவெல்லாம் போக உணவு தீர்ந்த சமயத்தில் குதிரையைக் கொன்று சமைத்து சாப்பிடக்கூடியதாக இருக்கும். அது போலத்தான். சித்திரக்காரர் ஓர் எழுத்தாளரிலும் பார்க்க மதிப்பாக பார்க்கப்படுகிறார்.

தமிழ்ப் புலவன் எந்தக் காலத்திலும் மதிக்கப்பட்டது கிடையாது. அதியமான் நெடுமான் அஞ்சியின் வாசலில் நெடுங்காலம் நின்று வெறுங்கையோடு திரும்பிப்போன ஔவையாரின் நினைவு வந்தது. 2000 வருடமாக வாசலில் நின்று பழகிவிட்டது. தமிழ் படைப்பது என்றால் அப்படித்தான். ஆற்றேன் அடியேன்.

# ஏன் இந்தப் புனைபெயர்?

⌘ மனுஷ்யபுத்திரன் ஸ்ரீ அப்துல் ஹமீத்

வானம்பாடிக் கவிஞர்கள் அக்கினிபுத்திரன், கங்கை மைந்தன் என்றெல்லாம் பெயர்கள் வைத்துக் கொண்டதில் கவரப்பட்டார். வானொலி



மனுஷ்யபுத்திரன்

நாடகம் ஒன்றின் பெயரைக் கேட்டு அதையே புனைபெயராக்கிக் கொண்டார்.

⌘ எம்.யுவன் - சந்திரசேகர்

எம்.யுவன் என்பதில் எம். என்ற எழுத்து அவருக்கு மட்டுமே உரிய அந்தரங்கமாம்!

⌘ அஸ்வகோஷ் - இராசேந்திரசோழன்

கி.பி. முதல் நூற்றாண்டில் கனிஷ்கர் காலத்தில் வாழ்ந்த சமஸ்கிருத அறிஞரின் பெயர். புகழ்பெற்ற புத்தமத வாதியாகவும், கடவுள் மறுப்புக் கொள்கை உடையவராகவும் இருந்தவர். இந்தியாவின் முதல் நாடக ஆசிரியர்.

⌘ தேவதச்சன் - ஆறுமுகம்

எனக்குள் பிறந்த ஆய்வு மனிதனுக்கு ஒரு பெயர் தேவைப்பட்டது. தேவர்களின் தச்சனான மயனைச் சுட்டும் பெயரை வைத்துக் கொண்டேன் என்கிறார்.

⌘ இன்குலாப் - சாகுல் ஹமீத்

பகவத்சிங் நினைவாக மகனுக்கு வைத்த பெயரையே தனது புனைபெயராக்கிக் கொண்டார்.

⌘ புவியரசு - ஜெகநாதன்

ஜெகநாதன் என்பதன் தமிழ் வடிவமே இவரது புனைபெயர்.

⌘ ஞானக்கூத்தன் - அரங்கநாதன்

திருமந்திரத்திலிருந்து இந்தப் பெயரை எடுத்தார். கூத்தன் என்பதற்கு சிவன் என்பது தவிர, “உயிர்” “ஆத்மா” என்றும் பொருள் உண்டு.

⌘ விக்ரமாதித்யன் - நம்பிராஜன்

காதலித்த பெண்ணின் நினைவாக “சங்கரி மணாளன்” என்ற பெயரிலும் எழுதியவர். அம்புலிமாமாவில் வேதாளம் விக்ரமாதித்தனுக்குச் சொன்ன கதையின் ஞாபகத்தில் இந்தப் பெயர்.

⌘ கலாப்ரியா - டி.கே.சோமசுந்தரம்

நிலவுக்கு “ரோகிணிப்ரியா” என்றும் பெயருண்டு. அதிலுள்ள ப்ரியாவும், நேசித்த பெண்ணின் பெயரையும் சேர்த்து இந்தப் பெயரை வைத்துக் கொண்டார். கலையின் மீது பிரியமானவன் என்றும் பொருள்.



கலாப்பிரியா

⌘ இமையம் - அண்ணாமலை

உயர்ந்தும் புனிதமுமான மலையின் பெயர்.

⌘ இளைய பாரதி - பாலசுப்ரமணியன்

பால - இளைய, சுப்ரமணியன் - பாரதி.

⌘ விழி.பா.இதயவேந்தன் - அண்ணாதுரை

விழுப்புரத்துக்கு “விழிமாநகரம்” என்றும் ஒரு பெயர். அதில் “விழி”. அப்பா பெயர் பாவாடை. அதில் “பா”. வேந்தன் என்று பெயர் வைப்பது அப்போது பிரபலமாயிருந்தது.

⌘ தமிழ்நாடன் - சுப்ரமணியன்

வானம்பாடிக்காரர். சங்க இலக்கியங்களில் அதிகம் காணப்படும் சோழநாடன், வளநாடன் தாக்கத்தில் இப்பெயரை வைத்துக் கொண்டார்.

⌘ கோணங்கி - இளங்கோ

பாரதியின் “புதிய கோணங்கி”தான் பெயருக்குக் காரணம்.



கோணங்கி

⌘ சுஜாதா - எஸ்.ரங்கராஜன்

இவர் ஊர்க்காரரான கவிஞர் வாலி உட்பட ஏகப்பட்ட ரங்கராஜன்கள் இருந்ததால் மனைவி பெயரைப் புனைபெயராக வைத்துக் கொண்டார்.

## மாதவன் மாதிரி கணவர்!



ஹிந்தி நடிகர் ஜோன் ஆபிரகாமை ஒன்பது ஆண்டுகளாக காதலித்து வந்தவர் பிபாஷாபாசு. ஆனால், தற்போது, அவர்களது காதலில் விரிசல் ஏற்பட்டுள்ளது. அதனால், திருமணம் செய்து கொள்ள, வேறு மாப்பிள்ளை பார்த்து வருகிறார். அந்த மாப்பிள்ளை, நடிகர் மாதவனைப் போல் அழகுடையவராகவும் குணமுடையவராகவும் இருக்க வேண்டுமென்று கூறியுள்ளார் பிபாஷா. அந்த அளவுக்கு, ஒரு இந்தி படத்தில் இணைந்து நடித்தபோது, தன்னை மாதவன் கவர்ந்து விட்டதாக வெளிப்படையாக சொல்கிறார். அப்படி என்ன மயக்கினீர்கள் என்று கேட்டால் வெட்கப்படுகிறார் மாதவன்.

## மீண்டும் எஸ்.ஜே.சூர்யா!



வாலி, குஷி போன்ற வெற்றிப்படங்களை இயக்கிய எஸ்.ஜே.சூர்யா தற்போது, இசை என்றொரு படத்தை இயக்கி நடிக்கும் முயற்சியில் உள்ளார். இதில், தனக்கு ஜோடியாக நடிக்க அனுஷ்கா, அமலா பால் போன்ற நடிகைகளிடம் கேட்டார். ஆனால் அவர்கள், இந்தாண்டு முழுக்க திகதி இல்லை என்று கூறி விட்டதால், இப்போது லட்சுமி ராயை ஒப்பந்தம் செய்துள்ளார். கௌரவ வேடத்தில் நடிப்பதற்கு, அஜித் அல்லது விஜய்யிடம் கேட்க இருக்கிறாராம் எஸ்.ஜே.சூர்யா.



# மனுதர்மத்திற்கு விரோதமான ஆட்கடத்தல் சம்பவங்கள்

## கவலை கொள்கிறார் ரஞ்சித் ஆண்டகை

(கொழும்பு)

கடத்தல் என்பது மனித விழுமியங்களுக்கு புறம்பானது என அதி வணக்கத்திற்குரிய கொழும்பு மறைமாவட்ட பேராயர் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

மாற்று அரசியல் கொள்கைளை வகிக்கும் காரணத்திற்காக ஒருவரை கடத்துவது மனுதர்மத்திற்கு விரோதமானது. இவ்வாறான நடவடிக்கைகள் சகல சமயக் கொள்கைகளுக்கும் புறம்பானது.

நாட்டின் பொதுவான சட்டத்திற்கு புறம்பான வகையில் எவரேனும் செயற்பட்டால் அவர்களுக்கெதிராக நீதியின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். சட்டவிரோதமான முறையில் எவரையும் தண்டிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. இது மிகவும் ஆபத்தான சூழ்நிலையாகும்.

1970 ஆம் ஆண்டின் பின்னர் ஆட்சி செய்த அரசாங்கங்களும், அரசியல் கட்சிகளும், ஆயுதக் குழுக்களும் மாற்றுக் கொள்கைகளை உடைய தரப்பினரைக் கடத்திச் சென்று கொலை செய்து பொது இடங்களில் சடலங்களை காட்சிப்படுத்தும் கலாசாரத்தை பின்பற்றி வருகின்றமை மறைகக முடியாத உண்மையாகும். 1980, 90 களில் இந்த நிலைமை மிக மோசமாகக் காணப்பட்டது.

அரசியல் கட்சி உறுப்பினர்களையும், பாதாள உலகக் குழுத் தலைவர்களையும் கடத்துவதும், கொலை செய்வதுமான சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. தமிழ், சிங்கள ஆயுதக் குழுக்களின் படுகொலைகளையும் குறிப்பிட்டாக வேண்டும்.

தமிழ் சிங்கள அரசியல் தலைவர்கள் இவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

எனினும், இந்தச் சம்பவங்கள் பற்றி உரியமுறையில் விசாரணைகள் நடத்தப்படவில்லை. குற்றவாளிகளுக்கு சட்டரீதியாக தண்டனை வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவானதே என அவர் தெரிவித்துள்ளார்.

# கொடுப்பனவு அதிகரிப்பு

(கொழும்பு)

முதியோருக்கு வழங்கப்படும் பொது மக்கள் உதவிக் கொடுப்பனவை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கவுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா அறிவித்துள்ளார்.

இந்த நடைமுறையானது அடுத்த மாதம் முதல் அமுல்படுத்தப்படும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை காலமும் முதியோர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவாக 500 ரூபாவே வழங்கப்பட்டு வந்தது.

இந்தநிலையில் அந்தத் தொகை ஆயிரம் ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளதாக அமைசசர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.


# ஆயுள் சிறைத்தண்டனை பெற்ற புலி உறுப்பினருக்கு விடுமுறை

(கொழும்பு)

பயங்கரவாதச் செயல்களில் ஈடுபட்ட குற்றத்திற்காக ஆயுள் சிறைத்தண்டனை அனுபவித்துவரும் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்த ராமையா ரவீந்திரன் என்ற நபருக்கு சிறைச்சாலைகள் திணைக்களம் ஒரு நாள் விடுமுறை வழங்கியுள்ளது.

ஆயுள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள இவருக்கு 2010 ஆம் ஆண்டு சிறைச்சாலைக்குள் திருமணம் நடைபெற்றிருந்தது அத்துடன் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட புலிகள் இயக்க உறுப்பினர் ஒருவருக்கு முதன்முறையாக விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

# 100 வருட நீர்த்தாங்கி இடிந்து விழும் நிலை



(மன்னார்)

மன்னார் பொதுவிளையாட்டு மைதானத்தில் காணப்படும் 100 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த மிகப்பெரிய நீர்த்தாங்கி எந்த நேரத்திலும் இடிந்து வீழ்ந்து பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடிய நிலையிலுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த காலங்களில் இதன் மூலமாகவே மன்னார் மாவட்டம் முழுவதுக்கும் குடிதண்ணீர் வழங்கபபட்டு வந்தது. யுத்தத்தின்போது இதற்கும் மோசமான பாதிப்புகள் ஏற்பட்டன. ஆனால் இதுவரை எந்தவிதமான பராமரிப்பு வேலைகளும் மேற்கொள்ளப்படாத நிலையிலேயே இது காணப்படுகிறது.

இதன் காரணமாக இந்த நீர்த்தாங்கி சிறு சிறு துண்டுகளாக உடைந்து கீழே விழுந்து கொண்டிருக்கின்றது. அத்துடன் இதன் சீமெந்து மேற்பூச்சுக்கள் கழன்று துருப்பிடித்த இரும்புக்கம்பிகள் வெளியே தெரிகின்றன.

இது அமைந்துள்ள மன்னார் பொது விளையாட்டு மைதனத்தில் தினமும் விளையாட்டு வீரர்களும் பொது மக்களும் கூடுவது வழக்கமாகும். எந்தநேரத்தில் இந்த நீர்த்தாங்கி தமது தலையில் இடிந்து விழுமோ என்ற அச்சத்துடன் இவர்கள் இதனை அண்ணா ந்து பார்த்தவாறு செல்கின்றனர்.

இந்த நீர்த்தாங்கியின் மோசமான நிலைமையைப் பார்க்கும் போது அச்சம் தோன்றுவதாக மக்கள் கூறுகின்றனர். நீர்த்தாங்கிக்கு அருகில் மன்னார் தலைமன்னார் பிரதான வீதி உள்ளது.

இது யார் மீதாவது இடிந்து விழுந்து அனர்த்தத்தை ஏற்படுத்துவதற்கு முன்னர் இதனை இடித்து ஒதுக்க வேண்டுமென்பதே மக்களின் பிரதான கோரிக்கையாக உள்ளது.

# தொழிலுக்கான பதிவுகள்

(வடமராட்சி)

வடமராட்சி தெற்கு மேற்கு கரவெட்டி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தொழில்வாய்ப்பற்ற இளைஞர் மற்றும் யுவதிகளைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் தற்போது கரவெட்டிப் பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதுவரையில் பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் சித்திரை மாத இறுதிக்குள் தங்கள் பதிவுகளை பிரதேச செயலக திறன் அபிவிருத்தி உதவியாளரிடம் தொடர்புகொண்டு விரைவாக மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

பதிவுகளுக்கான விண்ணப்பப் படிவங்கள் பிரதேச செயலகத்தினால் வழங்கப்படுமெனத் திறன் அபிவிருத்தி உதவியாளர் அ.ஜெகதாஸ் தெரிவித்துள்ளார். (116)

# வடமாகாண பல்துறைசார் வினாடி - வினா போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வடமாகாணக் கல்வித் திணைக்களத்தினால் வடமாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறியின் பணிப்புரைக்கமைய நடாத்தப்பட்ட மாகாண மட்ட பல்துறைசார் விசேட வினாடி - வினாப் போட்டிகள் கடந்த 10 ஆம் திகதி யாழ்ப்பாண தேசியக் கல்லூரியில் நடைபெற்றது.

இதில் கனிஷ்ட பிரிவில் (தரம் 10 -11) அரை இறுதி ஆட்டத்தில் வவுனியா தெற்கு கல்வி வலயததை எதிர்த்து வலிகாம கல்வி வலயம் மோதியது. இதில் வவுனியா தெற்கு கல்வி வலயம் 75:50 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வித் திணைக்கள மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்துகொண்டார்.

அடுத்த அரை இறுதிப்போட்டியில் தென்மராட்சி கல்வி வலயத்தை எதிர்த்து யாழ்ப்பாணக் கல்வி வலயம் மோதியது. இதில் தென்மராட்சி கல்வி வலயம் 90 :55 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றிகொண்டு இறுதிப்போட்டிக்குத் தகுதி பெற்றது. இதற்குச் சிறப்பு விருந்தினராக வடமாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் கலந்துகொண்டார்.

3 ஆம் இடத்துக்கான போட்டியில் அரை இறுதிப் போட்டியில் தோல்விகளைத் தழுவிய வலிகாம கல்வி வலயமும், யாழ்ப்பாணக் கல்வி வலயம் மோதின. இதில் வலிகாமம் கல்வி வலயம் 85:70 எனும் புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றிகொண்டு 3 ஆம் இடத்தைப் பெற்றுக் கொண்டது. இதற்குச் சிறப்பு விருந்தினராக வடமாகாண நிர்வாக இயக்குநர் இளங்கோவன் கலந்து கொண்டார்.

அதனைத் தொடர்ந்து மேற்பிரிவிற்கான (தரம் 12, 13) அரையிறுதிப் போட்டியில் யாழ்ப்பாண கல்வி வலயத்தை எதிர்த்து வலிகாமம் கல்வி வலயம் கல்வி வலயம் மோதியது. இதில் யாழ்ப்பாண 90 : 35 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இதற்குச் சிறப்பு விருந்தினராக வடமாகாண கல்வி அமைச் சின் செயலாளர் ச.சத்தியசீலன் கலந்து கொண்டார்.

அடுத்த அரையிறுதிப் போட்டியில் வடமராட்சி கல்வி வலயத்தை எதிர்த்து வவுனியா தெற்கு கல்வி வலயம் மோதியது. இதில் வடமராட்சி கல்வி வலயம் 70 : 45 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றது. இதற்குச் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாண தேசியக் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி மு.யோகநாதன் கலந்துகொண்டார்.

அடுத்து 3 ஆம் இடத்திற்கான போட்டியில் வலிகாமம் கல்வி வலயத்தை எதிர்த்து வவுனியா தெற்கு வலயம் மோதியது. இதில் வவுனியா தெற்கு வலயம் 75:40 என்ற புள்ளிகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 3 ஆம் இடத்தைப் பெற்றது. இதற்குச் சிறப்பு விருந்தினராக வவுனியா தெற்கு வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அன்ரன் சோமராஜா கலந்து கொண்டார்.

இப்போட்டிகளுக்கு நடுவர்களாக யாழ். பல்கலைக்கழக கல்வியியற் பீடாதிபதி பேராசிரியர் மா.சின்னத்தம்பி, பாடசாலை மருத்துவ அதிகாரியும் தொற்றுத்தொற்றாத நோய் வடமாகாண அதிகாரி வைத்திய கலாநிதி ஏ.யோகேஸ்வரன், வடமாகாண மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் திருமதி வசந்தி செபஸ்ரின் ஆகியோரும் கடமையாற்றினர். இதன் இறுதிப்போட்டி பின்னர் அறிவிக்கப்படும் என வடமாகாண மாணவர் அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் கே.சத்தியபாலன் அறிவித்துள்ளார். (12)

# கும்பாபிஷேகம்

(வடமராட்சி)

ஆவரங்கால் பர்வதவர்த்தனி அம்பாள் சமேத நடராஜ இராமலிங்க சுவாமி திருக்கோவில் மஹா கும்பாபிஷேகம் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமை காலை 8.10 மணி தொடக்கம் 9.00 மணிவரையும் நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேக கிரியைகள் 19 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 7.45 மணிக்கு மேல் ஆரம்பமாகும்.

யாகபூசை மற்றும் யாகாரமபம் 21 ஆம் திகதி சனிக்கிழமை இரவு நடைபெறவுள்ளது.

அம்பாளின் பரிவார மூர்த்திகளுக்கான எண்ணைக் காப்பு 23 ஆம் திகதி திங்கட்கிழமை 8.00 மணி தொடக்கம் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணிவரை இருநாட்கள் நடைபெறவுள்ளதுடன் தொடர்நது மண்டலாபிஷேகம் நடைபெறும் என சிவன் தேவஸ்தானத்தினர் அறிவித்துள்ளனர். (116)

# அதிபர்களுக்கான செயலமர்வு

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி கோட்டக்கல்விப் பணிமனைக்குட்பட்ட பாடசாலை அதி பர்களுக்கான துரித கற்றல் செயறதிட்ட செயலமர்வு எதிர்வரும் 24 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணிவரை தாளையடி றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலையில் மருதங்கேணி கோட்டக்கல்விப் பணிப்பாளர் ரி.பொன்னையா தலைமையில் நடைபெறவுள்ளது.

இச்செயலமர்வில் மருதங்கேணி கோட்டத்திற்குட்பட்ட 18 பாடசாலை அதிபர்களும் கலந்து கொள்ளவுள்ளனர். (116)

# ஒற்றை இலக்கத்தில் பணவீக்கம் மூன்று வருடங்கள் சாதனை

## இலங்கை மத்திய வங்கி தகவல்

(கொழும்பு)

பணவீக்கததை கடந்த 38 மாதங்களுக்குள் ஒற்றை இலக்கத்தில் பேணுவதற்கு முடிந்தபோதிலும், எதிர்காலத்திலும் அவ்வாறே முன்னெடுப்பதில் சவாலை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவிக்கின்றது.

எரிபொருள் உள்ளிட்ட பொருட்களின் விலைகள் தொடர்பில் எதிர்கால நோக்கில் நிச்சயமற்ற தன்மை நிலவுவதே இதற்கு காரணமாக அமைந்துள்ளதாக மத்திய வங்கியின் 2011 ஆம் ஆண்டுக்கான அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2011 ஆம் ஆண்டு அறிக்கையின பிரகாரம் அந்த வருடத்தின் டிசம்பர் மாதமளவில் பணவீக்கம் 4.9 வீதமாக வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. எனினும் இந்த வருடத்தின் முதலிரண்டு மாதங்கள் நிறைவில் பணவீக்கம் 5.5 வீதமாக உயர்வடைந்துள்ளது.




# Puththandu

When the sun moves from the Meena Rashi (House of Pisces) to the Mesha Rashi (House of Aries) in the celestial sphere; Sri Lankans begin celebrating their New Year or Aluth Avurudhu (in Sinhala) and Puththandu (in Tamil). It marks the end of the harvest season and also coincides with one of 2 instances when the sun is directly above Sri Lanka.

Cultural rituals begin shortly after the beginning of the New Year with the cleaning of the house and lighting of an oil lamp. In some communities, women congregate to play upon on the raban (drum) to warn others of the incipient change in the year - from lighting the fire to making the milk rice to entering into the first business transaction and eating the first morsels, Once these are done, the partying really begins as families mingle in the streets, homes are thrown open and children are let out to play. The ubiquitous plantain is dished out alongside celebratory feasts of small oil cake and kokis (crisp and light sweetmeat, originally from the Netherlands).

Tamils give a fair start to their New Year celebrations by executing their first financial transaction, commonly referred to as 'Kai-vishesham'. On this event, you will find elderly members of the family presenting monetary gifts to unmarried youngsters, especially children. This act of theirs is believed to bring in good luck for the youngsters. Besides, monetary transactions, farmers also start off with their first ploughing on this very day. They believe this to be an auspicious time as this is the very moment

New-year has become an important national holiday for both the cultures of the Sinhalese Buddhists and the Tamil Hindu Sri Lankans, and is unique as such, as it is not celebrated in the same manner elsewhere in the world.

# Tamil New Year Celebrations in Tamil Nadu

Natives of Tamil Nadu follow certain rituals so as to ensure prosperity and well-being of their near and dear ones. One of the well-known traditions is to watch Kanni at the break of dawn. This particular act is believed to bring in good luck for the members of the family. People also give a start to their day by watching auspicious items like silver or gold jewelry, coconuts, raw rice, flowers, fruits and vegetables, nuts, betel leaves etc. After offering their morning prayers on New Year, they read Panchangam.

During Tamil New Year, the state also organizes for a huge Car Festival near Kumbakonam, Tiruvadamarudur. In some areas, Chitthirai is also celebrated with great vigor. According to legendary evidences, this is the same day when Goddesses Meenakshi tied the nuptial lock with Lord Sundareswarar. Every year, the festival of Chitterai Thiruvizha is celebrated on the eve of Tamil New Year at the Meenakshi Temple. Besides, a gala exhibition- Chitterai Porutkaatchi is also organized on Tamil New Year. This exhibition is also referred to as Chitterai Vishu in certain regions of South Tamil Nadu.

The preparations for the New Year start well in advance. You will find the entrances of the houses decorated with kolams. Raw mangoes and neem flowers are offered to Gods and Goddesses which symbolizes prosperity and growth. Tamils give a start to their year with an herbal bath. The game of coconut (popularly known as por-thenkai in Tamil Nadu) is played during the New Year. Cart races are equally enjoyed on this eve. This festive season is a great time for renewing filial bonds and establishing rapport with your near and dear ones.

New Year marks a gala time for the natives of Tamil Nadu. The prime focus being on food, you will find women preparing lip smacking delicacies on New Year Eve. Maanga Pachadi ( a dish prepared using neem flowers, raw mangoes and jaggery) is the patent food during this festival.

**Happy New Year!**

# *Why the Sky is so high ? A folktale from Bengal, retold by Rohini Chowdhury*

Long ago, the Sky was quite low. If you stood on a stool and stretched your hands up as high as they would go, you could touch the Sky.

At that time, far on the Horizon, where the Sky was always especially low, there was a village. In that village, in a little mud hut thatched with straw, there lived a bent Old Woman. This bent Old Woman was the oldest woman in that village, possibly the oldest woman in the world. She was so old she no longer remembered any other way of being. She lived all alone in her little mud hut, for she had neither friend nor family left in this world. She had nowhere to go and no one to talk to. So all day long, she would potter round her hut, first cleaning this corner, now dusting that, now scrubbing



this bit of floor, now sweeping that. The bent Old Woman thought of nothing else any more, except more and more ways of sweeping and scrubbing her little mud hut.

One hot summer, the land was dry with thirst. There was dust everywhere - on the trees, on the roofs of huts and houses, in people's throats and eyes, even in the air. All over the village people were coughing and sneezing and choking with the dust. Even the poor old Sky was not spared - it was so close to the ground that the slightest bit of wind would set it coughing with the dust that rose from the parched land.



The bent Old Woman's hut too was covered with dust. The old woman swept and swept and swept the little hut with her broom. She swept the inside of her hut, she swept the outside of her hut, she swept the front step and she swept the front yard. But the dust rose all around her in great brown clouds - the more she swept and plied her broom, the more the dust that rose from the earth.

The poor Sky began to choke with all the dust that the bent Old Woman was raising with her broom. The dust got into its throat and tickled its nose and made it sneeze - a great big sneeze that shook the world with its thunder. People covered their heads and ran indoors in fright. But the bent Old Woman barely noticed - she kept on sweeping with her broom.

The Sky sneezed again - the dust was becoming unbearable. It got into its eyes and made them water - so that great heavy drops of rain began falling into the dry dust below. The bent Old Woman barely noticed - till finally a big splodgy raindrop fell right on to the patch she had just swept.

The bent Old Woman glared at the Sky and scrubbed the splodgy raindrop away. But then another raindrop fell, and another, till her swept and scrubbed front step was blotchy with raindrops.

This was more than the bent Old Woman could bear. She stood up as straight as she could with her bent old back and shook her fist at the Sky yelling at it to stop raining on her nice clean front step. She cursed the Sky and threatened it, but the poor old Sky couldn't stop raining - its eyes were still so full of dust with all her sweeping.

At last, the bent Old Woman was so angry, that she picked up her broom, and thwacked the Sky with it.

The Sky gave another great sneeze and jumped out of her way. But the bent Old Woman



kept thwacking it with her broom, again and again and again.

Finally the Sky could take it no more - the dust, the Old Woman's cursing, and especially her broom, thwacking it again and again and again. Sneezing and coughing, thundering and raining, the Sky flew up, up and away - out of reach of the Old Woman's broom and swore never to come down again. So that is why the Sky is so high. Even on the Horizon, where it seems to be touching the earth, it really isn't any more.

# Understanding Fragrances

Choosing the perfect perfume is as vital as choosing the right dress or perfect pair of shoes. Unlike clothing and footwear



choosing the wrong kind of perfume is unforgivable. Especially if your smelling something in between tequila and saffron.

**Facts**

**1. Fragrance of a perfume varies from each skin, So don't purchase one:**

· By smelling the top of an open bottle.

· By testing it on one of those testing sticks.

· A recommendation from a friend or review.

· Results from an online "what's your fragrance test?"

Tip: Take your time when selecting a perfume. Spray it on your skin (wrist) and then decide if it's you or not. TAKE YOUR TIME.

**2. Concentration**

· Perfume : The Ultimate luxury. It is the most -ful and purest type of perfume. The h oncentration offers strength, hold a sistence.

· Eau de Parfum: It has high perfume content and comes in two forms: bottle or spray. A unique and sophisticated creation, a unique, intermediate concentration.

· Eau de Toilette: The fragrant reflection of every moment. Eau de toilette



is lighter and can be used more generously than an Eau de parfum. It evokes an elegant and relaxed daytime outfit. A light, sparkling concentration.

If you're wondering why the perfume you purchased recently doesn't stay on all day. The above is your answer.

**3. Using Perfume**

· Spray it behind your ears, on the back of your wrists, back of your neck and behind your knees. It's where perfume lasts the longest.

· You can spray it lightly in to the air and enter in to it. That way your hair gets whiff of it too.

· Do not spray perfume on your clothes. It does stain. And it doesn't look pleasant.

· Remember to always use perfume before putting your jewelers on.

For most of us perfume is an option. For some of us it's a preference. For the few of us it's as essential as brushing your teeth in the morning. A faithful contributor to our confidence and a patron of our sex appeal, perfume is definitely our favorite secret weapon.

**(Text by Shazzana Hamid)**

# Love, Relationships and the Problems that come with it

The most common relationship problems range from fear of intimacy to fear of rejection. Everyone struggles with fears of intimacy, change, and abandonment – but some people struggle more than others.

Even in childhood we fear being swallowed up by another person and losing our unique selves. We want to be independent with our own personalities, likes, dislikes, strengths, and even weaknesses. This is the first common relationship problem: fear of intimacy - which can involve engulfment and emotional distance. Engulfment occurs when we lose who we are in our relationship: not only are our predilections lost – we may not even know what are preferences are anymore! People who have a fear of intimacy may be overly anxious about losing their selves, which makes them extremely guarded and hard to know. People with a fear of intimacy may fear being trapped or suffocated, which exacerbates their relationship fears. This relationship problem may be solved by learning how to overcome fear of intimacy.

Sometimes our relationship fears make us afraid our partner will change; other times we fear he or she won't at all. Even good changes can be hard to deal with. When familiar habits and routines are changed, we feel a sense of unease because we have adjustments to make, new routines to create. Talking honestly about changes is the best way to deal with this relationship problem. Discussing relationship fears, hopes, motivations, and practical issues will make changes blend in with the daily routine in a much smoother way. Even fighting about your feelings is better than repressing or stuffing them down.

Most of us don't want to be alone, and are dismayed at the thought of being rejected or abandoned. Even the healthiest people have some fear of abandonment. We know we could survive but life is better and easier with others (this is a primitive instinct). We fear being left due to death, rejection, illness, physical or even emotional distance. Becoming independent and emotionally healthy with your own life and goals is an ideal way to deal with this common relationship problem.

In the effect of revealing these problems, psychologists look at a few different ways identify how these problems generate. Over involvement in another person's life is a prominent attribute in developing the core of such problems. When we get too 'obsessed' with another's life we tend to decide, control and dominate the life of another – in this case our partners. Constant phone calls, visits, e-mails, etc, requests for attention or acknowledgement, jealous or controlling behaviors (common relationship fears), withdrawal or extreme guardedness are other factors that signify a person's fear in a relationship. These signs are the most vital and often result in severe psychological and biological problems as well.

To minimize these



relationship problems in love; Be aware of your fears! It's okay to feel fear of intimacy; simply knowing that you're afraid of losing yourself and being engulfed by your relationship or family could prevent it from happening. When you know what you fear, you're in a better position to deal with it. Accepting that you have a common relationship problem will help you solve it. Remember to express yourself appropriately. If you're afraid of being abandoned, try not to suffocate your loved ones with excessive attention or jealousy. Talk about your feelings, write them down – see a counselor if you're really struggling. Don't let your relationship problems – which are normal – dictate your behavior or wreck your relationship. Get educated. Do you have an extreme fear of intimacy or fear of abandonment? Find out how to successfully deal with change and how to be supportive when your loved ones want to change. Read books, seek support groups, or talk to a counselor about your relationship problems.

These common relationship problems take some work to overcome, but being aware and open to change will go a long way.

**(Text by Jessica Lord)**

# சுன்னாகம் மின்சார நிலையத்திலிருந்து மோசமான சத்தம், புகையால் அசௌகரியம்

## கிராம சங்க முன்னேற்ற சங்கத் தலைவி



யாழ். மாவட்டத்திற்கான மின்சாரத்தினை வழங்கும் பிரதான மின் நிலையமாகக் காணப்படும் சுன்னாகம் மின்சார நிலையத்தில் இயங்கும் இயந்திரங்களின் அதிகூடிய சத்தம் மற்றும் புகை ஆகியவற்றால் மின் நிலையம் அமைந்துள்ள பகுதியிலுள்ள கலைவாணி கிராம மக்கள் பாதிக்கப்படும் சாத்தியம் ஏற்பட்டுள்ளதாக கிராம முன்னேற்ற சங்கத் தலைவி சுரேஸ் குமார் சிவாஜினி குறிப்பிட்டார்.

அண்மையில் நடைபெற்ற சுன்னாகம் கலைவாணி சனசமூக நிலையத்தின் 34ஆவது ஆண்டு விழாவில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த மின்சார நிலையத்தின் புகைப்போக்கியிலிருந்து வெளியாகும் புகை குடியிருப்புகளை நோக்கிப் பரவுவதால் இந்தப் பகுதியிலுள்ளவர்களுக்கு சுவாச நோய் ஏற்படும் சாத்தியம் உள்ளதாக குறிப்பிட்ட அவர், 6 மாதங்களுக்கு ஒருதடவையேனும் இந்தக் கலைவாணிக் கிராமத்தில் மருத்துவப் பரிசோதனை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என கேட்டுக் கொண்டார்.

அத்துடன், பிரதான மின் பிறப்பாக்கியின் அளவுக்கதிகமான சத்தத்தால் மாணவர்கள் கல்வி கற்கமுடியாத சூழ்நிலை காணப்படுவதுடன், இரவுவேளைகளில் குழந்தைகள் உட்பட பலர் தூக்கமின்றி தவிப்பதாகவும் கூறினார்.

இதேவேளை, இவ்வாறான சத்தத்திற்கு மத்தியிலும் கடந்த ஆண்டு நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப்பரீட்சையில் இந்த மின்னிலையத்திற்கு அருகிலுள்ள மாணவி ஒருவர் 6ஏ,3சி பெறுபேற்றைப் பெற்று உயர்தரம் கற்பதற்கு தகுதிபெற்றுள்ளார் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (சி)

# படையினரின் ஏற்பாட்டில் மாணவர்கள் கல்விச்சுற்றுலா

ஊர்காவற்துறைப் படையினரின் ஏற்பாட்டில் ஊர்காவற்துறையிலுள்ள ஐந்து பாடசாலை யைச் சேர்ந்த மாணவர்கள் கொழும்பிற்கு கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு திரும்பியுள்ளனர்.

புங்குடுதீவு மகா வித்தியாலயம், புங்குடுதீவு கமலாம்பிகை மகா வித்தியாலயம், புங்குடுதீவு ஸ்ரீ கணேசா மகாவித்தியாலம், புங்குடுதீவு ஸ்ரீ சித்திவிநாயகர் மகாவித்தியாலயம் மற்றும் ஸ்ரீ சுப்பிரமணியம் மகா வித்தியாலம் ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த 85 மாணவர்களே இவ்வாறு கல்விச்சுற்றுலா மேற்கொண்டனர்.

பாடசாலை அதிபர் மற்றும் கல்வி அதிகாரிகளின் ஒருங்கிணைப்பில் சுற்றுப் பயணம் மேற்கொண்ட இந்த மாணவர்களுடன், ஆசிரியர்கள் 5பேரும், பெற்றோர்கள் 5பேரும் சென்றிருந்தனர்.

ஊர்காவற்துறையிலிருந்து மார்ச் 30ஆம் திகதி தமது சுற்றுலாப்பயணத்தை மேற்கொண்ட இவர்கள் கொழும்பிலுள்ள முக்கிய இடங்களான துறைமுகம், அருங்காட்சியகம், தேசியப் பூங்கா,



நாடாளுமன்றக் கட்டடத்தொகுதி, சுதந்திர சதுக்கம், காலி முகத்திடல் போன்ற இடங்களைப் பார்வை யிட்டனர்.

தமது நான்கு நாள் சுற்றுலாப் பயணத்தை நிறைவுசெய்து மீண்டும் ஏப்ரல் 2ஆம் திகதி இவர்கள் ஊர்காவற்துறை திரும்பினர். (சி)

# சோமசுந்தரப் புலவர் வீதியை புனரமைக்குமாறு கோரிக்கை



(அனு)

நவாலி வடக்கு சோமசுந்தரப் புலவர் வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் இருப்பதால் இந்த வீதியூடாகப் பயணிக்க முடியாதுள்ளதாக பிரதேச மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

மழை காலங்களில் வீதியில் நீர்தேங்கி நிற்பதுடன், தேங்கி நிற்கும் நீரால் துர்நாற்றம் வீசுவதுடன், தொற்றுநோய்கள் ஏற்படுகின்றன. எனவே எமது இந்த நிலைமை குறித்து உரிய அதிகாரிகள் கவனம் செலுத்தி வீதியை புனரமைத்துத் தரவேண்டுமென இந்த மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதேவேளை, பண்டத்தரிப்பு - பிரான்பற்றுக் கிராமத்திலுள்ள கலைமகள் பாடசாலைக்குச் செல்லும் வீதியும் 50 வருடங்களுக்கு மேலாகப் புனரமைக்கப்படாதுள்ளது.

இந்த வீதியூடாக செல்லும்போது துவிச்சக்கரவண்டியின் ரயர்கள் பழுதடைவதாகவும், இதனால் பாடசாலைக்கு தினமும் காலம்தாழ்த்தியே செல்லவேண்டியுள்ளதாகவும், பாடசாலை மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் குறிப்பிட்டனர். அத்துடன் கன ரக வாகனங்கள் இந்த வீதியூடாகப் பயணிக்க முடியாதுள்ளது.

நீண்டகாலமாக இந்தப் பாடசாலை வீதி புனரமைக்கப்படாமல் இருப்பது தொடர்பாகவும், பிரதேச மக்கள் எதிர்நோக்கும் போக்குவரத்துச் சிரமங்கள் குறித்தும் சண்டிலிப்பாய் பிரதேச சபைக்கு பலமுறை தெரியப்படுத்தியுள்ளபோதும், இதுவரையில் வீதியைப் புனரமைப்பதற்காக எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை என்றும் இந்தப் பிரதேச மக்கள் மேலும் தெரிவித்தனர். (சி)

# களையொட கண்ணகி அம்மன் பங்குனிப் பொங்கல் திருவிழா

(அனு)

நாவாலி வடக்கிலுள்ள களையொட கண்ணகி அம்மன் ஆலயத்தில் இறுதி பங்குனித்திங்கள் பொங்கல் விழா கடந்த திங்கட்கிழமை வெகு சிறப்பாக நடைபெற்றது.

ஆலயப் பூசகர் தலைமையில் காலை 10.00 மணிக்கு பூசை வழிபாடுகள் ஆரம்பிக்கப்பட்டன. இந்தப் பூசை வழிபாடுகளின்போது பல பிரதேசங்களிலிருந்தும் வருகை தந்த பக்தர்கள் அம்மனுக்கே உகந்த கற்பூரச்சட்டியை வெறுங்கையில் ஏந்திய வண்ணமும், பொங்கல் பொங்கியும் தமது நேர்த்திக் கடன்களை நிறைவேற்றினர்.


தொடர்ந்து அன்னதானம், கஞ்சி என்பன அடியார்களுக்கு வழங்கப்பட்டன. அத்துடன் இந்த வருடமே முதற் தடைவையாக ஆலயத்தைச் சுற்றி தண்ணீர்ப் பந்தல்கள் அமைக்கப்பட்டிருந்தன.

பத்தினி தெய்வமான கண்ணகி மதுரையை எரித்த பின்னர் இந்த ஆலயம் அமைந்துள்ள இடத்திலேயே வந்து களையாறியதாக வரலாறு கூறுவதால் இந்தக் கோயிலுக்கு களையொட கண்ணகி அம்மன் எனப் பெயர் சூட்டப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

பிள்ளையார், முருகன், வைரவர் என பரிவாரத் தெய்வங்களும் இந்த ஆலயத்தில் காணப்படுகின்றன. (சி)

# மெய்தான் பாருங்கோ...

## சங்கீதம் - 126:5



உணர்ச்சிகளின் கொந்தளிப்புத்தான் கண்ணீர். இந்தக் கண்ணீரானது மிகுதியான சந்தோஷத்தின் நிமித்தம் வாய்விட்டுச் சிரிக்கேக்கையும், தாங்கமுடியாத கவலைகளினால் திக்கித்திணறும் போதும் கண்ணால நீராக வரும் பாருங்கோ!

சந்தோசத்தின் நிமித்தம் பலபேருக்கு முன்னால சிரிச்சு அழுதுபோட்டுப் போகலாம். ஆனா, கவலையோட வெளியரங்கத்தில நிண்டு கொண்டு எல்லாராலும் அழமுடியாது கண்டியளே!

மனசில கவலையிருந்தால் சிலபேர் கடவுள் சன்னிதானத்தில நிண்டு அழுது குளறி தங்கட மனப்பாரத்தைக் குறைப்பினம். வேறு சில ஆட்கள் இருட்டுப் பட்டாப்போல ஒரு ஒதுக்குப்புறமாப் போய் நிண்டு அழழண்டு அழுது போட்டு வருவினம்.

சிலர் அங்கினேக்கை தங்கட உணர்ச்சியளைக் கட்டுப்படுத்த ஏலாமல் வாய்விட்டு, சத்தமாய் அழுது போட்டுப் போற ஆட்களும் இருக்கினமல்லோ!

ஆர் எவை எதைத்தான் சொன்னாலும், எதைத்தான் செய்தாலும் பிரச்சினையள் தாங்கேலாத விடத்து தனிமையில் இருந்து அழுவதால் மனசின் கனதி குறையும்... எண்டு உளவியலாளர் உரைச்சிருக்கினம் பாருங்கோ.

சில சந்தர்ப்ப சூழ்நிலையள் பிரச்சினையளை உருவாக்கி விடுகுது. பிறகு அந்தப் பிரச்சினையளைத் தீர்க்க, அவையளால இயலாத நிலையிலும் அதிலையிருந்து விடுவிக்கிறதுக்கு இன்னொரு சாரரின் உதவியள் கிடைக்காத விடத்திலும் அடுத்து இனி என்ன செய்யிறது... எண்டு மனம் அங்கலாய்ப்புக் கொள்ளும்.

இப்பிடி அது அங்கலாய்ப்புக் கொள்ளேக்கை இயலாமையின் உணர்வுகள் ஒண்டாச்சேர, மனசுக்குள்ள கவல்லையள் நிரம்பி... அது கண்ணீராக வெளியில வருகுது. அப்பிடி வெளிவந்த பிற்பாடு புயலடிச்சு ஓய்ஞ்ச கடற்கரை மாதிரி கொஞ்சம் அமைதி கொள்ளுது மனசு.

இதுவந்து பாருங்கோ! மானிடராய் பிறந்த எவருக்கும் வாழ்க்கையில ஒரு பகுதியா நடக்கிற நிகழ்வு!

ஆனா வேணுமெண்டே ஒரு மனிசனுக்கு வில்லங்கமாக கவலைகள், பிரச்சினையள், நெருக்கடியளைக் குடுத்து அந்த மனிசனை அழவைச்சு வேடிக்கை பாக்கிற இன்னொரு மனிசர்களைப் பற்றி நீங்கள் என்ன சொல்ல விரும்புறியள்?

இப்பிடியான ஆட்களைப் பற்றித்தான் நான் இப்ப இதில சொல்ல வாறன் பாருங்கோ!

வாழ்க்கையில நான் மட்டும் அழுதால் போதுமே? நீயும் அழத்தான் வேணும்... எண்ட குறுகிய மனப்பான்மையில வளர்ந்த எண்ணங்கள்... அடுத்தவனை அழவைச்சு வேடிக்கை பாக்குது.

எல்லாருடைய மனசும் ஓர்மமாக ஒரேமாதிரி இருக்காது. பிரச்சினையளை எதிர்கொள்ள முடியாத இதயங்களானது அழுகிறதோட ஆறுதல் அடைகிறது.... எண்டும் சொல்ல முடியாது.

எங்கை வாறது வரட்டும்... எண்டு வாழ்க்கையில எதிர்நீச்சல் போடுற ஆட்களால தான், கவலைகளை கொஞ்சம் தூசு தட்டின மாதிரித் தட்டிப்போட்டுப் போக முடியுது.

அழுவதும், சிரிப்பதும் வாழ்க்கையின் இருபக்கம் எண்டு சொல்லேக்கை, இப்ப உலகத்தில சிரிக்கிற மனிசர் குறைவாத்தான் இருக்கினம். உலகம் படுகிற பாட்டைப் பாக்கேக்கை அழுகிற ஆட்கள்தான் அதிகமாகக் கிடக்குது.

இயற்கை சினக்கிறதாலையும் உலகத்தில பலபேர் இப்ப அழுகினம். அதைவிட, தங்களை உச்சக் கொம்புகளாய் நினைச்சுக்கொண்டு அண்டை அயலுகளோடை தேவையில்லாமல் சொறிபடுகிறதால, கண்ணீரே வாழ்வாகிப்போன நிலையில, பலபேர் இருக்க இடமில்லாமல் நாட்டுக்கு நாடு அலைஞ்சு திரிஞ்சு அகதியெண்ட பட்டத்தோடை கண்ணீர்விட்டுத் திரியினம்.

வலிமைக்கும் நலிவுக்குமிடையில நடக்கிறதான ஒரு அராஜகப் போராட்டத்தில கண்ணீர் விடுகிறது தவிர்க்க முடியாத நிலையாகிப் போகுது. ஆனாலும் பாருங்கோ! இப்பிடிக் கண்ணீரை விடவைச்சுக் கொண்டிருக்கிற ஆட்களுக்கு காலம் எண்டைக்கும் அவையளின்ர பக்கமாத்தான் நிற்கும் எண்டு சொல்லுறதுக்கில்லை.

மாரி போனால் பிறகு கோடை வருகிறது... பகல் போனால் இரவு வருகிறது.... பனி போனால் வெய்யில் வருகிறது.... இப்பிடிக் காலமாற்றங்கள் நிகழேக்கை, அடுத்தவனைத் தங்கட பொழுது போக்குக்காகவும், சுயநல தேவைகளுக்காகவும் அழவைக்கிற ஆட்கள் எண்டைக்காவது ஒருநாள் அவையளும் கண்ணீர் விட்டு அழுதே தீரவேணும். அது அழுதவனின் கண்ணீரைவிட அதிகமாக இருக்கும்.

இதைத்தான் பரிசுத்த வேதாகமமும் தெளிவாச் சொல்லுது பாருங்கோ! பாதிக்கப்படுகிற மக்களுக்கு ஆறுதல் அளிக்கிறதாகவும், அராஜகம் செய்யிறவையளை மனந்திரும்ப வைக்கிறதுக்குமாக அந்த வசனம் இருக்குது.

அந்த வசனம் வேறொன்றுமில்லை இதுதான்!

"கண்ணீரோடு விதைப்பவர்கள் கம்பீரத்தோடு அறுப்பார்கள். சங்கீதம் - 126 : 5"

- சின்னக்குட்டி சின்னச்சாமி.

# இலங்கை செல்லும் எம்.பிக்கள் குழு நியமனத்தில் பலத்த சர்ச்சை

## பயணத்திலும் நிகழலாம் மாற்றம்



(புதுடில்லி)

இலங்கைக்கு அனைத்துக் கட்சிக் குழுவை அனுப்பும் மத்திய அரசின் முடிவு, பலத்த சர்ச்சையில் சிக்கியுள்ளது. இந்தக் குழுவில் இடம்பெற மாட்டோம் என, திடீரென அ.தி.மு.க., பின்வாங்கியுள்ளது, டில்லி அரசியல் வட்டாரங்களில், புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த முடிவு முக்கிய கட்சிகளுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியதால், இலங்கைக்கு, அனைத்துக் கட்சிக் குழுவை அனுப்பும் முடிவில் மாற்றம் நிகழலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கையில் போருக்கு பிறகு நிலவும் சூழ்நிலைகள் குறித்து அறிந்து வருவதற்காக, அனைத்துக் கட்சிக் குழுவை அனுபபுவது என்ற முடிவை, மத்திய அரசு அண்மையில் எடுத்திருந்தது. அதன் படி எதிர்க்கட்சித் தலைவரும், பா.ஜ. மூத்த தலைவருமான சுஷ்மா சுவராஜ் தலைமையில், 15 பேர் கொண்ட குழு செல்லவுள்ளது. முதலாவதாக, இந்தக் குழு அமைக்கப்பட்டதிலேயே பல்வேறு குழப்பங்கள் இருப்பதாக கூறப்படுகிறது.


குழுவில் யார், யார் இடம்பெறுவர் என்ற எதிர்பார்ப்பு கிளம்பியது. அதிகாரபூர்வமாக பெயர்கள் வெளியாகாவிட்டாலும், கடந்த வாரமே சில பெயர்கள் கசிந்தன. பொதுவாக இலங்கை குறித்த பிரச்சினைகளை, தீவிரமாக கையிலெடுத்து, அவைகளில் ஆணித்தரமாக குரல் எழுப்பும், தமிழக எம்.பி.க்களில் லோக்சபாவில் கணேச மூர்த்தி மற்றும் ராஜ்யசபாவில் ராஜா போன்றவர்கள்தான். ஆனால், இவர்கள் குழுவில் இடம் பெறவில்லை.

பா.ஜ., சார்பில், இலங்கை விவகாரங்கள் குறித்து ஓரளவு தெளிவாக புரிந்து வைத்திருப்பவரும், இவ்விஷயத்தை அக்கட்சி சார்பில் கையாண்டு வருபவரும் வெங்கையா நாயுடுதான். இலங்கை விவகாரங்களுக்கு பா.ஜ.வில் பொறுப்புவகிப்பவர் யஷ்வந்த்சின்கா. இவர்களுக்கு இடம் அளிக்காமல் பல்பீர்புஞ்ச் என்ற எம்.பி. செல்லவுள்ளார். இலங்கைப் பிரச்சினையில் அதிகமாக வடமாநிலங்களைச் சேர்ந்த கட்சிகளோ அல்லது எம்.பி.,க்களோ பெரிதும் ஆர்வம் காட்டியதில்லை. ஆனால், அவர்களுக்கு எல்லாம் கூட வாய்ப்பு தரப்பட்டு, தமிழகத்தைச் சேர்ந்த முக்கிய தமிழக எம்.பி.,க்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர்

இவ்விஷயம் குறித்து, டில்லியில் தகவலறிந்த வட்டாரங்கள் கூறும்போது, இலங்கைக்கு குழு செல்லும் விஷயத்தில ஏகப்பட்ட குழப்பங்கள் நிலவுகின்றன. எனவே, கடைசி நேரத்தில் குழுவின் பயணம் குறித்து மறுபரிசீலனை செய்யப்படுவதற்கான சூழ்நிலைகள் உருவாகியுள்ளன என்பதை மறுப்பதற்கில்லை என்றன.




## அமெரிக்க விமான நிலையத்தில் ஷாருகானிடம் மீண்டும் விசாரணை



(நியூயோர்க்)

பிரபல பொலிவுட் நடிகர் ஷாரூக்கானிடம் நியூயோர்க் விமான நிலையத்தில் அமெரிக்க குடியேற்ற துறை அதிகாரிகள் 2 மணி நேரம் விசாரணை நடத்தியதால் தான் மனரீதியாக பாதிக்கப்பட்டதாகவும், ஷாருக்கான் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க் யேல் பல்கலையில் முகேஷ் அம்பானியின் மகள் படித்து வருகிறார். இங்கு நடக்கும் நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளராக ஷாருக்கான் மற்றும் அம்பானியின் மனைவி நீடா அம்பானி சென்றனர். நியூயோர்க் சென்ற விமானத்தில் இறங்கிய பயணிகளிடம் வழக்கமான பல்கட்ட சோதனைகள் நடக்கும்.

இந்தச் சோதனையில் ஷாருக்கானை விமான நிலையத்திலலேயே நிறுத்தி வைத்து சுமார் 2 மணி நேரம் விசாரணை நடத்தினர். இந்த நிலையில் நிகழ்ச்சிக்கு வராத ஷாரூக்கான் நிலை குறித்து யாலே பல்கலை நிர்வாகிகள் விமான நிலைய அதிகாரிகளிடம் கேட்ட போது விசாரணை நடப்பது தெரிய வந்தது.

ஷாரூக்கானிடம் இது போன்று அமெரிக்காவில் விசாரணை நடத்தப்படுவது 3 வது முறையாகும.






# நிலநடுக்கத்தில் ஐந்து பேர் பலி



இந்தோனேஷியாவின் வட கடற்பிராந்தியத்தில் ஏற்பட்ட பாரிய நிலநடுக்கம் காரணமாக ஐவர் உயிரிழந்துள்ளனர்.

உயிரிழந்தவர்களில் குழந்தையொன்றும் அடங்குவதாக இந்தோனேஷிய அனர்த்த தடுப்பு நிலையம் குறிப்பிட்டுள்ளது.

இருவர் மாரடைப்பினாலும், மற்றுமொருவர் அதிர்ச்சியிலும் உயிரிழந்துள்ளதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது.

காயமடைந்தவர்கள் மற்றும் சேதவிபரங்கள் குறித்து தொடர்ந்து மதிப்பீடு செய்யப்பட்டு வருவதாக அந்த நாட்டு அனர்த்த தடுப்பு நிலையம் கூறியுள்ளது. அச்சே மாகாணத்தில் 8.2 ரிசடர் அளவிலான நிலநடுக்கம் பதிவானதை அடுத்து சுனாமி எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது

# பசுபிக் நீர்மட்டம் உயர்கிறது

பசிபிக் பெருங்கடலின் தென் மேற்குப் பகுதியில் கடல் நீர் மட்டம் அதிகரித்து வருவதால் அவுஸ்ரேலியாவின் தெற்குப் பகுதியும், அதையொட்டிய நாடுகளும் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும் என குவின்ஸ்லாந்து பல்கலைக்கழகம் கேட்டுக் கொண்டுள்ளது.

19ஆவது நூற்றாண்டின் பிற் பகுதியிலிருந்து இப்பகுதியில் கடலில் நீர்மட்ட அளவு உயர்வது பிற இடங்களைவிட வேகமாக இருக்கிறது.

உலக அளவில் கடல் நீர்மட்டம் 1880ஆம் ஆண்டு முதல் ஆண்டுக்கு 1.5 மில்லி மீற்றர் அளவுதான் உயர்ந்து இருந்தது. ஆனால் டாஸ்மேனியா நகருக்கு அருகில் நடத்திய கணக்கெடுப்போ 1900 முதல் 1950ஆம் ஆண்டுக்குள் இப்பகுதியில் ஆண்டுக்கு 4.2 மில்லி மீற்றர் அளவுக்கு நீர்மட்டம் உயர்ந்திருப்பதாகக் காட்டுகிறது.

டாஸ்மேனியா அருகில் கடல் நீர்மட்டம் தொடர்ந்து 6,000 ஆண்டுகளாக ஒரே அளவில் நிலையாக இருந்திருக்கிறது. ஆனால் 1880ஆம் ஆண்டுக்குப் பிறகு தான் நீர்மட்டம் வேகமாக உயரத் தொடங்கியிருக்கிறது.

# தென்கொரியத் தேர்தலில் ஆளுங்கட்சி பெரு வெற்றி

தென்கொரியாவில் நாடாளு மன்றத்தேர்தலில் ஆளும்கட்சி வெற்றிபெற்றுள்ளது. இந்த ஆண்டில் தென்கொரியாவில் ஜனாதிபதித் தேர்தல் நடக்கவுள்ள நிலையில், நாடாளுமன்றத் தேர்தல் முடிவு மிகுந்த எதிர் பார்ப்பை ஏற்படுத்தி இருந்தது.

இந்தத் தேர்தலில் 54.3 சதவீத வாக்குகள் பதிவாகின. நேற்று முன்தினம் வாக்குகள் எண்ணப்பட்டதில், ஆளும் சாய்னூரி கட்சி வெற்றி பெற்று ஆட்சியைத் தக்க வைத்துக் கொண்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 300 இடங்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் ஆளும்கட்சிக்கு 152 இடங்கள் கிடைத்துள்ளன.



தேர்தல் வெற்றி குறித்து அதிபர் லீ மிங்க் பக் மகிழ்ச்சி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் விடுத்துள்ள அறிக்கையில், மக்கள் புத்திசாலித்தனமான தெரிவை மேற்கொண்டுள்ளனர். நாட்டின் முக்கிய விவகாரங்களில் அரசு சிறப்பாக செயற்படும். சாதாரண மக்களும் நன்றாக வாழ வகை செய்யப் படும் எனக் கூறியுள்ளார்.

## உலகச் செய்திகள்

# 60 அகதிகளுடன் சென்ற படகைக் காணவில்லை

சுமார் 60அகதிகளுடன் புறப் பட்ட படகு ஒன்று காணாமல் போயுள்ளதாகவும், அப்படகைக் தேடி கண்டுபிடிக்கும் முயற்சியில் மீட்பு பணிக்குழு ஈடுபட்டிருப்பதாகவும் இந்தோனேசிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தோனேசியாவின் தெற்குத தீவான சும்பாவா என்ற இடத்திற்கு அருகிலேயே இப்படகு காணாமல் போயுள்ளது. அவுஸ்ரேலிய கடல்பாதுகாப்பு அதிகாரிகளிடமிருந்து இப்படகில் சென்ற அகதிகள் தொடர்பான துயரமான சமிக்கை கிடைத்தாக இந்தோனேசிய பாது காப்பு தரப்பினர் தெரிவித்துள்ள னர்.

அவுஸ்ரேலியாவுக்கு செல்லும் வழியிலேயே இப்படகு காணாமல் போயிருப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

# பனிச்சரிவில் புதைந்த வீரர்களை மீட்பதற்கு 130 அடி சுரங்கம்

இந்தியா - பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் உள்ள சியான்சின் பனிமலைப் பகுதியிலுள்ள பனிச்சரிவில் 138 பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் உயிருடன் புதைந்து விட்டனர்.

இவர்களை மீட்பதற்காக 130 அடி நீளத்துக்கு சுரங்கம் தோண்டும் பணி நடைபெற்று வருகிறது. பாகிஸ்தானின் சியாச்சின் பனிமலைப் பகுதி காஷ்மீர் மாநிலத்தை ஒட்டிய இந்தியா - பாகிஸ்தான் எல்லையில் அமைந்துள்ளது.

இப்பகுதியில் கியாரி என்ற இடத்தில் அந் நாட்டு இராணுவ, முகாம் உள்ளது. இங்கு கடந்த சனிக்கிழமையன்று திடீரென பனிச்சரிவு ஏற்பட்டதில் இராணுவ முகாம் புதைந்தது. இதில் 127 வீரர்கள் உட்பட 138 பேர் உயிருடன் புதைந்து போயுள்ளனர்.

பாரிய இயந்திரங்கள், மோப்ப நாய்கள் மற்றும் ஹெலிகொப்டர் உதவியுடன் கடந்த 6 நாட்களாக மீட்புப் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

எனினும் இதுவரை ஒருவரையும் மீக்க முடியவில்லை. இந்நிலையில் வீரர்களை மீட்பதற்காக 130 அடி நீளம் மற்றும் 3 மீற்றர் விட்டம் கொண்ட சுரங்கம் தோண்டும் பணி வேகமாக நடை பெற்று வருவதாக பாகிஸ்தான் இராணுவ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.6 இடங்களைக் குறிவைத்து தேடுதல் பணி முடுக்கி விடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித் தார். கடும் பனிப்பொழிவு மற்றும் மோசமான வானிலை காரணமாக மீட்புப் பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.











# நந்தன வருட இராசி பலன்கள்

## விருச்சிகம்





விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை வரை.

(பெயரின் முதல் எழுத்துக்கள்: தோ, ந, நி, நே, நோ, ய, யி, யு உள்ளவர்களுக்கும்)

**ரிஷப குருவின் பார்வையினால் நினைத்தது எல்லாம் நிறைவேறும்!**

பார்த்தவர்கள் அனைவரும் பாராட்டும் விதத்தில், வார்த்தைகளை வீசி, வருபவர்களை எல்லாம் வசமாக்கும் விருச்சிக ராசி நேயர்களே!

'கர' வருடம் முடிந்து 'நந்தன' ஆண்டு தொடங்குகிறது. உங்கள் சிந்தனைகள் அனைத்தும் செயலாகும் விதத்தில் வருடத் தொடக்கமே வசந்தமாக இருக்கிறது. ஒன்பதுக்கு அதிபதி சந்திரன் 2இல் உலா வர, அதைத் தன பஞ்சமாதிபதி குரு பார்ப்பதால் குருச்சந்திர யோகம் செயற்பட்டு ஆண்டு தொடங்குகிறது. எனவே, பணம் பல வழிகளிலும் வந்து பையை நிரப்பும்.

வருடத் தொடக்கத்தில் லாப ஸ்தானத்தில் ராசிநாதன் செவ்வாய், சப்தம ஸ்தானத்தில் சுக்ரன், இப்படி அறபுதமான கிரக அமைப்புகளின் ஆதிக்கம் இருப்பதால் வாகன யோகம் முதல் வளம் தரும் யோகம் வரை அனைத்தும் கிட்டும். தொழிலில் லாபம குவியும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு உன்னத முன்னேற்றமும், அதிகாரிகளால் அனுகூலமும் கிடைக்கும். ஒரு சிலர் உத்தியோகத்தில் இருந்தபடியே மனைவி, மக்கள் பெயரில் தொழில் தொடங்கும் வாய்ப்புகளும் உருவாகும்.

புகழ், கீர்த்தி, செல்வாக்கு, பட்டம், பதவி ஆகியவை தானாகவே வந்து சேரும். சனி, செவ்வாய் சேர்க்கை காலத்தில் மட்டும் விழிப்புணர்ச்சியோடு செயற்படுவது நல்லது.

உங்கள் சுய ஜாதகத்தில் பாக்யாதிபதியின் பாதசார பலம் அறிந்து, நவாம்ச நிலையும் அறிந்து யோக பலம் பெற்ற நாளில் சிறப்பு வழிபாடுகளை மேற்கொண்டால் வளர்ச்சி மீது வளர்ச்சி ஏற்படும்.

உங்களுக்கு இந்த நந்தன புத்தாண்டு எப்படியிருக்கும் என்பதைப் பற்றி பார்ப்போம்.

**ஆண்டின் தொடக்கம் முதல் வைகாசி 3 வரை.**

ஆண்டின் தொடக்கத்தில் உங்கள் ராசிநாதன் செவ்வாய் செயல் ஸ்தானத்தில் சஞ்சரிக்கிறார். எனவே, எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும். இல்லம் தேடி இனிய செய்தி வந்து கொண்டேயிருக்கும். நல்லவர்களின் தொடர்பால் நலம் காண்பீர்கள்.

ஏழரைச் சனி மாறி, லாப ஸ்தானம் பலப்படுகிறது. எனவே, பொருளாதார நிலை உயரும். புகழ் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து, புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்திட வைப்பார்கள்.

**தேவைகளைப் பூர்த்தி செய்யும் குருப்பெயர்ச்சி**

நவக்கிரகங்களில் 'சுபகிரகம்' என்று வர்ணிக்கப்படுபவர் குரு பகவான். உங்கள் ராசியைப் பொறுத்தவரை அவர் தனாதிபதியாகவும், பஞ்சமாதிபதியாகவும் விளங்குகிறார். அவர் உங்கள் ராசியை நேர்பார்வையாகப் பார்க்கும்பொழுது, நிகழ்காலத் தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள்.

இமயம் போல் புகழ் பெறவும், இதயம் மகிழும் விதம் வாழ்க்கை நடத்தவும், வருமானத்தை குவிக்கவும், வளர்ச்சிப் பாதையில் அடியெடுத்து வைக்கவும் ஏழில் சஞ்சரிக்கும் குருபகவான் இனிய வாய்ப்புகளை வழங்கப் போகிறார். குடும்ப ஒற்றுமை கூடும். எதிரிகள் மனம் மாறி உங்கள் இனிய பணிக்கு ஒத்துழைப்புச் செய்வர்.

உறவினர்களின் ஆதரவோடு உயர்ந்த நிலையை அடையப்போகிறீர்கள். பூர்வீக சொத்து தகராறுகள் அகலும். குருவின் பார்வை உங்கள் ராசியில் பதிவதோடு, 3, 11 ஆகிய இடங்களிலும் பதிவாகிறது. குருவின் பார்வை 1, 3, 11 ஆகிய இடங்களில் பதியும் பொழுது, தேக ஆரோக்கியம் சீராகும்.

வழக்குகளில் வெற்றி கிட்டும். வாரிசுகள் பிறக்கவில்லையே என்ற கவலை அகலும். உடன்பிறப்புகள் உதவிக்கரம் நீட்டுவர். உள்ளம் மகிழும் சம்பவங்கள் இல்லத்தில் நடைபெறும். லாப ஸ்தானம் பலப்படுவதால் தொழிலில் எதிர்பார்த்ததைக் காட்டிலும் லாபம் இருமடங்காக வந்து சேரும். பூமி விற்பனையால் ஆதாயம் கிட்டும். சாமி துணையோடு சகல காரியங்களிலும் வெற்றி பெறுவீர்கள்.

இக்காலத்தில் குரு கவசம் பாடி, குரு வழிபாடு செய்வதோடு, சனிக்கவசம் பாடி லாப ஸ்தான சனியையும் பலப்படுத்தும் விதத்தில் சனீஸ்வர வழிபாட்டையும் மேற்கொண்டால், சகல யோகங்களும் வந்து சேரும். அந்நிய தேச வாய்ப்புகளும் எண்ணியபடியே உருவாகும்.

**செவ்வாய், சனி சேர்க்கை காலம்!**

ஆனி 9ஆம் திகதி முதல் ஆடி 29ஆம் திகதி வரை உங்கள் ராசிக்கு 11ஆம் இடத்தில் செவ்வாயும், சனியும் ஒன்று கூடுகிறார்கள். ராசிநாதனும், சகாய ஸ்தானாதிபதியும் லாப ஸ்தானத்தில் ஒன்று சேருவதால், வரவேண்டிய பாக்கிகள் வசூலாகும். வங்கிச் சேமிப்பு உயரும். அலைபாயும் மனதிற்கு அமைதி கிடைக்கும் விதத்தில் உல்லாசப் பயணங்களை மேற்கொள்வீர்கள். ஊர்மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும். குடும்பச் செலவு கூடும் இந்த நேரத்தில் அன்ன தானத்திற்கும், ஆன்மீகப் பணிக்கும் செலவிடுவது நல்லது.

**தொடர்புகளை பலப்படுத்துமா? துலாம் ராசிச் சனி!**

ஆவணி 27ஆம் திகதி உங்கள் ராசிக்கு 12ஆம் இடத்தில் சனி உச்சம் பெறப் போகிறார். எனவே, வரவைக் காட்டி லும், செலவு கூடும். வருமானம் அதி கரிக்க என்ன வழி என்று யோசிப் பீர்கள்.

பிள்ளைகளின் கல்யாண கனவுகளை நனவாக்கவும், பெரிய தொழில்கள் செய்ய அரசு வழியில் எதிர்பார்த்த கடனுதவி கிடைக்கவும், அந்த உச்ச சனி வழிவகுத்துக் கொடுக்கும். நீண்டதூரப் பயணங்களுக்கு ஏற்பாடு செய்து, நீடித்த நாட்கள் ஆகியதே என்று கவலைப்பட்டவர்களுக்கு கடல் பயணவாய்ப்புகள் கைகூடும்.

**வக்ர குரு கொடுக்கும் பலன் என்ன?**

புரட்டாசி 26ஆம் திகதி முதல் தை 24ஆம் திகதி வரை ரிஷபத்தில் சஞ்சரிக்கும் குரு வக்ரம் பெறப்போகிறார். உங்கள் ராசியைப் பொறுத்தவரை 2, 5இற்கு அதிபதியான குரு பகவான் வக்ரம் பெறும் பொழுது, தொழிலில் கூடுதல் விழிப்புணர்ச்சி காட்டுவது நல்லது. தொழிலில் உள்ள கூட்டாளிகளிடம் பக்குவமாக நடந்து கொள்ளுங்கள்.

கோபம், படபடப்பு ஆகியவற்றை குறைத்துக் கொண்டு அன்பு மேலோங்கி மற்றவர்களோடு பேசுவதன் மூலம் உங்களுக்கு ஆதாயம் கிடைக்கும். பிள்ளைகள் வளர்ப்பில் கொஞ்சம் கவனம் தேவை. அவர்கள் உங்கள் சொற்படி கேட்டு நடக்கும் விதத்தில், அறிவுரை கூறுவது நல்லது. குடும்ப ரகசியங்களை வெளியில் சொல்ல வேண்டாம்.

**பாம்புக் கிரகப் பெயர்ச்சி பக்கபலமாக இருக்குமா?**

கார்த்திகை 17ஆம் திகதி துலாம் ராசியில் ராகுவும், மேஷ ராசியில் கேதுவும் சஞ்சரிக்கப் போகிறார்கள். உங்கள் ராசியைப் பொறுத்தவரை பனிரெண்டாமிடத்து ராகுவும், ஆறாமிடத்தில் சஞ்சரிக்கும் கேதுவும் மிகுந்த நன்மைகளை வழங்கப் போகிறார்கள்.

பாம்பு கிரகங்கள் மறைவிடத்தில் சஞ்சரிக்கும் பொழுது, நிறைவான பலன்களை வழங்கும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும்.

ஆறில் கேது சஞ்சரிப்பதால், உத்தியோகத்தில் இருப்பவர்கள் வி.ஆர்.எஸ். பெற்றுக் கொண்டு, விரும்பிய தொழிலைச் செய்ய முன் வருவர். கூட்டாளிகள் தானாகவே வந்திணைவர். கடன சுமை குறையும். அண்டை, அயலாருடன் ஏற்பட்ட பிரச்சினைகள், நல்ல முடிவிற்கு வரும்.

இக்காலத்தில் சர்ப்ப சாந்திகளை முறையாகச் செய்து சந்தோஷங்களை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

**வக்ர சனியால் வளர்ச்சி ஏற்படுமா?**

சித்திரை 1ஆம் திகதி முதல் ஆணி 6ஆம் திகதி வரையிலும், பிறகு மாசி 4ஆம் திகதி முதல் பங்குனி 31ஆம் திகதி வரையிலும் சனி வக்ர இயக்கத்தில் இருக்கிறார். உங்கள் ராசி அடிப்படையில் 3, 4இற்கு அதிபதியாக விளங்குகிறார். எனவே, அதன் வக்ரம் நன்மையச் செய்யும் என்றே சொல்லலாம். மூன்றுக்கு அதிபதி வக்ரம் பெறும பொழுது, முயற்சிகளில் வெற்றி கிடைக்கும். முடிவு எடுத்த சில காரியங்களில் மாற்றம் செய்வீர்கள். ஆரோககியத்தில் கொஞ்சம் அக்கறை செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும் ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவது நல்லது.

நான்காமிடத்திற்கு அதிபதியாகவும் சனி விளங்குவதால், தாய்வழி உறவினர்களை அனுசரித்து செல்வது தகுந்த பலனைக் கொடுக்கும். வீடு கட்டும் முயற்சி அல்லது பழுது பார்க்கும் முயற்சிக்காக செலவிடுவீர்கள். ஒரு சொத்தை விற்கும் பொழுது, மற்றொரு சொத்தை உடனடியாக வாங்கி விடுவதுதான் நல்லது.

செவ்வாய்க்கிழமை தோறும் அருகில் உள்ள ஆலயத்திற குச் சென்று, முருகப் பெருமானை வழிபட்டு வருவது நல்லது.

**மங்கையர்களுக்கான மகத்தான பலன்கள்!**

நந்தன வருடம் விருச்சிக ராசியில் பிறந்த பெண்களுக்கு, தனவரவு தாராளமாக வந்து சேரும். பணப்புழக்கம் அதிகரிப்பதால், ஆபரணம் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். முன்பு உங்கள் பெயரில் வாங்கிய இடங்களில், இப்பொழுது கடைகளும், காம்பளக்ஸ்களும் கட்டி வாடகைக்கு விடலாமா? என்று சிந்திப்பீர்கள். குருப் பெயர்ச்சிக்கு பின்னால், குடும்பத்தில் சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவிற்கு வரும். பெண் குழந்தைகளின் சுபச் சடங்குகள் முதல் பெற்றோர்களின் மணிவிழாக்கள் வரை நடத்திப் பார்க்க முன்வருவீர்கள். சனி, செவ்வாய் இணையும் நேரத்தில் மட்டும் குடும்பச் சுமை கூடும். ராகு, கேது பெயர்ச்சிக்கு பின்னால், நல்ல வாய்ப்புகளும், அரசியலில் ஈடுபட்டிருப்பவரகளுக்கு புதிய பொறுப்புகளும் வந்துசேரும். சுய ஜாதக ரீதியாக தெசாபுததிக் கேற்ற தெய்வ வழிபாடுகளை மேற்கொள்வது நல்லது.

(தொடரும்...)

---

## கேள்விகள்...

சுனாமி அலைகளாற் பாதிக்கப்பட்ட மக்கள் அந்தக் கணத்தில் கடலைத் திட்டித் தீர்த்தார்கள். ஆனால், சற்றுக் காலத்துக்குப் பிறகு அவர்கள் கடலின் மடியில் மீண்டும் தவழத் தொடங்கி விட்டனர். கடல் மீண்டும் அவர்களுக்கு வரமளிக்கும் - அரவணைக்கும் தாயாகிவிட்டது. இனிய தோழனாகிவிட்டது.

ஆனால் யுத்தகாலப் பாதிப்புகளும் அவை உருவாக்குகின்ற உள நெருக்கடிகளும் மிகப் பயங்கரமானவை. யுத்தம் அரசியற் காரணங்களினால் ஏற்படுவது என்பதால், அந்த அரசியற் காரணிகளின் காயங்கள் ஆறாத நிலையிலேயே இருக்கும். இந்த அரசியற் காரணங்கள் மக்களிடையே கொந்தளிப்பான மனநிலையை ஏற்கனவே உருவாக்கி வைத்திருக்கின்றன. யுத்தத்தில் இது இன்னும் அதிகமாக வளர்ந்திருக்கிறது. யுத்தத்தில் மக்களின் குரல் மேலெழுவதற்கு வாய்ப்புகள் குறைந திருப்பதால், இது உள்ளே அடங்கி, உள்ளே கொதித்துக் கொண்டிருக்கிறது.

யுத்தத்திற்குப் பின்னரான சூழலில், ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டிருக்கும் சூழலில் பொத்துக்கொண்டு அவை மேற்கிளம்புகின்றன. அதுவரையிலும் மௌனமாக இருந்த சனங்கள் யுத்தத்துக்குப் பிறகு பேசத் தொடங்குகிறார்கள். அதுவரை பேசாதிருந்த, பேசுவதற்கு அனுமதிக்காதிருந்த எல்லாவற்றையும் இந்தச் சூழலிற் பேசத் துடிக்கிறார்கள். அதுவரையில் கேட்க முடியாதிருந்த கேள்விகளையெல்லாம் கேட்கத் தவிக்கிறார்கள். கேள்விகளைக் கேட்பதற்கான ஒரு தார்மீக நிலையும் யுத்தத்திற்குப் பின்னர் அவர்களுக்குக் கிடைத்து விடுகிறது. இதற்குக் காரணம், யுத்தத்தினால் ஏற்பட்ட பாதிப்புகளும் அழிவுகளும். இந்த அழிவுகளும் இழப்புகளும் பாதிக்கப்பட்ட சனங்களைக் குறித்த ஒரு அனுதாபத்தை வெளியுலகில் உருவாக்குகிறது. ஆகவே அவர்கள் அந்த அனுதாப அலை உருவாக்குகின்ற ஆதரவு அலையின் துணையைக் கொண்டு தங்களின் கேள்விகளை இன்னும் அழுத்தமாக முன்வைக கிறார்கள்.

அத்துடன், யுத்தகாலத்தில் மட்டுமன்றி, யுத்தத்துக்குப் பின்னரான சூழலை எதிர்கொள்வதிலும் மக்கள் பெரிதும் சிரமமடைகிறார்கள். யுத்தத்தில் எல்லாவற்றையும் இழந்திருக்கும் மக்கள் வாழ்வதற்கு, வாழ்க்கையை எதிர்கொளவதற்கு மிகமிகச் சிரமப்படுவது இந்தக் கழிவிரக்கத்தைப் பிறரிடம் இரண்டு மடங்காக ஏற்படுத்துகிறது. ஏனெனில், அவர்கள் எதிர்ப்பாயுதங்கள் எதுவுமில்லாத பலியாடுகள். எனவே இந்தக் கழிவிரக்கம் பிறரைக் குற்றவுணர்ச்சிக்குள்ளாக்குகிறது. வெற்றி தோல்விகளுக்கு அப்பால் இந்தக் கழிவிரக்கம் குற்றவுணர்ச்சியைக் கிளப்புகிறது.

இந்தக் குற்றவுணர்ச்சி மக்களைக் குறித்து விசுவாசமாகச் சிந்திப்போருக்கு பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும். இதில் அரசும் அடக்கம். மனிதாபிமானப் பணியாளர்களும் அடக்கம். மக்களுக்காகக் குரல் கொடுக்கும் அனைவரும் சேர்த்தி.

# ஆனையிறவில் மீள் குடியமர்வு கடுகதி வேகத்தில் நடவடிக்கை

கிளிநொச்சி ஆனையிறவுப் பகுதியில் மக்களை மீள்குடியமர்த்துவது தொடர்பாக நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகக் கண்டாவளைப் பிரதேச செயலர் அறிவித்துள்ளார்.

அண்மையில் நடைபெற்ற கண்டாவளைப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் இது குறித்து விரிவாக கலந்துரையாடப்பட்டது.

கடந்த 1990 ஆம் ஆண்டு முதல் ஆனையிறவுப் பிரதேசத்தில் 450 மக்கள் குடியேறி ஆனையிறவு உப்பு உற்பத்திச் சாலையினூடாகத் தொழில் வாய்ப்பைப பெற்று வாழ்ந்து வந்தனர்.

இதன் பின்னர் ஏற்பட்ட யுத்த அனர்த்தங்களின்னால் இப்பிரதேசத்திலுள்ள மக்கள் இடம்பெயர்ந்து வேறு இடங்களுக்குச் சென்று வாழ்ந்து வருகின்றனர்.

தற்போது ஆனையிறவில் உப்பு உற்பத்தி மீள ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் இப்பிரதேசத்திலுள்ள மக்களை மீள் குடியமர்த்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் முதற்கட்டமாக இப்பிரதேசத்திலுள்ள மக்கள் பதிவுகளைக் கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவில் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(கே)

# சேவைநலன் பாராட்டு விழா

(கிளிநொச்சி)

வலிகாமம் கல்வி வலயத்தில் சேவையாற்றி ஓய்வுபெற்றுச் சென்றுள்ள உத்தியோகத்தர்களிற்கான சேவை நலன் பாராட்டுவிழா நடைபெறவுள்ளது. இவ்விழா எதிர்வரும் 18 ஆம் திகதி புதன்கிழமை மாலை 12.00 மணிக்கு வலிகாமம் கல்வி வலயத்திலுள்ள வடமாகாணக் கல்வித்திணைக்கள கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் கல்வி வலயத்தில் முதலாம் வகுப்பு முகாமைத்துவ உதவியாளராகவும், நிதி உதவியாளராகவும் எட்டு வருடங்கள் சேவையாற்றியிருந்த திருமதி சந்திரவதனா ஸ்ரீ கந்தவேலுக்கும், கணிதபாட உதவிக் கல்விப் பணிப்பாளராக 12 வருடங்கள் சேவையாற்றியிருந்த சி.சுகுமாரனுக்கும், பிரதிக் கல்விப் பணிப்பாளராக (அபிவிருத்திக்கு) பன்னிரண்டு வருடங்கள் சேவையாற்றியிருந்த திருமதி சறோஜினி தேவி நாகராசாவுக்கும் உடுவில் கோட்டக்கல்விப் பணிப்பாளராக எட்டு வருடங்கள் சேவையாற்றி ஓய்வுபெற்றுள்ள செல்லத்துரை குபேரநாதனுக்கும், உடற்கல்வி ஆசிரியை ஆலோசகராக நான்கு வருடங்கள் சேவையாற்றியிருந்த கந்தையா சிவராசாவுக்கும் சேவை நயப்பும், பாராட்டு விழாவும் நடைபெறவுள்ளன. இவர்கள் மாலை அணிவித்து, நினைவுச் சின்னம், வெகுமதிகள் வழங்கிக் கௌரவிக்கப படவுள்ளனர். (06)

# குறிகாட்டுவான் படகு சேவை புதிய நேர அட்டவணை அமுல்

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு - குறிகாட்டுவானுக்கு இடையிலான பயணிகள் படகுச் சேவை நேற்று வெள்ளிக் கிழமை முதல் புதிய நேர அட்டவணைப்படி நடத்தப்படவுள்ளது.

கடந்த 3 ஆம் திகதி இடம் பெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுத் தீர்மானத்திற்கு அமைவாகவே இந்த அட்டவணை நடைமுறைப்படுத்தப் படுகின்றது. நெடுந்தீவிலிருந்து புறப்படும் படகுகளும் நேரங்களும் நேரங்களும,

குமுதினிப் படகு - காலை 6.15 மணி, தனியார் படகு - காலை 7.00 மணி, வடதாரகை (II) பிற்பகல் 2.00 மணி, குமுதினி பிற்பகல் 3.30 மணி.

குறிகாட்டுவானிலிருந்து புறப்படும் படகுகளும் நேரமும்,

குமுதினி காலை - 8.30 மணி, வடதாரகை (II) பிற்பகல் 12.30 மணி, தனியார் படகு பிற்பகல் 4.00 மணி, குமுதினி பிற்பகல் 5.00 மணி.

ஞாயிற்றுக் கிழமைகளில் குமுதினி, வடதாரகை (II) ஆகிய சேவையில் ஈடுபடமாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகின்றது. (54)

# பன்னங்கண்டியில் தேர்த்திருவிழா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பன்னங்கண்டிப் பிள்ளையார் ஆலயத் தேர்த்திருவிழா நேற்றுக் காலை வெகு சிறப்பாக நடைபெற்றது. புதுவருடப் பிறப்பான நேற்றையதினம் இடம்பெற்ற இத் தேர்த்திருவிழாவில் நூற்றுக் கணக்கான மக்கள் கலந்துகொண்டு விநாயகரின் அருளைப் பெற்றனர். இதேவேளை இன்று காலை தீர்த்தத் திருவிழா நடைபெறவுள்ளது. (கே)

# டில்லியில் ரணில் மந்திராலோசனை



இந்திய அரசியல் தலைவர்கள [illegible]ன் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தொடர் ம[illegible]ராலோசனை மேற்கொண்டு வருகின்றார். இதன்போது இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் போது நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கைப் பரிந்துரைகள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டுமென ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார். இந்திய எதிர்க்கட்சித் தலைவர் எல்.கே. அத்வானியுடன் பேசிய பின்னர், ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு கூறினார். யுத்தத்தின்போது இடம்பெயர்ந்த மக்களை மீள்குடியேற்றுவது தொடர்பில் இருவருக்கும் இடையில் பேசப்பட்டுள்ளது. உள்நாட்டு ரீதியான தீர்வுத் திட்டமொன்றை எட்டுவதே இலங்கையின் நோக்கமாகும் என ரணில் விக்ரமசிங்க, இந்திய தலைவர்களிடம் தெரிவித்துள்ளார். முன்னாள் விடுதலைப் புலி உறுப்பினர்களுக்குப் புனர்வாழ்வளிப்பது தொடர்பில் வரும் மே மாதம் நாடாளுமன்றில் கேள்வி எழுப்பவுள்ளதாகவும் ரணில் விக்ரமசிங்க குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையர்களுக்கு புத்தாண்டு வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கக் கூடிய ஜனநாயக நாடாக இலங்கையை உருவாக்குவதற்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வாழும் இலங்கை மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமென, தமிழ் சிங்களப் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் அமெரிக்கா தெரிவித்துள்ளது.

தமிழ், சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு இலங்கை மக்களுக்கு அமெரிக்கா புத்தாண்டு வாழ்த்துச் செய்தி வெளியிட்டுள்ளது. அமெரிக்க அதிபர் பராக் ஒபாமாவின் சார்பில் அந்நாட்டு இராஜாங்கச் செயலாளர் ஹிலாரி கிளின்ரன் வாழ்த்துச் செய்தியை வெளியிட்டுள்ளார். அந்த வாழ்த்துச் செய்தியில்,

உலகம் முழுவதிலும் வாழும் இலங்கையர்களுக்கு புத்தாண்டு வாழ்த்துச் செய்தியை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைவதாகக் குறிப்பிட்டுள்ளார். புத்தாண்டு பண்டிகை உறவுகளை வலுப்படுத்திக் கொள்ள ஓர் வாய்ப்பாக அமைந்துள்ளது. நாட்டில் வாழும் மற்றும் வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்கள் ஒன்றிணைந்து சுபீட்சமானதும் ஜனநாயகமானதுமான இலங்கையை கட்டியெழுப்ப முயற்சி எடுக்க வேண்டும். கடந்த 150 ஆண்டுகளாக இலங்கையுடன் பேணி வந்த உறவுகளைப் போன்றே தொடர்ந்தும் சிறந்த உறவுகளைப் பேண அமெரிக்கா விரும்புகிறது. இலங்கையில் நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்திப் பணிகளுக்கு அமெரிக்கா முழுமையான ஆதரவளிக்கும். மனித உரிமை களுக்கு மதிப்பளிக்கக் கூடியதும் நெகிழ்வுத் தன்மையுடன் கூடியதுமான இலங்கையை உருவாக்க உள்நாட்டு வெளிநாட்டு வாழ் இலங்கையர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒத்துழைப்பு வழங்கவேண்டும். என ஹிலாரி கிளின்ரன் குறிப்பிட்டுள்ளார். இலங்கைத் தமிழர்களுக்கு முதல்தடவையாக அமெரிக்கா தெரிவித்திருக்கும் புத்தாண்டுச் செய்தி குறித்து அவதானிகள் ஆச்சரியம் தெரிவித்துள்ளனர்.

# களவாடினால் காத்திருக்கிறது சிறை

தொல்பொருட்களை களவாடும் நபர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கும் வகையில் சட்டத்தில் திருத்தம் கொண்டு வரப்படவுள்ளது. புதையல்கள், தொல்பொருட்கள் ஆகியவற்றைக் களவாடும் நபர்களுக்கு கண்டிப்பாக சிறைத் தண்டனை விதிக்கக் கூடிய வகையில் சட்டமொன்றை அமுல்படுத்தும் நோக்கில் நகல் சட்டமொன்று உருவாக்கப்பட்டு வருவதாக தொல்பொருள் ஆணையாளர் நாயகம் கலாநிதி செனரத் திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாளுக்கு நாள் தொல்பொருட்களை களவாடும் சம்பவங்கள் அதிகரித்துச் செல்வதாகவும், இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் புதிய சட்டம் உருவாக்கப்பட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார். தொல்பொருட்களை கொள்ளையிடும் நபர்களுக்கு 50,000 ரூபாவிற்கு குறையாத அபராதமும், ஓராண்டு சிறைத்தண்டனையும், ஒரே தடவையில் இரண்டு தண்டனையும் விதிக்க சட்டத்தில் இடமுள்ளது. இந்த ஆண்டில் இதுவரையில் தொல்பொருட்கள் கொள்ளையிடப்பட்ட 30 சம்பவங்கள் பதிவாகியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# பண்டிகைக்கால விபத்துக்கள் 228 பேர் காயம்

நேற்றுக் காலை 7 மணியுடன் முடிவடைந்த 24 மணித்தியாலங்களில திடீர் அனர்த்தங்களுக்கு இலக்கான 228 பேர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது தவிர சுமார் 100 பேர் வைத்தியசாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதாகவும் இவர்களில் 27 பேர் வேறு வைத்தியசாலைகளில் இருந்து மாற்றப்பட்டவர்கள் என தேசிய வைத்தியசாலையின் திடீர் விபத்துக்கள் பிரிவின் பணிப்பாளர் டாக்டர் பிரசாத் ஆரியவன்ச தெரிவிக்கிறார். குறிப்பாக வாகன விபத்துக்களுக்கு இலக்கான சுமார் 60 பேருக்கு வைத்தியசாலையில் சிகிச்சையளிக்கப்படுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார். 49 வீட்டு விபத்துக்களும் வேறு விபத்துக்கள் காரணமாக 36 பேரும் வன்முறைகள் மூலம் காயமடைந்த 11 பேரும் புத்தாண்டு விளையாட்டுக்கள் மூலம் காயமடைந்த ஐந்து பேரும் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்டுள்ளனர். பட்டாசு மற்றும் வான வேடிக்கை விபத்துக்களினால் காயமடைந்த எவரும் சிகிச்சைகளுக்காக சமுகமளிக்கவில்லை எனவும் திடீர் விபத்துக்கள் பிரிவின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். இம்முறை புத்தாண்டு சமயத்தில் வாண வேடிக்கை மற்றும் பட்டாசு உட்பட பல்வேறு அசம் பாவிதங்களால் காயமடைந்தவர்களின் எண்ணிக்கையில் பாரிய அதிகரிப்பு ஏற்படவில்லை என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்

# கிளிநொச்சியில் ஆயுதம் மீட்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் நூலகத்திற்கு அருகாமையில் ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. ரொக்கட் குண்டுகள் உள்ளிட்ட பல ஆயுதங்கள் நேற்று அதிகாலை மீட்கப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண குறிப்பிட்டுள்ளார். எதிர்கால பயன்பாட்டை நோக்காகக் கொர்ண்டு, புலிகள் இந்த ஆயுதங்களை பதுக்கி வைத்திருக்கக் கூடும் என தெரிவிக்கப்படுகிறது.

## இங்குவந்தால்...

தெரிவித்துள்ளார். புலம்பெயர் மக்களின் இனவாத பிரிவினர் கூறும் பொய்யான கூற்றுக்களைத் தவிர்த்து இலங்கையில் உண்மையில் என்ன நடக்கின்றது என்று இந்திய எம்.பி.க்களினால் புரிந்துகொள்ள இந்த விஜயம் சிறந்த சந்தர்ப்பமாக அமையும் என சமரசிங்க மேலும் தெரிவித்துள்ளார். ஐ.நா. சபையின் மனித உரிமைப் பேரவையில் இந்தியா எதிராக வாக்களித்தமைக்காக அதனுடனான உறவு எந்த வகையிலும் பாதிக்காதெனவும், அதனை நாம் மேலும் வலுப்படுத்த வேண்டுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## புங்குடுதீவில்...

ஆட்கள் எனவும் தெரியவருகின்றது. இவர்கள் தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிஸாரிடம் கேட்டபோது இவர்கள் இருவரிடமும் உரிய ஆவணங்கள் இருக்கின்றதா என ஆராயப்படுகின்றது எனவும் ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர். (85)

## சர்ச்சையில் சிக்கியுள்ள...

நாடு முதல்வர் ஜெயலலிதா, திடீரென அதை விலக்கிக் கொண்டுவிட்டார். இது இந்தக் குழுவில் இடம்பெற்றுள்ள பிற கட்சிகளுக்கு ஆச்சரியத்தையும், அதிர்ச்சியையும் ஏற்படுத்தியுள்ளது. இந்த விவகாரம் குறித்து, நேற்று மாலை புதுடில்லியில் தகவலறிந்த வட்டாரங்கள் கூறும்போது, இலங்கைக்கு குழு செல்லும் விடயத்தில் ஏகப்பட்ட குழப்பங்கள் நிலவுகின்றன. எனவே, கடைசி நேரத்தில் குழு பயணம் குறித்து மறுபரிசீலனை செய்யப்படுவதற்கான சூழ்நிலைகள் வலுவாகியுள்ளன என்பதை மறுப்பதற்கில்லை என்று தெரிவித்தன.

# ரயில் பயணங்களில் ஆபத்து அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

(கொழும்பு)

பண்டிகைக் காலத்தில் ரயிலில் பயணம் செய்வோர் இனந்தெரியாத நபர்களால் வழங்கப்படும் உணவுப் பண்டங்களை உட்கொள்ள வேண்டாமெனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. பயணிகளின் பாதுகாப்பை கருத்திற் கொண்டு இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக புகையிரதத் திணைக்களத்தின் திட்டப் பணிப்பாளர் விஜயசமரசிங்க தெரிவித்துள்ளார்.

பாதுகாப்புப் பணிகளுக்காக, மேலதிக ரயில் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். இனந்தெரியாத நபர்களுடன் போலியான நட்புறவை ஏற்படுத்தி அவர்களுக்கு உணவு, பானங்களை வழங்கி, மயக்கமடையச் செய்து ஆபரணங்கள், பணத்தை கொள்ளையிடும், திட்டமிட்ட கும்பல்கள் இயங்கி வருவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ரயிலில் பயணம் செய்யும்போது பயணிகள் மிகவும் நிதானமாக செயற்பட வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

# இருவேறு விபத்துக்களில் இருவர் பலியாகினர்

(கொழும்பு)

புசல்லாவ மற்றும் அம்பிலாங்கொட பிரதேசத்தில் இடம்பெற்ற இரண்டு வேறுபட்ட வாகன விபத்து சம்பவங்களில் இருவர் உயிரிழந்துள்ளனர். நுவரெலியா, கம்பொலை பிரதான வீதியில் முச்சக்கர வண்டி ஒன்றும், கப் வண்டி ஒன்றும் மோதுண்டதில் ஐவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இச்சம்பவத்தில் காயமடைந்த 11 வயதுச் சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான். கப் வாகன சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில் அவர் நாவலபிட்டி நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார்.

இதேவேளை கொழும்பிலிருந்து காலி நோக்கி துவிச்சக்கர வண்டியில் பயணித்த நபர் ஒருவர் விபத்துக்கு இலக்காகியுள்ளார்.

இச்சம்பவத்தில் 22 வயதுடைய நபர் ஒருவரே உயிரிழந்துள்ளார்.

# புத்தாண்டு தினத்தில் விளையாட்டில் குளறுபடி

## வற்றாப்பளையில் களேபரம்


(வற்றாப்பளை)

புதுவருடத்தை முன்னிட்டு வற்றாப்பளை விளையாட்டுக் கழகத்தால் ஏற்பாடு செய்த உழவு இயந்திரம் செலுத்தும் போட்டியில் குளறுபடி என போட்டியாளர்கள் சிலர் போட்டியிலிருந்து விலகியுள்ளனர்.

நேற்று வற்றாப்பளை 3 ஆம் கட்டைப் பகுதியில் 2.00 மணிக்கு ஆரம்பமான இந்த விளையாட்டுப் போட்டியில் மாட்டு வண்டிச் சவாரி, உழவு இயந்திரத்தை பின்புறமாகச் செலுத்துதல் போன்ற பல்வேறு விளையாட்டுக்கள் நடைபெற்றன.

இதில், உழவு இயந்திரத்தை பின்புறமாகச் செலுத்தும் போட்டியில் 20 உழவு இயந்திரங்கள் பங்குபற்றின. இந்தப் போட்டியில் சிலாவத்தையைச் சேர்ந்த எமிலாஸ் ராஜா முதலாவதாக வந்துள்ளார். ஆனால் போட்டியை நடத்தியவர்கள் குறித்த வெற்றியை பதிவு செய்ய மறுத்துள்ளனர்.

இதனால் ஏற்பட்ட பிரச்சினையில் விளையாட்டுத் திடலில் பெரும் களேபரம் ஏற்பட்டது. பொலிஸாரின் தலையீட்டினால் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாகத் தெரிய வருகின்றது.




ஆனாலும், இப்போட்டியை ஏற்பாடு செய்த விளையாட்டுக் கழகத்தினர் நடுநிலையாகச் செயற்படவில்லை என அங்கு கலந்துகொண்ட பெருமளவான மக்கள் தெரிவித்தனர்.

# முகமாலை இத்தாவிலில் விரைவில் மீள்குடியேற்றம்

கிளிநொச்சி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தின் கீழ் முகமாலை, இத்தாவில் பகுதியில் விரைவில் மீள்குடியேற்றம் செய்யப்படவுள்ளதாக பிரதேச செயலகம் தெரிவித்துள்ளதுடன், இதுவரை மீள்குடியேற்றத்திற்காக சுமார் 370குடும்பங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் இத்தாவில், முகமாலை, வேம்பொடுகேணி ஆகிய பகுதிகளில் மக்கள் இது வரை மீள்குடியேற்றம் செய்யப்படவில்லை. இந்த நிலையில் தற்போது மீள்குடியேற்றத்திற்கான பதிவுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இதற்கமைய இத்தாவில் பகுதியைச் சேர்ந்த 91குடும்பங்களும், முகமாலை பகுதியைச் சேர்ந்த 131குடும்பங்களும், வேம்பொடுகேணியைச் சேர்ந்த 148 குடும்பங் களும் தற்போது வரை மீள்குடியேற்றத்திற்கான பதிவுகளை மேற்கொண்டுள்ளன.

இதேவேளை, இந்தப் பகுதியைச் சேர்ந்த மக்கள் கடந்த 5வருடங்களுக்கும் மேலாக இடம்பெயர்ந்து உறவினர், நண்பர்கள் வீடுகளில் பல இடர்பாடுகளுக்கு மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்த விடயம் குறித்து கடந்த 10ஆம் திகதி பச்சிலைப்பள்ளி பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனையடுத்து இப்பிரதேசத்தில் கண்ணிவெடியகற்றல் துரிதப் படுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.



யாழ்ப்பாணம் அத்தியடிப் பிள்ளையார் கோவிலின் தேர்த்திரு விழா நேற்றுக்காலை 9.30 மணிக்கு இடம்பெற்றது. அடியார்கள் வடம் பிடிக்க எம்பெருமான் வீதியுலா வந்தருளும் காட்சியைக் காணலாம்.

# வவுனியா முகாம்களிலும் புத்தாண்டு தினக் கொண்டாட்டம்

(வவுனியா)

இன்னும் மீளக் குடியேற்றம் செய்யப்படாமல் உள்ள மக்கள் புதுவருடத்தை கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை செய்திருப்பதாக மீள்குடியேற்ற அமைச்சர் குணரத்தின வீரக்கோன் தெரிவித்துள்ளார். வவுனியாவிலுள்ள இரண்டுமுகாங்களில் தங்கியுள்ள மக்கள் அங்கு தமிழ் சிங்களப் புத்தாண்டை கொண்டாடும் விதமாக மீள்குடியேற்ற அமைச்சு பல்வேறு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. இதற்காக ஒரு இலட்சம் ரூபா நிதியை மீள்குடியேற்ற அமைச்சு ஒதுக்கியுள்ளதாகவும் அந்தப் பணத்தில் சுமார் ஏழாயிரம் மக்கள் பயன் பெறுவார்கள் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிதி தடுப்புமுகாங்களில் உள்ள மக்கள் புதுவருடத்தை முன்னிட்டு விளையாட்டு மற்றும் கலை நிகழ்ச்சிகளில் ஈடுபட வழங்கப்பட்டதாக வவுனியா அரச அதிபர் தெரிவித்தார். அத்துடன் புதுவருடத்தை முன்னிட்டு முகாமில் உள்ளவர்கள் உறவினர்களின் வீடுகளுக்குச் செல்லவும், வெளியே உள்ள உறவினர்கள் முகாங்களுக்குள் செல்லவும் அனுமதி வழங்கப்படும் என்றும் அரச அதிபர் குறிப்பிட்டார்.

# புதிய கட்சியின் முதலாவது மே தினம்



(கொழும்பு)

சர்வதேச தொழிலாளர் தினத்தை முன்னிட்டு முற்போக்கு சோசலிச கட்சி மே தினத்தை நடத்த தீர்மானித்துள்ளது. இந்த தகவலை முற்போக்கு சோசலிச கட்சியின் பிரசார செயலாளர் புபுது ஜயகொட வெளியிட்டுள்ளார். ஜே.வி.பி.யில் இருந்து பிரிந்து சென்று அரசியல் கட்சியாக பதிவு செய்து கொண்ட முற்போக்கு சோசலிச கட்சி நடாத்தும் முதலாவது மே தினம் கூட்டம் இதுவென அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தநிலையில் மே தினம் கூட்டம் கொழும்பில் நடத்தப்படவுள்ளதாக தெரிவித்த அவர் இடம் தொடர்பாக இதுவரை தீர்மானிக்கவில்லை என சுட்டிக்காட்டியுள்ளார். இது தொடர்பில் வெகுவிரைவில் அறிவிக்கப்படும் எனவும் முற்போக்கு சோசலிச கட்சியின் பிரசார செயலாளர் புபுது ஜயகொட தெரிவித்துள்ளார்.

# பத்து கடவுச்சீட்டுடன் கிளிநொச்சி இளைஞர் கைது

10 கடவுச் சீட்டுக்களுடன் சிலாபம் நகரில் வைத்து கிளிநொச்சியைச் சேர்ந்த 22 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். பொலிஸாருக்குக் கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய மேற்கொண்ட சுற்றிவளைப்பின்போதே சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். வெளிநாட்டு தொழில் வாய்ப்புக்களை பெற்றுத் தருவதாகக் கூறி பல்வேறு நபர்களிடம் இருந்து பெற்றுக்கொண்ட கடவுச் சீட்டுகளும் ஜேர்மன் நாட்டிற்கான ஐந்து விமான பயணச் சீட்டுக்களும் சந்தேகநபரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் குறிப்பிட்டார். இவர் நாட்டில் பல பாகங்களிலும் பண மோசடியில் ஈடுபட்டவர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# புதிய நாணயத்தாள்

பல மில்லியன் ரூபா நாணயம் புதிதாக அச்சிடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. அரசாங்கத்தின் செலவுகளை கட்டுப்படுத்தும் நோக்கில் இவ்வாறு புதிதாக நாணயத் தாள்கள் அச்சிடப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. இந்த ஆண்டின் முதல் இரண்டு வாரங்களில் நாணயத் தாள்கள் அச்சிடப்பட்டுள்ளதாகவும், வங்கிகள் கடன்களுக்கு மேலதிகமாக இந்த நாணயம் அச்சிடப்பட்டுள்ளது.

அதிகளவு நாணயத் தாள்கள் அச்சிடப்படுவதனால் நாட்டின் பணவீக்கம் மேலும் உயர்வடையக் கூடும் எனக் குறிப்பிடப்படுகிறது. பணவீக்கம் உயர்வினால் நாட்டின் பொருட்கள் சேவைகளுக்கான விலையில் மேலும் அதிகரிப்பு ஏற்படக் கூடுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. நாணயத்தாள் அச்சிட்டு தொடர்பில் அரசாங்கமோ அல்லது மத்திய வங்கியோ உத்தியோகபூர்வ அறிவிப்புக்கள் எதனையும் விடுக்கவில்லை எனவும் குறிப்பிடத்தக்கது.

# ஆயுர்வேத வைத்தியர்களின் சேவைக்காலம் நீடிப்பு

கிழக்கு மாகாணத்தில் ஒப்பந்த அடிப்படையில் சேவையாற்றி வருகின்ற ஆயுர்வேத வைத்தியர்களின் சேவையை நீடிப்பதற்கு மாகாண அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. மாகாணத்தில் ஆயுர்வேத வைத்தியசாலைகளில் இந்த வைத்தியர்களுக்கான ஆளனி வெற்றிடங்கள் காணப்படுகின்ற நிலையில் கிழக்கு மாகாண சுகாதார அமைச்சரினால் இதற்கான அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கிழக்கு மாகாண வைத்தியசாலைகளில் ஆயுர்வேத வைத்தியர்களுக்கு வெற்றிடம் நிலவுவதாக மாகாண சபை சுகாதார அமைச்சு சுட்டிக் காட்டியுள்ளது.

இந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவை நிலவுகின்ற துடன், ஏற்கனவே சேவையிலுள்ள ஒப்பந்த அடிப்படையிலான ஆயுர்வேத வைத்தியர்களின் சேவையை ஒருவருட காலத்தால் நீடிப்பதற்கு கிழக்கு மாகாண அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

# கல்விக்கான ஒதுக்கீடு இலங்கையில் குறைவு

(கொழும்பு)

நாட்டின் கல்வித் துறைக்காக மிகவும் சொற்பளவிலான நிதியே ஒதுக்கீடு செய்யப்படுகின்றது என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பீடு செய்யும் போது இலங்கையில் கல்வித் துறைக்கான நிதி ஒதுக்கீடு திருப்தி அடையக் கூடிய வகையில் அமையவில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் புத்திக்க பத்திரண தெரிவித்துள்ளார்.

கல்வித்துறையை மேம்படுத்த உரியளவில் ஒதுக்கீடு செய்யாவிட்டால் அது அபிவிருத்தியை பாதிக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார். அமெரிக்கா போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகள் கூட கல்வித் துறைக்காக மொத்த தேசிய உற்பத்தியில் 5 வீதத்தை கல்விக்காக ஒதுக்கீடு செய்வதாகத் தெரிவித்துள்ளார். எனினும், இலங்கையின் மொத்த தேசிய உற்பத்தியில் 1.8 வீதமே கல்விக்காக ஒதுக்கீடு செய்யப்படுகின்றது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2012 ஏப்ரல் 14 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.